
கல்கி

ஜீட்டா...ஸ்லைடா...ஸ்மார்ட்டா...



ஜக்கி Exclusive!


LKI • 24.10.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



ஸ்பெஷல்



சரத் சொல்லும் ஆரூடம்!



சிரிப்பழகி



இது PRASHANTI -யின் ஸ்வர்ண தீபாவளி!!
சில்க் காட்டனில் சாதனை படைத்து வரும் பிரசாந்தி இப்போது ப்யூர் பட்டிலும் அறிமுகம். ஆம் ஹரிதம் எனும் புதிய சரிதம்... பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்தும் அழகிய பட்டில்.
பிரசாந்தியின் புதிய பாட்லி புடவைகள்... பல்லு, ப்ளீட்ஸ் மற்றும் பிளவுஸ் அழகிய மெரூனில், உடல் ஜக்கார்டு வொர்க்கில் மயக்கும் மஷ்ரூம் கலரில்... நாள் முழுதும் பார்த்தாலும் அலுக்காத அழகு!!
தீபாவளிக்
நாங்க
நவராத்திரி,
பர்ச்சேஸ்
கட்டியிருக்கும்
வேளையில்,
பிரசாந்தி
தீபாவளி ஸ்பெஷல் Offer!
ஸ்வர்ண வர்ஷிணி Offer!
+ 3% OFF!
Up to Nov. 15th
இது பிரசாந்தியின் ஃபேமஸ் பிரியம் கலெக்ஷனின் எம்பிராய்டரி புடவை... டபுள் ஷேட் லோட்டஸ் பிங்க் கலரில்... மாங்காய் டிசைனில் கட் வொர்க் எம்பிராய்டரி... என்ன வொண்டர்ஃபுல் காம்பினேஷன்?
இதுவும் பிரசாந்தியின் பிரியம் கலெக்ஷனின் பிளாக் பிரிண்டட் புடவைகள். இந்த ஃபெஸ்டிவல் சீசனுக்கு இது படு பாப்புலர்...
மேலும் விபரங்களுக்கு: சென்னை - 044-24991850 / 24997636;
பெங்களூர் - மல்லேஸ்வரம் 080-23341632, ஜெயநகர் 080-224495
சில்க்காட்டன் என்றாலே பிரசாந்தி | சென்னையில் வேறு எங்கும் கிளைகள் கிடையாது

கல்கி

24.10.2010







பக்கங்கள்



72



24

சரத் சொல்லும் ஆரூடம்!



92

கலாட்டா பிரமுகரைத் தோலுரிப்பேன்!

பயாஸ்கோப்

'''தொட்டுப் பார்' படத்தின் கதையில் பெரிய ஹீரோக்கள் நடிக்க விரும்பினார்கள். ஆனால், அவர்களின் தேதிகள் ஒத்துவராததால் புதுமுகத்தை வைத்தே படத்தை ஆரம்பித்து முடித்துவிட்டேன். இது ஆக்ஷன் படம்தான். ஆனால் இந்தப் படத்தின் மூலம் நான் தெரிந்துகொண்டது, நல்ல ஆக்ஷன் கதைக்கு ஹீரோ பிம்பம் தேவையில்லை என்பதுதான்'' என்கிறார் இதன் இயக்குநர் நந்து!



''சிலர் நடந்தால் அழகாக இருப்பார்கள்; சிலர் பேசினால்தான் அழகு; சிலரின் மௌனம் அத்துணை அழகாய் இருக்கும். ஆனால், ஜெனிலியா சிரித்தால் அழகோ அழகு. அதுவும் அவரது பச்சரிசி பல்லழகு அந்த அழகை கூடுதல் அழகாக்கி விடுகிறது.'' இப்படி அழகாய்ப் பேசியிருப்பவர் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் - 'உத்தமபுத்திரன்' இசை வெளியீட்டு விழாவில்...



பச்சரிசி பல்லழகி

"'ரத்த சரித்திரம்' படத்தில் சூர்யாவின் நடிப்பு 'எரிமலை' போல பவர்ஃபுல்லாக இருந்தது. சமீபகாலங்களில் எந்தக் கதாபாத் திரத்திலும் பொருந்திப் போகும் கலைஞன் சூர்யாதான். அவரது கண்களின் ஒளியிலேயே பாதிக் கதை கன்வே ஆயிடும். குறித்த நேரம் வரட்டும் சூர்யாவை இந்தியில் பெரிய பிஸினஸ் ஹீரோவாக்குவேன்" - இப்படி திருவாய் மலர்ந்திருப்பவர் பிரபல இந்தி இயக்குநர் ராம்கோபால் வர்மா.



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899
ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

● கு.ப.ரகுநாதன்,
பூவிருந்தவல்லி

? தி.மு.க. கவுன்சிலர் மகனின் அடாவடிச் செயலை (பஸ் டிரைவரைத் தாக்கியது) கண்டிக்காமல் எதிர்க்கட்சியினர் பிரச்னையை ஊதிப் பெரிதாக்கி விட்டனர் என்று தமிழக முதல்வர் குற்றம் சாட்டுகிறாரே. இச்செயல் அந்தக் குற்றவாளியின் செயலைவிடத் தீங்கானதல்லவா?

! நிச்சயமாக! முதல்வர் முதல் காரியமாகத் தவறு இழைத்தவரைக் கண்டித்திருந்தால், எதிர்க்கட்சியினரின் வாய் அடைக்கப்பட்டிருக்கும் என்பதுடன் கட்சிக்காரர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவும் இருந்திருக்கும். ஆனால், அதற்குத் தார்மிக பலம் வேண்டுமே!

● போழகு...

● தாமஸ் மனோகரன், புதுச்சேரி

? அயோத்தி தீர்ப்புக்கு ஆர்ப்பாட்டமோ கொண்டாட்டமோ இல்லாதது எதைக் காட்டுகிறது?

! 1.அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் நியாயத்தை மிகப்பெரும்பான்மை மக்கள் ஏற்கிறார்கள் என்பதை. 2. அன்றாட வாழ்வில் அயோத்தி போன்ற பிரச்னைகளைக் கடந்து அமைதியையே பெரும்பாலோர் விரும்புகின்றனர் என்பதை.



● எம்.காளிதாஸ், சிதம்பரம்

? "எனக்குக் கடவுள் போன்றவர் பால் தாக்கரே" என்று ரஜினி பேசியுள்ளாரே?

! "காசேதான் கடவுளப்பா; அந்தக் கடவுளுக்கும் அது தெரியுமப்பா!" என்ற பாட்டு உங்களுக்குத் தெரியாதப்பா? அதுதான் போகிறதென்றால், ஐஸ்வர்யா ராயின் குடும்பப் பின்னணி கூடவா தெரியாதா? அப்பப்பா!

● செய்யது புகாரி, அதிராம்பட்டினம்

? நடிகை சினேகாவுக்கு மீண்டும் ஆபாச எஸ்.எம்.எஸ்.வருகிறதாமே?

● ... தத்துவம்!



நீங்கள் கேட்டவை

தராசு

! சினேகா வாயைத் திறந்து சொல்லிவிட்டார். பலர் சொல்லாமல் இருக்கக் கூடும். கடுமையான சட்டங்களும் நெறிமுறைகளும் அவற்றை அமல்படுத்தும் உறுதியும்தான் இதைத் தடுக்க உதவும். தண்டனை கிடைக்கும் என்ற பயம் ஒன்றே ஆபாச எஸ்.எம்.எஸ்.களுக்கு முடிவு கட்டும். முன் அனுமதியின்றி விளம்பரங்கள் அனுப்புவதற்கும் தடைச் சட்டம் தேவை.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு ★

? இலங்கையில் பெரும்பாலான தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் பாதுகாப்பாக மறுகுடியமர்வு செய்யப்பட்டுவிட்டனர் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளதே. நம்புகிறீர்களா?

! நிச்சயமாக நம்பவில்லை; ஆனால், 'யாழ்ப்பாணப் பகுதியில் ஏராளமான சிங்களவருக்கு மறுகுடியமர்வு வசதி செய்து தரப்படுகிறது' என்ற செய்தியை முழுமையாக நம்புகிறேன். ராஜபக்சே தார்மிக உணர்வுடன் செயல்பட்டாலும், சிங்கள அதிகாரிகள் ஓரவஞ்சனையுடன்தான் நடந்து கொள்வார்கள். இந்திய அரசு விழிப்புணர்வுடனும் கண்டிப்புடனும் வற்புறுத்தாமல் விட்டால், ஈழத் தமிழருக்குப் பெரும் அநீதி இழைத்தவர்களாவார்கள்.

● ப.இராம் முருகன், சிவகங்கை

? ''கண்ணியம் கலந்து படைக்கப்பட்ட பேரழகி ஐஸ்வர்யா ராய்,'' என்கிறாரே வைரமுத்து...?

! தேன் கலந்து வைரமுத்து பேசும் தமிழ்.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

? ''என்னிடம் ஒரே ஒரு டி.வி. சேனலை மட்டும் கொடுத்துப் பாருங்கள்; மாத்திக்காட்டுகிறேன் ஆட்சியை!'' என டி.ராஜேந்தர் சவால் விடுகிறாரே?

! எதிர்க்கட்சி சேனல்களான ஜெயா டி.வி., கேப்டன் டி.வி., மக்கள் டி.வி. என்று பலவற்றால் முடியாததை டி.ஆர். எப்படிச் சாதிக்கப் போகிறார்? அவர் கேட்கிறபடி யாரும் ஒரு டி.வி. சேனலை அவருக்கு அள்ளிக் கொடுத்துவிடப் போவதில்லை என்கிற தைரியம்தான்!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? அயோத்தி தீர்ப்பின் மீது அப்பீல் செய்யாமல் இரு தரப்பினரும் நேரடியாகப் பேசினால், நிலையான தீர்வு உருவாகும் என்று ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறியுள்ளாரே?

! தமது கருத்தைத் தெரிவிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் இஸ்லாம் வாரியத் தலைவரை மடத்துக்கு வர வழைத்துப் பேச முற்பட்டிருக்கிறார். பேச்சுவார்த்தை





சேனல் கேட்கிறாரே டி.ஆர்?



★ தைரிய ஆசை!



* நீலமயிலும் நீலம்



* காசேதான்...



* ... கடவுளப்பா!

என்றால் ஒரு தரப்பு விட்டுக்கொடுக்க வேண்டும். இன்றைய சூழலில் இது புதிய சிக்கல்களை உருவாக்கக் கூடும். மக்கள் ஏற்றுள்ள தீர்ப்பை மேல் முறையீடு இன்றித் தலைவர்களும் ஏற்றுச் செயல்படுத்துவதே நல்லது. மதத் தலைவர்கள் விவாதங்களை நிறுத்திவிட்டு, கைகோக்க வேண்டிய நேரம் இது.

● **ஜி.மாரியப்பன், சின்னமனூர்**

? ''இந்தியாவைத் தாக்க நாங்கள்தான் பாக். தீவிரவாதிகளுக்குப் பயிற்சி கொடுத்தோம்,'' என்று முஷாரஃப் கூறியுள்ளது பற்றி...?

! இந்தியா பல காலமாகக் கூறிவரும் குற்றச்சாட்டை, இன்று பதவியில் இல்லாததாலும், வேறு நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளதாலும் தைரியமாக ஒப்புக் கொள்கிறார் முஷாரஃப். விளைவு: அவர் தலைக்குத் தீவிரவாதிகள் விலை நிர்ணயித்துள்ளனர்!

● **வி.ஆனந்தகிருஷ்ணன், சென்னை - 101**

? அரசியல் ராஜதந்திரம் என்றால் என்ன? அரசியல் வியாபாரம் என்றால் என்ன...?

! பிரிட்டனில் கன்ஸர்வேடிவ்களும் லிபரல் கட்சியினரும் மக்கள் நலன் கருதி கைகோத்து ஆட்சி அமைத்து இயங்கி வருவது ராஜதந்திரம். கர்நாடகத்தில் ஆயாராம்களும் கயாராம்களும் ஆட்சியைக் கலகலக்கச் செய்வது வியாபாரம்.

● **கே.எஸ்.குமார், விழுப்புரம்**

? கலைஞரின் குடும்பம் முன்னிறுத்தப்படுவது பற்றி தி.மு.க.வினரே கவலைப்படாதபோது, மற்றவர்களுக்கு என்ன கவலை?

! கவலை, தி.மு.க. குறித்தோ அல்லது கலைஞர் குடும்பம் பற்றியோ அல்ல. ஆரோக்கியமான ஜனநாயகம் இங்கு தழைக்க வேண்டுமே என்ற கவலைதான். தி.மு.க.வை மட்டும் இவ்விஷயத்தில் குறைகூற முடியாது. அநேகமாக எல்லாக் கட்சிகளிலுமே இதே நிலைமைதான்!

● **இ.டி.ஹேமமாலினி, சென்னை - 101**

? அண்மைக்காலத் திரைப்பாடல்களுள் உங்களைக் கவர்ந்த பாடல் எது?

! ஒன்றல்ல; சில: ''ஒரு வெட்கம் வருதே வருதே'' (பசங்க), 'ஒரு முறை இரு முறை' (களவாணி), 'விழியே விழியே பேசும் விழியே' (ஈரம்).

☐ **ரூ.150/ பரிசு பெறுபவர்:**
கு.ப.ரகுநாதன், பூவிருந்தவல்லி

* **ரூ. 75/ பரிசு பெறுபவர்:**
பவானி கிருஷ்ணா, பெங்களூரு

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், **KAGQA** என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.



தவில் சக்ரவர்த்தி அரித்வாரமங்கலம்

Prof. Dr. A.K. பழனிவேல்

(பத்மஸ்ரீ விருது பெற்றவர்)

SHS Advisory Group

விஜயதசமி

முதல்

புதுக்கோட்டை

பெங்களூர்

கும்பகோணம்

ஆகிய இடங்களில்

கிளைகள் ஆரம்பம்

VIDWAN

"வசதிக்கேற்ப நேரங்கள்" "தனி கவனம்"

மேதைகளிடம் கற்று கொள்ளுங்கள்

இசையும் நடனமும்



வாய்பாட்டு, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம், தவில்
கீபோர்டு, ட்ரம்ஸ், கிட்டார் & பரதநாட்டியம்

குறைந்த இடங்கள்

முந்துங்கள்

வித்வான் இசை, நடன பயிற்ச்சி மையம்

எஸ்.எச்.எஸ். அட்வைசரி குரூப் மற்றும் ப்ரியம் என்டர்டைனர்ஸின்

புதிய முயற்ச்சி இசை மற்றும் நடன நுணுக்கங்களில் பல சாதனைகள் புரிந்த மேதைகளின் மூலம் அனைத்துதரப்பட்ட மாணவர்களுக்கும் கற்றுதரப்படுகிறது.

பழைய எண்.6, புதிய எண் 13B, போஸ்டல் காலனி, 3வது தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 33.

தொலைபேசி எண் : 044-6515 7675 கைபேசி : 9840313106, 9677093332, 9488220919

e-mail : vidwan@priyamentertainer.com web : www.shsadvisorygroup.com www.priyamentertainer.com

அமெரிக்காவில் சத்குரு ஜக்கி வாசுதேவ் எடுத்த தியான வகுப்பில், ஒரு மாணவி அவரையே பார்த்துப் பார்த்துப் படம் வரைந்திருக்கிறார். அவர் வரைந்த ஓவியம் புதுமையாகத் தோன்றியிருக்கிறது. அவருக்கே புலப்படவில்லை. சத்குருவிடம் படத்தைக் காட்டியிருக்கிறார். அடடே... அந்த மாணவி மிகத் துல்லியமாக வரைந்திருந்தது ஈஷாவின் தியானலிங்கத்தைத்தான். இத்தனைக்கும் அந்த மாணவிக்கு தியானலிங்கத்தைப் பற்றி எதுவுமே தெரியாது.


கடல்களின் சங்கமம், நதிகளின் சங்கமம் என்பதுபோல சக்திகளின் சங்கமமாகத் திகழ்கிறது தியானலிங்கம்.

''கடந்த பத்து வருடங்களாக நான் தொடர்ந்து ஈஷா யோகா மையத்துக்கு வந்துகொண்டிருக்கிறேன். எப்படியும் வருடத்துக்கு ரெண்டு மூன்று முறை இங்கு வந்து செல்கிறேன். ஒவ்வொரு தடவையும் மனசு இலேசாகிச் சுமைகளற்றுப் போகிறேன்!'' என்கிறார் புனேயிலிருந்து வந்து செல்லும் ஸ்ரீவித்யா கிருஷ்ணன்.



சக்தீகளின்





எந்த நிமிடத்திலும் எழுந்து ஓடிட எத்தனிக்கும் நிலையில் கருமை நிற நந்தி, பதினைந்தடி உயரம், இருபது டன் எடை கொண்ட இரும்பு நந்தி. அதன் பெருத்த உருவத்தின் உள்ளே மணல், விபூதி, ஆமணக்கு எண்ணெய், மூலிகைகள் என சதவிகிதக் கலவை அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ளன. நந்தியைக் கடந்து வெளிப்பிரகாரத் தெற்கு மண்டபம் கடந்து மேற்குப் பகுதியில் நடந்தால், ஒரு மனிதனுக்குள் இருக்கும் மூன்று குணங்களைச் சித்திரிக்கும் வண்ணமாக, தியானலிங்கக் கூரையின் வெளிப் பகுதியில் திருமூர்த்திகளின் மூன்று முகங்கள். வலது பக்கம் தீவிரத் தன்மை கொண்ட ருத்ரா. இடதுபக்கம் குழந்தைத் தன்மை கொண்ட அரா. நடுவில் எப்போதும் ஆனந்தம் நிலைத்திருக்கும் சதாசிவா. இவற்றைக் கண்டுணர்ந்து, கடந்து செல்லுகையில், வடபுறம் வாய்த்திருப்பது ஆன்மிக வலிமைமிகு தீர்த்த குண்டம்.

தீர்த்த குண்டத்தில் மூழ்கி எழ ஆண்கள், பெண்கள் இரு பாலருக்கும் தனித் தனி நேரங்களும், நுழைவுப் பாதைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. காவியுடை தரித்து ஷவரில், உடல் நனைத்துக் கழுவி, தீர்த்த குண்ட நுழைவுப் பாதையில் சென்றால் தரை மட்டத்துக்குக் கீழே முப்பத்தைந்தடி ஆழத்தில் அமைந்துள்ளது தீர்த்த குண்



சங்கமம்!

டம். சத்குருவால் பிரதிஷ்டை செய்யப்பட்ட நீர்நிலை. காசி நதி நீர் குளிர்ச்சி இரண்டற அதனுள் கலந்திருப்பது வியத்தகு விந்தை. பிரம்மாண்டமான கிரானைட் கற்களைக் கொண்டு கட்டப்பட்டு, தாமிரத் தகடு பொருத்தப்பட்ட செவ்வக வடிவ தீர்த்த குண்டம். தளும்பும் குளிர் நீர் நிலை மத்தியில் ரச லிங்கம். கெட்டிப்படுத்தப்பட்ட பாதரசத்தால் ஆனது. குளிர் நீர் நிலையில் மூழ்கி எழுந்தபடி ரசலிங்கத்தினை இரு கரங்களால் தொட்டு உணர்ந்து ஆனந்திப்பது தனி சுகானுபவம்.

மீண்டும் தெற்கு வெளிப்பிரகார மண்டபம். மைய வாசலில் சர்வமதத் தூண். தியானலிங்கம் குறிப்பிட்ட மதத்தினை மட்டும் சார்ந்தது அல்ல. உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் உரியது. அனைவர்க்கும் உரியது என அனைவரையும் அழைத்து, 'உள்ளே சென்று வாருங்கள்' என ஆன்மநேய உத்தரவாதம் அளிக்கிறது சர்வமதத் தூண்.

உலக உருண்டையின் சரிபாதியினைத் தரையில் கவிழ்த்து வைத்தாற்போல தியானலிங்கக் கூடாரத்தின் கட்டமைப்பு, காண்போரை பிரமிக்க வைக்கும். எழுபத்தியாறு அடி விட்டம் கொண்ட அரைக் கோள வடிவ உள்ளரங்கின் கட்டமைப்பில் தூண்கள் எங்குமே இல்லை. மேற்கூரை உயரம் முப்பத்து மூன்றடி. இரும்பு, சிமெண்ட் பயன்படுத்தாத கட்டுமானம். செங்கல், மணல், சுண்ணாம்பு, கடுக்காய், மூலிகைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உள்ளரங்கின் மையப்பகுதியில் பிரம்மாண்ட தியானலிங்கம். அதன் அடிப் பாகத்தில் வீரியஸ்தானா எனச் சொல்லப்படும் ரசவாதத்தால் கெட்டிப்படுத்தப்பட்ட பாதரசம் வைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சபூத உடலின் ஏழு சக்திகளையும் முழுமையாகப் பூட்டி, பிராணப் பிரதிஷ்டை மூலமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது தியான லிங்கம். அதனெதிரே உள்ளரங்கில் ஏதேனும் ஓரிடத்தில் அமர்கிறோம். ஞானவெளியின் பேரமைதிக்குள் கரைகிறோம். தியான லிங்கக் கூடாரத்தில் நுழையும் முன் டன் கணக்கில் கனத்துப் போயிருந்த மனசு, இலேசாகிப் போகிறது. மிக மிக இலேசாகிப் போகிறது. மாபெரும் வெள்ளப் பெருக்கில், எவ்வித இரைச்சலும் இன்றி இயல்பாக, இழுத்துச் செல்லப்படும் தக்கை போல.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு


கால்நடையோடு 'கால்' நடை!


கண்ணைத் தொடச்சிக்கோ கண்ணு மகனே!



நரை பூத்த உயிர்க்கவிதை!

செல்லுலாய்டு கவிதைகள்!


மரங்கள் கொளுத்தும் மத்தாப்பு!








BLB
PLEDGED TO ETHICS

ஆவடி அருகில்
தனி வீடுகள்

CMDA அங்கீகரிக்கப்பட்ட மனைகளில்.

கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள் (முதல் நிலை)
அக்டோபர் 2010 இறுதியில் ஒப்படைப்பு

விலை ₹17 லட்சம்



BLB Estates ஸ்ரீ நரசிம்மா நகர் மனைப்பிரிவில் பட்ஜெட் வீடுகளை கட்டி வழங்குகிறது. இவ்விடத்திற்கு ஆவடி, பட்டாபிராம், பூந்தமல்லி மற்றும் திருநின்றவூர் வழியாகவும் செல்ல முடியும் என்பதால் இது ஒரு 4-வழி பாதையாகும்.

- சுற்றுச் சுவர் உள்ள வீடுகள் - கார் பார்க்கிங் வசதியுடன்
- 2 படுக்கை அறைகள், 1 ஹால், தரை மற்றும் முதல்தளம்
- 3 phase மின் இணைப்பு
- தனித்தன்மை வாய்ந்த வடிவமைப்பு

IDBI Home Finance மற்றும் Sundaram Home Finance மூலம் மிக அதிக கடனுதவி

800 - 3000 சதுர அடி வரை வீட்டுமனைகளும் கிடைக்கும்

— 2834 5104 (4 lines) —

BLB ESTATES (P) LTD
Website: www.blbestates.com
INVESTING IN VALUES

பளிச் பரிகாரம்





குரு, சனிப் பெயர்ச்சிகளுக்கு மட்டும் ஏன் வழிபாடு?



திலகவதி, திருவண்ணாமலை.

என் மகளுக்கு வயது 24. நல்ல வரன் ஒன்று அமைந்துள்ளது. இப்பொழுது திருமணம் செய்யலாமா? ஒற்றைப்படை வயதில் மட்டுமே திருமணம் செய்ய வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். திருமணத்தை இன்னும் ஒரு வருடத்துக்குத் தள்ளிப் போட வேண்டுமா?

ஒற்றைப்படை வயதில் திருமணம் செய்வது அவசியம் இல்லை. நல்ல வரன் வந்துவிட்டது என்றால் இப்பொழுதே திருமணம் செய்யலாம். ஒரு சிலருக்கு இரட்டைப்படை வயதிலும் குருபலன் வரும். உங்கள் மகள் திருமணத்தை விரைவில் நடத்துங்கள்.

ராம்பிரசாத், பெங்களூரு.

எனக்கு கேது தசை வரவிருக்கின்றது. அது மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சில ஜோதிடர்கள் கூறுகின்றனர். தங்கள் கருத்து என்ன?

கேது தசை நன்மை செய்யாது என்பது உண்மை. எந்தத் தசை வந்தாலும் கேது தசை வரக்கூடாது என்று ஒரு ஜோதிட பழமொழிகூட உண்டு. விநாயகரைத் தொடர்ந்து வழிபடுங்கள். கேது தசையின் தீய பலன்கள் விலகும். பிள்ளையார்பட்டி, கணபதி அக்ரஹாரம், திருநாரையூர், திருச்சி மலைக்கோட்டை, காணிப்பாக்கம்... போன்ற விநாயகர் தலங்களுக்குச் சென்று வாருங்கள். கணபதியின் அருள் கிடைத்தால் கேது ஞானத்தைக் கொடுக்கும்.

லஷ்மி ராமகப்பன், சென்னை -4.

பஞ்சதீபம் ஏற்றுதல் என்றால் என்ன; விளக்கம் தேவை?

இலுப்ப எண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், பசு நெய்... ஆகிய ஐந்தையும் சம அளவில் கலந்து தீபம் ஏற்றுவது பஞ்சதீபம். சிவன் கோயிலில் திங்கட்கிழமைகளில் மாலை நேரத்தில் பஞ்சதீபம் ஏற்றி பிரார்த்தனை செய்து கொண்டால் நினைத்தது நடக்கும்.

என்.சுந்தரேசன், மும்பை, பவாய்.

23.4.2009 அன்று பிறந்த எனது பேரனுக்குப் பிறவியிலேயே சில குறைபாடுகள் உள்ளன. அவை எப்பொழுது நீங்கும். பரிகாரங்கள் ஏதேனும் செய்ய வேண்டுமா?

உங்கள் குடும்பத்தில் பித்ரு தோஷம் உள்ளது. அதற்குப் பரிகாரமாக ராமேஸ்




ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்

வைணவரல்லாதோரும் படிக்கக்கூடிய எளிய நடையில் திருமால் பெருமை- திவ்ய தேச மகிமைபேசும் தெய்வீக இதழ்! 1995 முதல் வெளியிடப்படுகிறது ....

இரு ஆண்டுச் சந்தா ரூ 360 /- மட்டும் (24 இதழ்கள்)
சந்தா அனுப்பும் ஒவ்வொருவருக்கும்
₹ 150 மதிப்புள்ள புத்தகங்கள் முற்றிலும் இலவசம்

இத்தனையும் எங்கள் செலவில் அனுப்பி வைப்போம். M.O.அனுப்பலாம். செக்/ DD அனுப்புபவர்கள் கலெக்ஷன் சார்ஜ் ரூ 40/- சேர்த்து AALAYADHARISANAM, BHUVANAGIRI. என்கிற பெயருக்கு அனுப்பவும். தங்கள் முகவரியை செல் நம்பருடன் தெளிவாக எழுதவும்.

முகவரி :
ஆலயதரிசனம்,
66அ, கடலூர் மெயின் ரோடு,
புவனகிரி-608601.
CELL: 94434 39963,
Web: www.aalayadharisanam.com
mail : aalayadharisanam@rediffmail.com



வரத்தில் திலஹோமம் செய்ய வேண்டும். உங்கள் மகன், மருமகள், பேரக்குழந்தை ஆகியோர் உடன் வர வேண்டும் என்று அவசியம் இல்லை. நீங்கள் சென்று செய்யலாம். 24000 ஆவர்த்தி திலஹோமம் செய்யவும்.

டி.ஸ்ரீதரநாராயணன், சென்னை.

குருப்பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி, ராகு-கேது பெயர்ச்சி ஆகியவற்றுக்கு மட்டும் வெகு விமரிசையாகக் கோயில்களில் வழிபாடு செய்கிறோம். மற்ற கிரகங்களுக்கு ஏன் அதுபோல் ஒன்றும் செய்வதில்லை?

குரு ஒரு வருடத்துக்கு ஒரு முறை பெயர்ச்சியாகும், சனி இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை பெயர்ச்சியாகும். ராகு-கேது 18 மாதத்துக்கு ஒருமுறை பின்னோக்கி நகரும். மற்ற கிரகங்கள் மாதாமாதம் பெயர்ச்சியாகும். ஜோதிடத்தில் அனைத்துக் கிரகங்களுமே முக்கியம்தான். எனினும் குரு, சனி, ஆகிய இரு கிரகங்களின் நிலை நமது வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதால் அவை பெயர்ச்சி ஆகும்போது அதிகமாக இறை வழிபாடுகள் செய்கிறோம்.

ராமசுப்ரமணியம், தூத்துக்குடி.


வீட்டில் கணபதி ஹோமம், நவக்ரக ஹோமம் செய்ய விரும்புகிறோம். அதற்கு உகந்த நாள் எது?

வளர்பிறை சதுர்த்தி, தேய்பிறை அஷ்டமி பௌர்ணமி, உங்கள் ஜென்ம நட்சத்திரம் வருகின்ற நாள்... ஆகியவை விசேஷமானவை.

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.



கல்கி




2010 அக்டோபர் 24
விக்ருதி ஐப்பசி 7
மலர் : 69
இதழ் : 13


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

கர்நாடக கேலிக்கூத்து!

கட்சித்தாவல் தடைச்சட்டத்தைக் கேலிக்கூத்தாக்கியுள்ளது சமீபத்திய கர்நாடக நிகழ்வு. மக்களின் வோட்டுகளைப் பெற்று சட்டசபைக்கு வருவோர், தாங்கள் சார்ந்துள்ள கட்சியைக் கை விட்டு, ஆதாயம் தேடி வேறு கட்சிக்கு ஓடுவது; தாங்கள் சார்ந்துள்ள கட்சியிடம் நம்பிக்கை இழந்துவிட்டதாக வாக்களிப்பது போன்றவை வடிகட்டின துரோகம். இதனைத் தடுப்பதற்குத்தான் ஏற்படுத்தப்பட்டது கட்சித் தாவல் தடைச்சட்டம். ஆனால், கர்நாடகத்தில், அந்தச் சட்டத்தையே பலரும் பல்வேறு கண்ணோட்டத்தில் வளைக்க முயற்சி செய்துள்ளனர்.

எடியூரப்பா ஆதரவாளர்கள், அதிருப்தியாளர்களாக மாறியது, அவர்கள் எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்காததால். அந்தப் பதினாறு அதிருப்தியாளர்களையும் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்து முடியும்வரை பதவி பறிபோகாமல் தக்கவைத்துக்கொள்ள கர்நாடக ஆளுநர் முயன்று தோற்றது ஒரு சோக நகைச்சுவை நாடகம் (tragi-comedy) என்றால், வாக்கெடுப்புக்கு முன்னதாகவே அவர்களை, சட்டமன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தது வெற்று நகைச்சுவை (farce)! நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர்கள் பங்கேற்று, ஆட்சிக்கு எதிராக வோட்டளித்த பிறகே பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும் என்பது காங்கிரஸ் சார்புடைய ஆளுநரின் நிலைப்பாடு. அதன்மூலம் ஆட்சி கவிழும் அபாயத்தை எதிர்கொள்ள விரும்பாத எடியூரப்பா தரப்போ, அந்தப் பதினாறு பேருக்கும் நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்கவே உரிமை இல்லை என்று சாதித்து வெற்றி கண்டது! ஆளுநரோ குடியரசுத்






தலைவர் ஆட்சிக்குப் பரிந்துரை செய்கிறார்.

இந்த நவரஸ நாடகத்தில் அதிகம் பந்தாடப்பட்டிருப்பது அடிப்படை அரசியல் நாகரிகமும் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் ஆதாரமாக விளங்கும் அரசியல் தர்மமும்தான். கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் பயன்பாடு, ஆளுநரின் அதிகாரங்கள், குடியரசுத் தலைவரின் பொறுப்புகள் என்று பல்வேறு முக்கிய நிலைகளில் ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறது இந்த விவகாரம்.

தற்போது அதிகரித்து வரும் கூட்டணி ஆட்சி முறைக்கு ஏற்றவாறு சட்டங்களை மறுபார்வைக்கு உட்படுத்தி சீர்திருத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இருவேறு பொருள் கொள்ளும் வகையில் அல்லாது, சட்டங்களை, விதிகளைத் தெளிவுபடுத்தி நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியமும் இருக்கத்தான் செய்கிறது. வேறொரு கட்சிக்கு ஆதரவு தெரிவிக்காவிடினும் தமது கட்சியிலிருந்து விலகாவிடினும் தம் கட்சித் தலைவரின் ஆட்சியில் நம்பிக்கை இழந்துவிட்டதாகக் கூறும் அடிப்படை உறுப்பினர், கட்சித் தாவியவர் ஆகிறாரா? இல்லையா? என்பன போன்ற சந்தேகங்கள் தீர்க்கப்படவேண்டியுள்ளன.

சட்ட நிபுணர்களும் அரசியல் சாசன வல்லுனர்களும் இணைந்து கட்சித் தாவல் தடைச் சட்டத்தை இன்னும் நடைமுறைக்கேற்றதாகவும் குழப்பங்களுக்கு இடமில்லாத வகையிலும் சீர்திருத்த இயலும். ஆனால் எப்பேர்ப்பட்ட சட்டத்தையும் சாதகமாக வளைத்துக் கொள்ளவோ அல்லது முழுமையாய்ப் புறக்கணிக்கவோ நமது அரசியல்வாதிகள் துளியும் தயங்குவதில்லை. அதிலிருக்கக்கூடிய ஓட்டைகளில் புகுந்து தப்புவது ஒருபுறமிருக்க, அதன் அடிப்படை நோக்கத்தையே திரித்துப் பொருள் கொள்கிற அக்கிரமமும் நிகழ்கிறது.

நாடாளுமன்றத்துக்கும் சட்டசபைக்கும் தேர்வாகி வருவோரின் பின்னணியே குற்றம் நிறைந்ததாக, சர்ச்சைகள் மிகுந்ததாக இருக்கிறது. அரசியல் கட்சிகளின் நோக்கம் ஆட்சியைப் பிடித்து அதன் மூலம் செல்வாக்கைப் பயன்படுத்தி பொதுச் சொத்தைச் சுருட்டுவதாக இருக்கிறது! எப்பேர்ப்பட்ட மேதைகள் வடிவமைத்தாலும் சட்டங்களால் மட்டுமே இந்த நிலைமையை சரி செய்ய முடியாது. மக்களின் விழிப்புணர்வினால் அரசியல்வாதிகளின் மனச்சாட்சி உசுப்பப்பட்டு, தார்மிக உணர்வுகள் மேலோங்கும்போதுதான் சட்டங்கள் அர்த்தமுள்ளவையாகி பலம் பெறும்.



ஏழு நாட்கள்... பலன்கள்..!

மனித உடலின் ஏழு சக்தி மையங்களை உள்ளடக்கி, பிரதிஷ்டை செய்யப்பட்டது ஈஷாவின் தியானலிங்கம். வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் தியானலிங்கத்திலிருந்து வெவ்வேறு அதிர்வுகள் வெளிப்படுகின்றன.


- **திங்கட்கிழமை - பூமி தத்துவம்:** குழந்தைப் பேறு கிட்டவும், மலட்டுத் தன்மை நீங்கவும், மன பயம், பண பயம், மரண பயம் போக்கவும் இந்நாளில் தியானலிங்கத்தின் அதிர்வுகள் துணைபுரிகின்றன.
- **செவ்வாய்க்கிழமை - நீர்த் தத்துவம்:** மனத் தூய்மை, மனவுறுதி, உறவுகளை வளர்த்தல் போன்றவற்றுக்கு இந்நாளின் அதிர்வுகள் துணைபுரிகின்றன!
- **புதன்கிழமை-நெருப்புத் தத்துவம்:** பொருளாதார மேம்பாட்டுக்கும், உடல் நலம் சிறக்கவும் துணை செய்கிறது.
- **வியாழக்கிழமை-காற்றுத் தத்துவம்:** இறையுணர்வில் தேடல் மிகுந்தவர்களுக்கு அன்பு நிலை, பக்தி நெறி போன்ற மேம்பட்ட வாழ்க்கை முறைகளுக்குப் பேருதவி புரிகிறது.
- **வெள்ளிக்கிழமை-வான் தத்துவம்:** நினைவாற்றல், தன்னம்பிக்கை, பொறுமை போன்ற நற்பண்புகள் மேம்படவும், சாபங்கள் மற்றும் தீய சக்திகளிடமிருந்து விடுபடவும்.
- **சனிக்கிழமை-மகா தத்துவம்:** ஐம்புலன்களைக் கடந்த பேரானந்தம் கிட்டுவதற்கு வழிசெய்யும் அதிர்வலைகள் இந்நாளில் தியானலிங்கத்திலிருந்து வெளிப்படுகின்றன.
- **ஞாயிற்றுக்கிழமை:** 'தான்' எனும் மாயையைக் கடப்பதற்கும், புலன்களுக்கு அப்பாற்பட்ட பேரானந்தத்தை உணர்வதற்கும், குருவருளைப் பெறுவதற்கும் இந்நாளில் தியானலிங்கம் நல்வழி காட்டுகிறது.

- சரவணன் திரு

தீபாவளி தீபாவளி

அன்பான வேண்டுகோள்







தீபாவளி திருநாளில் பொது மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட குருகுலத்தில் உள்ள 250 குழந்தைகளும், 100 முதியோர்களும் இறைவனை பிரார்த்திக்கிறோம். பண்டிகைகளும் விழாக்களும் வேற்றுமை நீங்கி உறவுகள் ஒன்றுபட மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது. எங்களுக்கு தாய், தந்தை ஸ்தானத்தில் இருந்து இவ்வருட தீபாவளியை கொண்டாட உதவியை பணமாகவோ அல்லது புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு, எண்ணெய், சீயக்காய் போன்ற பொருட்களாகவோ அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகளாகவோ நன்கொடையாக கொடுக்கலாம்.

தாங்கள் அன்புடன் நன்கொடைத் தொகையினை காசோலையாகவோ / டிராப்டாகவோ **சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்** என்ற பெயரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச்செயலாளர்
சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்
நெ.20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059
தொலைபேசி எண்: 2239 2444
2239 1078

சென்னையில் நன்கொடை கொடுக்க வேண்டிய முகவரி
M/s. **பிரகாஷ் டிரேடிங் கம்பெனி**
நெ.156, தம்பு செட்டி தெரு,
சென்னை - 600 001
தொலைபேசி எண்: 2534 2803

சிவானந்த குருகுலம்

காட்டாங்கொளத்தூர் - 603 203, காஞ்சிபுரம் மாவட்டம்
போன்:27452345, 2745 1815

பின் குறிப்பு: நன்கொடையைக் காசோலையாகவோ / டிராப்டாகவோ **சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்** என்ற பெயரில் அனுப்ப வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

I.T. Exemp No DIT (E) No.2039(88) 86-87
Dt.30.06.2009
Pan No.AAA TSO 160 K

Email:sivanand@md2.vsnl.net.in
Web:www.buildhope.org

'அமைதியில்லாத நேரத்திலே அந்த
ஆண்டவன் என்னையே
படைத்துவிட்டான்'

'ராமு' படத்தில் வரும் 'நிலவே என்னிடம் நெருங்காதே' என்ற பாடலின் வரிகள். ஜெமினி கணேசன் தன் மனைவியை இழந்து, மகனும் ஊமையாகி விட்ட சோகத்தில் இருப்பார். கே.ஆர்.விஜயா அவரை நேசிப்பது தெரிந்து சம்மதிக்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் இப்பாடலைப் பாடுவார். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் துன்பம் ஏற்படும் நேரத்தில் இந்த வரிகளை நினைக்காமல் இருக்க முடியாது.



- ஜெ. புஷ்கலா,
சென்னை


'தின்ன உனக்கு சீனிமிட்டாய் வாங்கித் தாரணுமா
சிலுக்குச் சட்டை ஜிகினா பொம்மை பலூன்
வேணுமா...'

வண்ணக்கிளி படத்தில் வரும் 'சின்னப் பாப்பா எங்க செல்லப் பாப்பா... சொன்ன பேச்சைக் கேட்டாதான் நல்ல பாப்பா' என்ற பாடலில் வரும் மேற்கண்ட வரிகளைப் பற்றி என் அப்பா என்னிடம்



வாசகர்களே!
உங்களுக்குப் பிடித்தமான பாடல் என்னவென்று...
kalki@kalkiweekly

'வாழ்க்கைப் படகு' என்ற படத்தில் ஜெமினி கணேசன் ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு பாடும் ஒரு பாடல் காட்சி வரும். மனத்தை மயக்கும் குரலில் ஒலிக்கும்.



சின்னச் சின்ன கண்ணனுக்கு
என்னதான் புன்னகையோ...
இந்தப் பாடலின் இடையே
பூப்போன்ற நெஞ்சினிலும்... முள்ளிருக்கு பூமியடா...
பொல்லாத கண்களடா... புன்னகையும் வேஷமடா...
நன்றி கெட்ட மாந்தரடா... நானறிந்த பாடமடா...
பிள்ளையாய் இருந்துவிட்டால்... இல்லை ஒரு துன்பமடா...

என்ற வைர வரிகள் ஒவ்வொரு மனிதரும் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கின்ற உண்மை நிலையை கவிஞர் அழகுற வெளிப்படுத்திய இந்த அற்புதப் பாடல் என் மனத்தில் பதிந்துவிட்டது!

- செ.ஆசைத்தம்பி, தாரமங்கலம்

பெருமையாகச் சொல்வார். நான் சின்ன வயசா இருக்கும்போது சீனி மிட்டாய், பலூன் வாங்கித் தந்தா ரொம்ப சந்தோஷப் படுவேனாம். துள்ளித் துள்ளிக் குதிப்பேனாம். இப்போ உள்ள குழந்தைகளை சந்தோஷப்படுத்தணும்னா வீடியோ கேம், கம்ப்யூட்டர், ஷாப்பிங்னு போகணும். ஆனா அந்தக் காலத்தில் சீனி மிட்டாயும், பலூனும், ரொம்ப ஆச்சரியமான விஷயங்கள். கேபிள் டி.வி.யில் பழைய பாடல் போடும்போது இந்தப் பாடல் வரும் நேரம் என்னை மறந்து சந்தோஷமாகப் பாடலைக் கேட்டுக் கொண்டிருப்பேன்.



- எம். கனிமொழி, சாத்தூர்

எனக்குப் பிடித்த பாடல்!

...ண்ணனுக்கு ...ன்னகையோ?

வேட்டைக்காரனில் எம்.ஜி.ஆர் முதன்முதலில் சாவித்திரியைச் சந்திக்கும் காட்சி. சாவித்திரியின் மேல் ஈர்ப்பு உண்டாகிறது. காட்சிச் சூழலின்படி, ஒன்று, சாவித்திரியின் அழகை வர்ணிப்பதாகவோ அல்லது தன் காதலைத் தெரிவிப்பதாகவோ பாடல் அமைய வேண்டும். குழந்தைக்குப் பொருந்தாவிட்டாலும் பரவாயில்லை. மக்களுக்கு நல்ல விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்பதில் உறுதியாயிருந்த எம்.ஜி.ஆர். அந்தக் காட்சியில் பாடிய 'உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்' எனக்கு மிகப் பிடித்த பாடல். என் செல்ஃபோனின் ரிங்டோனாகும் இந்தப் பாடலே. இன்னும் ஒரு நூற்றாண்டு சென்றாலும், இந்தப் பாட்டு பேசப்படும், ரசிக்கப்படும்.

- எம். கதிர்வேல், கோவை



***தோ**ல்வி நிலையென நினைத்து*
மனிதன் வாழ்வை இழக்கலாமா?
வாழ்வை சுமையென மதித்து
தாயின் கனவை மிதிக்கலாமா?
உரிமையை இழந்தோம்
உடமையை இழந்தோம்
உணர்வை இழக்கலாமா?

- 'ஊமை விழிகள்' திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல் இது.

பத்திரிகை அலுவலகத்துக்குள் சில ரௌடிகள் புகுந்து அங்குள்ள அச்சகப் பொருட்களையும், தொழிலாளர்களையும் அடித்து நொறுக்கிவிட்டுச் சென்று விடுவர்.



அடிபட்ட தொழிலாளர்கள் தன்மான உணர்வால் ஒன்றுகூடி பாடும் இப்பாடல் தோல்வி ஏற்படும் போதெல்லாம், தன்னம்பிக்கை ஊட்டுவதாக அமையும். அதனாலே இப்பாடல் எனக்கு மிகவும் பிடித்தமான பாடலாகிவிட்டது.

- எஸ்.தீபன் சக்கரவர்த்தி, திருத்தங்கல்

வடசித்தூர் கிராமத்தின் கூலித் தொழிலாளி செல்வராஜ், மனைவி மணிமேகலை. அரசின் நல உதவித் திட்டங்கள் என்னென்ன? அதனை எவ்விதம் பெறுவது என்கிற விவரம் தெரியாதவர்கள். கூலி வேலையுண்டு ஓலைக்குடிசையுண்டு என்று வாழ்பவர்கள். ஒருமுறை ஈஷா கிராமப்புற நடமாடும் மருத்துவ ஊர்தி, ஊருக்குள் வந்தபோது அதிசயப்பட்டார்கள். வீட்டு வாசலில் மருத்துவ உதவியா?! என வியந்தார்கள். மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் குறித்து அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டு, ஈஷாவின் தன்னார்வத் தொண்டர்





புத்துணர்ச்சி கிராமம்!

வழிகாட்டுதலில் 'கலைஞர் மருத்துவக் காப்பீடு' அட்டையைப் பெற்றுள்ளது அக்கூலித் தொழிலாளியின் குடும்பம்.

அரசின் பலவிதமான சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் எளிதில் கிராம மக்களைச் சென்றடைய வைக்கும் பாலமாக இருந்து இயங்கி வருகிறது ஈஷாவின் கிராமப் புத்துணர்வு மையம்.

கீரைப் பட்டணம் கதை என்கிற பெயரில், கீரைகளின் பயன்கள் குறித்தான விழிப்புணர்வு படம் ஈஷாவினால் பன்னப்பட்டிக் கிராமத்தில் திரையிடப்படுகிறது. பதினான்கு வயது விக்னேஷ், தினசரி சாப்பாட்டில் காய்கறி, கீரை என்றாலே ஒதுக்கி வைப்பவன், படம் பார்த்துச் சென்ற மறுநாளிலிருந்து, அம்மாவிடம் ஏதேனும் கீரை வாங்கி சமைக்கச் சொல்லி ஒரே நச்சரிப்பு. அம்மாவுக்கு ஏதொன்றும் புரியவில்லை. ''அம்மாவிடம் நான் பார்த்த படம் பற்றிச் சொன்னேன். 'நீ சோறு திங்க ஆரம்பிச்சதுலேர்ந்து அதையேதாண்டா நானும் சொல்லிட்டிருக்கேன்' என என்னைத் திட்டினாள். இப்போ ஒருநாள் விட்டு ஒரு நாள் கீரை சாப்பிடுகிறேன். காய்கறிகளையும் ஒதுக்கி வைப்பதில்லை!'' என்கிறான் விக்னேஷ்.

மேலோட்டமாகப் பார்த்தால் கீரை சாப்பிட வைப்பதும், கலைஞர் மருத்



* செல்வராஜ் - மணிமேகலை









துவக் காப்பீடு அட்டை பெற்றுத் தருவதும் என்ன பெரிய சமூக சேவையா? எனக் கேட்கத் தோன்றும். கிராமப்புறக் குழந்தைகளுக்குத் தங்கள் உணவில் காய்கறிகளும் கீரை வகைகளும் பெருமளவு உட்கொள்ள வேண்டும் என்கிற உணர்வினை ஊட்டி, உண்ணச் செய்து விட்டாலே அவர்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால ஆரோக்கிய வாழ்க்கைக்கு அச்சாரம் ஆகிவிடும்.

கிராமப்புற யோகா, மருத்துவம், கவுன்சிலிங் எனப் பல நிலைகளிலும் தொடர்ந்து வழிகாட்டி வருகிறது ஈஷா கிராமப் புத்துணர்வு மையம். பத்தொன்பது நடமாடும் இலவச மருத்துவ ஊர்திகள், 780 கிராம மக்களுக்கு சேவை செய்து வருகிறது. ஈஷா கிராம மருத்துவமனைகள் நான்கு இடங்களில் இயங்குகின்றன. கோவை அருகே பல்லடத்தில் உள்ள சேவை மையம் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோருக்குச் சேவை செய்கிறது. 2003ல் தொடங்கப்பட்ட ஈஷா கிராமப் புத்துணர்வு மையம், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி என மொத்தம் முப்பத்திமூன்று மாவட்டங்களில் சுமார் நான்காயிரத்து ஐந்நூறு கிராம மக்களைச் சென்றடைந்துள்ளது!

- சரவணன் திரு

''கல்கி கிளினிக்

பத்மஜா ரங்கராஜன், நங்கநல்லூர்

''என் 10 வயது மகளுக்குக் கடந்த ஒரு வாரமாக, சளித் தொல்லை இருந்து வருகிறது. இதனால், இடைவிடாத தலைவலி, இருமல், உடல் வலி, பசியின்மை போன்ற உபாதைகளால் அவதியுறுகிறாள். இதற்கு இயற்கை வைத்தியம் இருக்கிறதா?''

சித்த மருத்துவர் நாராயணன்: நாம் குடிக்கும் தண்ணீரில் கிருமிகள் இருந்தால், இப்படிச் சளித் தொல்லை வரலாம். குடிக்கும் தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து அதில் சீரகத்தைச் சேர்த்துப் பருகுவது நல்ல பலனைக் கொடுக்கும். பதிமுகம் என்ற ஒரு தண்டை, தண்ணீரில் போட்டு கேரள மாநிலத்தவர்கள் பருகுவார்கள். அது கிடைத்தாலும் அப்படிச் செய்யலாம். கூடுமானவரை மழையில் நனையாமல் இருப்பது, சளி வராமல் தப்பித்துக் கொள்ள உதவும். அப்படிச் சளி வந்துவிட்டால், தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து ஆவி பிடிக்கலாம், இரவு வேளையில் பாலில் மஞ்சள் பொடி மற்றும் மிளகுப் பொடி சேர்த்துக் கொதிக்க வைத்துப் பருகலாம். ஆடாதொடை இலை, துளசி, சித்தரத்தை மற்றும் மிளகு சேர்த்து கஷாயம் போல் செய்து சாப்பிட்டு வந்தால் சளித் தொல்லை கட்டுப்பாட்டுக்குள் வரும். ஆடாதொடை இலை பூ விற்பவர்களிடம் கிடைக்கும். கண்டந்திப்பிலி ரசம் சாப்பிடுவதும் நல்லது. தீபாவளி வரை இப்படிச் சளி, இருமல், காய்ச்சல் என்பது பரவலாகப் பலருக்கும் இருக்கும். நான் மேற்கூறிய கை வைத்தியங்களை இவர்கள் செய்து கொள்ளலாம். அதைப் போலவே, நிலவேம்பு குடிநீர் பொடி சித்த மருந்தகங்களில் கிடைக்கும், அதைக் கொதிக்கும் நீரில் போட்டுச் சாப்பிடுவதும் நல்லது.



ஒரே மாதத்தில் 6 கிலோ!

வி. நரசிம்மன், செம்பரம்பாக்கம்


''என் சகோதரி திடீரென ஒரே மாதத்தில் 6 கிலோ எடை ஏறிவிட்டாள். டாக்டரிடம் பரிசோதனை செய்தபோது, அவளுக்கு தைராய்ட் பிரச்னை இருப்பது தெரிய வந்தது. தைராய்ட் இருப்பதால்தான், எடை கூடிவிட்டதோ?''

தைராய்ட், நீரிழிவு மருத்துவர் ஜெயஸ்ரீ கோபால்:

உடல் எடை கூடினா உடனே தைராய்ட்தான் காரணம்னு நிறைய பேர் தப்பா நினைக்கறாங்க. ஆனா உண்மையிலே, இதற்கு நேர்மாறாதான் நடக்குது. அதாவது எடை கூடுவதால்தான் தைராய்ட் பிரச்னை வருமே ஒழிய, தைராய்ட்

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.c
ஒரு ஸ்பேஸ் வி

இருப்பதால், எடை கூடும் என்பது கிடையவே கிடையாது. நூத்துல 3 முதல் 5 சதவிகிதம் பேர்களுக்குதான் தைராய்டால், எடை கூடும். எடை கூடுவதால் எப்படி, உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும், கொலஸ்ட்ரால் பிரச்னைகள் வருமோ அப்படித்தான் தைராய்ட் பிரச்னையும். நிறைய பேர், கொஞ்சம் எடை கூடிவிட்டாலே உடனே தைராய்டுக்கான ரத்தப் பரிசோதனை செய்துகிட்டு, வந்து எங்கக்கிட்ட காட்டுவாங்க. சரியான உடற்பயிற்சி, நல்ல சத்தான, கொழுப்பில்லா உணவு முறைன்னு இருந்து வந்தால், எடையும் கூடாது, அதனால், தைராய்ட் பிரச்னையும் நிச்சயம் வராது.



✱ நாராயணன்



✱ ஜெயஸ்ரீ



✱ ரமேஷ்



தங்கம்மாள், திருச்சி

என் தாய்க்கு சமீபத்தில்தான் அதிக கொலஸ்ட்ரால் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் என்னென்ன உணவுகளைத் தவிர்க்க வேண்டும், எதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்?


இதயநோய் நிபுணர் பால் ரமேஷ்: பொதுவாகவே, நாம் அனைவருமே கட்டாயம் குறைத்துக்கொள்ள வேண்டியது கார்போஹைட்ரேட்ஸ் அதிகம் உள்ள இட்லி, தோசை, அரிசி நம் தேவைக்கு அதிகமான கார்போஹைட்ரேட்ஸைக் கொடுத்து விடுகிறது. நாம் சாப்பிடும் சாப்பாட்டில் 10 யூனிட் எனர்ஜி கிடைக்கிறது என்றால், நாம் செலவிடுவது வெறும் 3 யூனிட்டுகள்தான். மீதம் உள்ள எனர்ஜி, நமது ரத்தத்தில் சென்று கொலஸ்ட்ராலாகச் சேர்ந்து விடுகிறது. ஒரு கிண்ணம் அரிசி, எண்ணெய் அதிகம் சேர்க்காத காய்கறி, மற்றும் கீரை வகைகள், அசைவ உணவு சாப்பிடுபவர்களாக இருந்தால், மீன், கோழியைச் சாப்பிட்டு, மட்டன் உணவுகளைத் தவிர்க்க வேண்டும். சாப்பிட்டு முடித்த உடனேயே படுக்கப் போவதும் தவறு. சாப்பாடு முடித்து ஒரு மூன்று மணி நேரமாவது ஏதாவது வேலை செய்து விட்டுத்தான் ஓய்வு எடுக்கச் செல்ல வேண்டும். புரோட்டீன் சத்து அதிகம் உள்ள உணவைக் கூட்டி கார்போஹைட்ரேட்ஸ் உள்ள உணவைக் குறைத்தாலே போதும், உங்கள் தாயின் கொலஸ்ட்ரால் அளவு கண்ட்ரோல் ஆகிவிடும், கவலை வேண்டாம்.

தொகுப்பு : **நளினி சம்பத்குமார்**

...கும் அனுப்பலாம், உங்கள் செல்போனில், kacl என்று டைப் செய்து
...ங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

அலற வைக்கும் அக்டோபர் 18?

அக்டோபர் 18 மதுரைக் கூட்டத்துக்குத் தயாராகிவிட்டார் ஜெயலலிதா. முதலில் நகருக்குள் இருந்த தமுக்கம் மைதானத்தைத்தான் கூட்டம் நடத்த தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் ஆளும்கட்சி வெளி மாவட்டங்களிலிருந்து வரும் வண்டிகளை நகருக்கு வெளியேயே நிறுத்தி, தொண்டர்களுக்குத் தொல்லை கொடுக்கும் என்று ரிங் சாலையில் மஸ்தான்பட்டியில் ஏற்பாடு செய்துவிட்டார்கள். சோனியா கூட்டத்துக்குக்கூட அரசு பஸ்களை வாடகைக்கு (?) கொடுத்த ஆளும் கட்சி, மதுரை சுற்றுவட்டார மாவட்டப் போக்குவரத்து



சரத்

துக்கடாக்களின் துயரம்!

தி.மு.க., அ.தி.மு.க. அணிகளில் மாற்றம் வருமா? விஜயகாந்த் என்ன செய்வார்? - இதுபோன்ற கேள்விகளுக்கே இன்னமும் பதில் கிடைக்காத போது, உதிரிக் கட்சிகளான கொங்குநாடு மக்கள் கட்சி, இந்திய ஜனநாயகக் கட்சி, புதிய நீதிக் கட்சி, சமத்துவ மக்கள் கட்சி... ஆகியவை குழப்பத்தில் இருக்கின்றன. இவற்றின் நோக்கம் ஏதாவது ஓர் அணியுடன் இணைந்து ஓரிரு இடங்களைப் பெறுவதுதான். தங்கள் செல்வாக்கையும் இருப்பையும் தெரிவித்துக் கொள்ள ஏதாவது நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. கொங்கு நாடு மக்கள் கட்சித் தலைவர்கள் கொங்கு பகுதியில் பாத யாத்திரையைத் தொடங்கிவிட்டார்கள். புதிய ஜனநாயகக் கட்சி 25 வேட்பாளர்களை அறிவித்துவிட்டது. சமத்துவ மக்கள் கட்சியின் நடிகர் சரத்குமார் தாம் ஆசிரியராக இருந்து நடத்தும் 'மீடியா வாய்ஸ்' பத்திரிகையில் ''ஜெயலலிதாதான் ஆட்சியைப் பிடிப்பார்'' என்ற ரீதியில் செய்திக் கட்டுரை வெளியிட்டிருக்கிறார்.

எங்கும் பறக்க வேண்டும் சிவப்புக்கொடி

★ சிவப்பு என்றாலே அந்த நிறத்தை கம்யூனிஸ்டுகளோடுதான் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். அதுபோல தமிழக அரசியலில் மற்றொரு சிவப்புக் கொடி



பாலிடிக்ஸ் பஜார்



நடராஜாவுக்கு அதிர்ஷ்டம் அடிக்குமா?

தமிழகக் காவல்துறைத் தலைவராக லத்திகா சரணை நியமித்ததைக் குறித்துக் கேள்வி எழுப்பி இருக்கிறது உயர்நீதிமன்றம். லத்திகாவை நியமித்த போது அவரைவிட சீனியர்களாக பாலச்சந்திரன், நடராஜ், விஜயகுமார் மற்றும் உபாத்யாயா ஆகியோர் இருந்தார்கள். இப்போது பாலச்சந்திரன் ஓய்வு பெற்றுவிட்டார். விஜயகுமார் மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்குத் தலைவராகிவிட்டார். உபாத்யாயாவின் மீது விஜிலன்ஸ் கேஸ். எனவே நீதி

அதிகாரிகளுக்குத் தனியார் பஸ் முதலாளிகள் தங்கள் பஸ்களை அ.தி.மு.க. தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்துக்குச் செல்ல வாடகைக்குக் கொடுக்கக்கூடாது என்று எழுதப்படாத ஆணையைப் போட்டிருக்கிறது. இந்தக் கலாட்டா ஒரு பக்கம் இருக்க, அக்டோபர் 18 அன்று மதுரையைக் குலுங்க வைக்க வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் ஆகியோர் சிட்டாய்ப் பறந்து வேலை செய்கிறார்கள்.



சொல்லும் ஆரூடம்!

வலம் வரப் போகிறது என்று மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் பக்தர்கள் சொல்கிறார்கள். அடிகளாரின் மகன் அன்பழகன் ஆன்மிக இளைஞர் பேரவை என்ற அமைப்பை நடத்தி வருகிறார். இந்த வருடம் அவரது பிறந்த நாளை ஓர் அரசியல் கட்சியின் தலைவர் ரேஞ்சில் கட்-அவுட், ஃப்ளக்ஸ் பேனர்கள், சுவர் விளம்பரங்கள் என்று கலக்கிவிட்டார்கள். ''வருமான வரித்துறை சோதனை நடத்திய போதுதான் எங்களுக்கு ஓர் அரசியல் கட்சியின் பாதுகாப்புக் கவசம் இருந்தால் நல்லது என்று நினைத்தோம். அன்பழகன் தலைமையில் அதைத் தொடங்கினால் என்ன என்ற யோசனை பரிசீலனையில் இருக்கிறது'' என்றார் மேல்மருவத்தூர் அன்பர் ஒருவர்.

அமைச்சர்கள் சுறுசுறு!


வரும் சட்டமன்றத் தேர்தல், தி.மு.க.வுக்குப் பெரும் சவாலாக இருக்கும் என்பதால், தி.மு.க. அமைச்சர்கள் பலர் இப்போதே தீவிரமான பிரசாரத்தில் இறங்கிவிட்டனர். தி.மு.க. வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் ஒரே நாளில் 150 பேச்சாளர்களைக் கொண்டு 1150 தெருமுனைப் பிரசாரக் கூட்டங்கள் நடத்தி முடித்திருக்கிறார் அமைச்சர் பொன்முடி. பேச்சாளர்களுக்குத் தக்க சன்மானம் கொடுத்து அவர்களையும் குஷிப்படுத்தியிருக்கிறார். அதேபோல் சென்னையில் பரிதி இளம்வழுதியும், தொகுதியில் ஒவ்வொரு செவ்வாய் அன்றும் பொதுக்கூட்டம் நடத்துவதுடன் மாணவர் அணி, மற்றும் இளைஞர் அணியின் துணையுடன் தெருமுனைப் பிரசாரக் கூட்டங்களையும் நடத்துகிறார். ஆளும் கட்சியாக இருப்பதால் தி.மு.க. பேச்சாளர்களுக்கு இது வசந்த காலம்!





சஞ்சயன்

மன்றத் தீர்ப்பின்படி தீயணைப்புத்துறை இயக்குனர் நடராஜுக்குத்தான் காவல்துறை பதவி கிடைக்கவேண்டும். ''நடராஜ் 2011 மார்ச்சில் ஓய்வு பெறுகிறார். லத்திகா 2012 மார்ச்சில்தான் ஓய்வு பெறுகிறார். எனவே நடராஜுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கலாம்'' என்கிறார் ஒரு மூத்த காவல்துறை அதிகாரி. ஆனால் தமிழக அரசு உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து அப்பீலுக்கு உச்சநீதிமன்றம் போகக்கூடும். அது இழுவையாக இழுக்கும்போதே நடராஜ் ஓய்வுபெற்றுவிடுவார். அதனால் பிரச்னை தானாகவே தீர்ந்துவிடும் என்ற நோக்கில் தமிழக அரசு செயல்படும் என்றும் சொல்கிறது காவல்துறை வட்டாரம்.



உறவுகளின் தூதுவன்

தி போஸ்ட்மேன் (The Postman) குறும்படம் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த குறும்படமாக தேசிய அளவில் தேர்வு பெற்றிருக்கிறது. இன்றைய நவீன வாழ்வில், ஒரு தபால்காரர் அடையும் மன உணர்வை இந்தக் குறும்படம் பேசுகிறது.

மிக உற்சாகமாகக் கிளம்புகிறான் ராமகிருஷ்ணமூர்த்தி. கண்ணாடியில் அவன் முகம் மிகவும் பிரகாசமாகத் தெரிகிறது. மனிதர்களுடனான உறவும் அதனூடே எழும் சந்தோஷத்தையும் தவிர வேறு விதமான வாழ்வை அர்த்தப்படுத்திக் கொள்ள முடியுமென தோன்றவில்லை ராமகிருஷ்ணமூர்த்திக்கு. ஒரு சின்னஞ் சிறு கிராமத்தின் தபால்காரன் அவன். எங்கேயோ பிறந்து வளர்ந்த அவனுக்கு இந்தக் கிராமத்து மனிதர்கள்தான் உறவு. தினமும் அவர் வரவுக்காகக் காத்துக்கிடக்கிறது அந்தக் கிராமம். அதன் நம்பிக்கைகள், கனவுகள், சோகம், சந்தோஷம்... எல்லாவற்றையும் அவன் கொண்டுவந்து சேர்த்துக் கொண்டிருந்தான்.

அரசாங்கத்திடமிருந்து வரும் நல்ல செய்திகளைச் சுமந்து வரும் அவனைப் பஞ்சாயத்து தலைவர் சந்தோஷமாய்க் காத்திருந்து எதிர்கொள்கிறார். தம் கணவனிடமிருந்து வரும் மிகவும் அன்னியோன்யமான கடிதத்தை மூர்த்தியிடம் படிக்கக் கேட்கிறாள் பாத்திமா. தமக்கு ஏதேனும் கடிதம் வந்திருக்கா

ஜெயமார்த்தாண்டன்

எனக் கேட்கும் தேனீர் கடை நாயர் டீ சாப்பிட்டுவிட்டுப் போகச் சொல்கிறார். எப்போதோ ஓடிப்போன தன் பேரன் கடிதம் போடுவான் என தினமும் எதிர்பார்க்கும் பாட்டியின் நம்பிக்கையைச் சிதைக்காமல் அவள் வாழ்வுக்கு அர்த்தம் கற்பிக்கிறான். அவனே அவளுடைய பேரன் போல கடிதம் எழுதுகிறான். அவன் இல்லையென்றால் ஒருவேளை அந்தக் கிராமம் ஸ்தம்பித்தும் கூடப் போகலாம்.

ஆனால், இதெல்லாம் இப்போது பழங்கதை. நவீனத்தின் நிழல் எல்லா கிரா



மனோகர்

மங்களையும் போல அந்தக் கிராமத்தின் மேலும் படர்கிறது. நாயர்கடையில் இப்போது ஒரு பொது தொலைபேசி இருக்கிறது. பாத்திமாவின் கணவர் துபாயிலிருந்து தொலைபேசியிலேயே பேசிக்கொள்கிறார். பாத்திமாவுக்கு ராமகிருஷ்ணமூர்த்தி பற்றிய நினைவு வருவதேயில்லை. தொலைபேசிக் கட்டண தபாலை கிராம தலைவரிடம் தருவதற்காக நிற்கும் அவனை எரிச்சலோடு எதிர்கொள்கிறார் தலைவர். நவீனத்தின் கரும் நிழலில் யாருமற்ற வெளியில் வாழ்வின் சாரம் இழந்து நிற்கிறான் ராமகிருஷ்ணமூர்த்தி. அவன் தபால் பை வெற்றாகக் கிடக்கிறது அவன் வாழ்வைப் போல. அந்தப் பாட்டியின் பேரன் உண்மையிலேயே ஒரு கடிதம் எழுத, அதை அவளிடம் கொண்டு சேர்க்க விரைகிறான். ஆனால் அவள் இறந்துவிட்டிருக்கிறாள் என்பதோடு குறும்படம் முடிகிறது.

எந்த ஒரு குறும்படத்துக்கும் இயக்குநர் - படத்தொகுப்பாளர் - ஒளிப்பதிவாளர் இவர்களிடையே இருக்கவேண்டிய மன ஒத்திசைவு இந்தப் படத்தில் முழுதாக வெளிப்பட்டிருக்கிறது. தபால்காரர் - அந்தக் கிராமத்து மனிதர்கள் இவர்களுக்கிடையேயான உறவை இருக்கும் பத்து நிமிடத்துக்குள் சின்னச் சின்ன காட்சிகள், சின்ன வசனம், உடல்மொழிகள் மூலமாக அழகாகச் சொல்லிவிடுகிறார் மனோகர். இன்னமும் நவீன உலகின் எந்த ஆர்ப்பாட்டங்களும் நுழையாத அந்தக் கிராமத்தின் எழிலையும், அமைதியையும் மிகநேர்த்தியாகக் கொண்டுவந்து சேர்க்கிறது அபிநந்தன் ராமானுஜத்தின் ஒளிப்பதிவும்; லோகேஸ்வரின் படத்தொகுப்பும்.

தபால்காரராக நடித்திருக்கும் ஈஸ்வர் நல்ல தேர்வு. தம் வேலையை நேசிக்கும் அவரின் மனத்தின் மகிழ்வு இயல்பாகப் படம் முழுவதும் நிறைகிறது. கடைசியில் அவர் ஒட்டுத்தாடி வைத்துக்கொண்டு வருவதை இயக்குநர் தவிர்த்திருக்கலாம். படத்தின் ஒரே செயற்கையான அம்சம் இது. தான் முக்கியமற்றுப் போகும்போது எழும் மனச்சோர்வு, உறவுகள் அற்ற வெளியில் வாழ்வின் அர்த்தமற்றத் தன்மை என அந்தத் தபால்காரர் எதிர்கொள்ளும் எல்லா உணர்வுகளையும் மிகைப்படாத முக பாவனைகள் மூலம் வெளிப்படுத்தும் ஈஸ்வரை ஒருவிதத்தில் நாம் எல்லோருமே ஒத்துதான் இருக்கிறோம்.



மாஸ்கோ பல்கலைக்கழக ஜர்னலிச மாணவிகள் 6 பேர், அதிபர் புடினின் 58வது பிறந்த நாளுக்கு மண்டையில் கொட்டுவது போல் ஒரு காலண்டர் தயாரித்து இருக்கிறார்கள். ஏற்கெனவே 12 மாணவிகள் புடினை மெச்சித் தயாரித்த காலண்டருக்குப் பதிலடி இது. ஜன நாயகம் தழைக்க காலண்டரும் கைகொடுக்கும்!



நியூஸ் மிக்சர்

இந்தியாவில் திருமணத்தை வைத்துக் கொள்ளும் மோகம் எங்கும் பரவி வருகிறது. லேட்டஸ்ட் திருமண ஜோடி: பிரிட்டிஷ் காமெடியன் ரஸ்ஸல் பிராண்டும் பாப் பாடகி கேத்தி பெர்ரியும் தில்லியில் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்கள்! இந்தியர்கள் மாதிரி கடைசி வரை சேர்ந்து வாழ்வார்களா?

ஷீலா தீட்சித்தை இன ரீதியாகக் கிண்டல் செய்தவர் நியூசிலாந்து தொலைக்காட்சி பால் ஹென்றி. அவரை பதவி நீக்க வேண்டும் என்று விக்டோரியோ பல்கலைக்கழக சட்டக் கல்லூரி மாணவிகள் நரிதா சந்திராவும் நிக்கி சிங்கும், பேரணி நடத்துகிறார்கள். ஃபேஸ்புக்கில் இவர்களின் உரிமைக்குரல் உரத்து ஒலிக்கிறது!



பாதர் எர்வில் ரெளட்லர்



ஸ்ரீகிருஷ்ண உபாத்யாயா





நோபல் விருது போலவே ரைட் லைவ்லிஹுட் அவார்டுகளுக்கும் பெரிய மௌசு உண்டு. நோபல் விருதுகளில் கவனிக்கப்படாதவர்கள் இங்கே புகழப் படுவார்கள். இவ்வாண்டுக்கான விருது நைஜீரியாவைச் சேர்ந்த நிம்மோ பாஸ்ஸி (எண்ணெத் துரப்பணத்தால் ஏற்படும் அழிவுகளுக்கு எதிரான பிரசாரத்துக்காக), பிரேசிலைச் சேர்ந்த பாதர் எர்வில் ரெளட்லர் (அமேசான் காடுகளைக் காக்கப் போராடுபவர்), நேபாளத்தைச் சேர்ந்த ஸ்ரீகிருஷ்ண உபாத்யாயாவுக்கும் (ஏழ்மையைப் போக்க மக்களைத் திரட்டி இயக்கம் கண்டவர்) வழங்கப்பட்டிருக்கிறது.

- துளசி

நிம்மோ பாஸ்ஸி

ஒரு பக்கம் பசுமை போர்த்திய வெள்ளியங்கிரி மலை, மறுபுறம் தேக்கு, தென்னை, பாக்கு மரங்கள், மயில்கள், குயில்கள், ஏன் யானைகளின் பிளிறல் கூட சங்கீதமாகக் கேட்கும். ஓர் ரம்மியமான சூழலில் அமைந்திருக்கிறது ஈஷா யோகா மையம். "கேளுங்க" என்கிறார் சத்குரு ஜக்கி வாசுதேவ்.

தியானலிங்கம் மற்றும் லிங்க பைரவி கோயில்கள் கட்டியதால்,

"நமது கோயில்கள் வழிபாட்டுக்காக உருவாக்கப்பட்டவை அல்ல. கோயில் கட்டுவது அழகான விஞ்ஞானம். விக்ரகம், கர்ப்பக்கிரகம், பிராகாரம் என்று சகல அமைப்புகளும் சரியாகக் கட்டப்பட்டிருந்தால் அதுவே மிகப் பெரிய சக்தி மையம் (energy centre). விக்கிரகத்தின்



மக்கள் அவற்றை ஒரு வழிபாட்டுத் தலமாகக் கருதி வருகிறார்கள். அப்படியெனில் உங்கள் அடிப்படைத் தத்துவமான யோகம் - தியானம் பின்னுக்குத் தள்ளப்பட்டதா?

வடிவம், அளவு, அதன் முத்திரை, பிரதிஷ்டைக்குப் பயன்படுத்தப்படும் மந்திரம் ஆகிய எல்லாமே சரியாக அமையுமானால், அந்த விக்கிரகம் அமைந்திருக்கும் இடம் சக்திமிக்கதாகிவிடும். அந்த வகையில் அங்கே நல்ல அதிர்வலைகளை உணர முடியும். நான் வணிக வளாகங்களைப் போல் கட்டப்படும் தற்போதைய



கோயில்களைச் சொல்லவில்லை. இப்போது கோயிலுக்குப் போனால் கும்பிட வேண்டும். ஏதாவது பிரார்த்தனைகள் வைக்க வேண்டும் என்பது மரபாகவே அமைந்துவிட்டது. உண்மையில் நமது பாரம்பரியம் கோயிலுக்குச் சென்று அமைதியாக அமர்ந்து எழுந்து வருவதுதான். அப்படி வந்தால் அங்கே உள்ள சக்தியின் அதிர்வலைகளை உணர முடியும். எனவே கோயில்கள் ஒரு கருவிதான். நமக்குள் உறங்கிக் கிடக்கும் ஆற்றலைத் தொட்டுக்காட்டும் கருவி. அந்த வகையில் தான் தியானலிங்கமும் லிங்கபைரவியும் அமைந்திருக்கின்றன. விஞ்ஞானமாக இருந்த இடங்களை மூடநம்பிக்கையாக மாற்றிவிட்டோம். இங்கே வருபவர்கள்

29 ஸ்பெஷல்

கிறோம். அது தவறு. 50,000 வருடங்களுக்கு முன்னர் ஆதியோகியால் உருவாக்கப்பட்டதுதான் யோக விஞ்ஞானம். கால ஓட்டத்தில் அது பல பிரிவுகளாக மாறிப் போனது. இப்போது மருத்துவத்தில் கண்ணுக்குத் தனி மருத்துவர், பல்லுக்குத் தனி மருத்துவர் என்பது போலத்தான். இப்படிப் பிரிந்து போன யோக சாஸ்திரங்களை ஒருங்கிணைத்தவர்தான் பதஞ்சலி. ஒரிஜினல் யோக விஞ்ஞானத்தின் கர்த்தா ஆதியோகிதான். ஈஷா மையத்தில் ஆதியோகி ஆலயம் அமைவதற்கு முன், அமெரிக்காவில் நியூஜெர்ஸியிலும், கலிபோர்னியாவிலும் அமைக்கப்பட்டு விடும்.''

ஈஷா யோக மையம் தொடங்கி கிட்டத்தட்ட இருபது வருடங்கள் ஆன நிலையில்,

அயோத்தி அதிசயமான தீர்ப்பு!

- வரவேற்கும் ஜக்கி

அவற்றை ஒரு கருவியாகக் கொண்டு தன் உள்மன நிலையைச் சீரமைத்துக் கொண்டு ஆற்றலை மேம்படுத்தி ஆனந்தம் அடைய முயல வேண்டும். அதற்கு ஈஷாவின் யோகா முறைகளும், தியான முறைகளும் உங்களுக்கு வழிகாட்டும். எனவே ஈஷாவின் அடிப்படைத் தத்துவத்தின் ஒரு பகுதியாகத்தான் இங்கே தியானலிங்கமும், லிங்க பைரவியும் அமைந்திருக்கின்றன. அடுத்து ஆதியோகிக்கும் ஆலயம் வருகிறது.''

அதென்ன ஆதி யோகி ஆலயம்?

''யோகா என்றாலே அது பதஞ்சலி முனிவர் உருவாக்கியது என்று நினைக்

உங்கள் நோக்கம் நிறைவேறியுள்ளதா?

''(சிரிக்கிறார்) மனிதனின் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணம் வெளிச் சூழலை அவன் உள்மனத்துடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதுதான். புற உலகில் நடக்கும் விஷயங்கள் உங்களை தலைகீழாகப் புரட்டிப் போடுகின்றன. எங்கள் யோக - தியான முறை மூலம் வெளிச் சூழலால் உங்கள் உள் மனநிலை பாதிக்காத வகையில் சீரமைக்கப்பட்டு உடலில் உள்ள சக்தி மையங்களான சக்கரங்கள் ஆற்றலை அதிகரிக்கத் தூண்டிவிடப்படுகின்றன. அந்த வகையில் உலகில் 700 கோடி பேருக்கும், நான் சாகும் வரையில் கூட தொடர்ச்சியாக முயன்றால்

கூட எல்லோருக்கும் சொல்லித் தர முடியாது. இப்போது உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் பிறக்கப் போகிறவர்களுக்கும் சொல்லித்தர வேண்டும். இது என் வாழ்நாளில் நடக்கக் கூடிய காரியமா? எதிர்காலத்தில் இங்கே நடக்கும் பணிகளைத் தொடர்ச்சியாக எடுத்துச் செல்லும் வகையில் அமைப்பு ரீதியான கட்டுமானங்களை உருவாக்குகிறோம்.''

இது பண்டிகைக் காலம். நமது பண்டிகைகள் மகத்துவத்தை இழந்து வருகின்றனவா?



''ஒரு காலத்தில் வருடம் முழுவதும் பண்டிகைகளும் திருவிழாக்களுமாக இருக்கும். மனிதனை ஆனந்தமாகவும் உற்சாகமாகவும் வைக்கவே பண்டிகைகள். இப்போது வருடத்தில் நான்கு பண்டிகைகள் கொண்டாடினாலே அதிகம். பொங்கல், தசரா, தீபாவளி, மகா சிவராத்திரி... ஆகிய நான்கு பண்டிகைகளும் அவசியம் கொண்டாடப்பட வேண்டும் என்பது என் கருத்து. பண்டிகைகளில் பல நம் மண்ணோடும், தொழிலோடும் தொடர்பு கொண்டவை. இப்போது என்ன நடக்கிறது? பட்டாசு வெடிக்காதே... சுற்றுச்சூழலுக்கு ஆபத்து என்று தீபாவளி உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் தடுக்கிறார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால் பண்டிகைகள் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் ஒரு நாள் உற்சாகத்தை ஏதாவது காரணம் சொல்லித் தடுக்காதீர்கள் என்பதுதான்.''

அயோத்தி தீர்ப்பு?

''நமது நாட்டில் பல பிரச்னைகள் தீர்க்கப்படாமலேயே இருந்தால் கூட நல்லது என்று சிலர் விரும்புகிறார்கள். அயோத்தியில் ராமர் பிறந்தார் என்பது ஹிந்துக்களின் - குறிப்பாக வடக்கே உள்ளவர்களின் ஆழ்ந்த நம்பிக்கை. அங்கே தொழுகைக்கான மசூதியை பாபர் கட்டினார் என்பது முஸ்லிம்களின் வாதம். இரு தரப்பிலும் நிலத்தின் மீதான தங்கள் உரிமையை நிலை நிறுத்திக் கொள்ள டாக்குமெண்ட்ஸ் கிடையாது. முஸ்லிம்களின் வருத்தம் அங்கே இருந்த மசூதியை இடித்தது தானே தவிர, நிலத்தின் மீதான நம்பிக்கை அல்ல. ஆனால் மசூதி இடித்ததற்கு கிரிமினல் வழக்குத் தனியாக நடந்து வருகிறது. சம்பந்தப்பட்ட பார்ட்டிகளிடம் உட்கார்ந்து பேசியும் முடிவுக்கு வரமுடியவில்லை. அரசியல் தீர்வும் காண முடியவில்லை. டாக்குமெண்ட்ஸ் இருந்தால் நீதிமன்றம் சட்டப்படி பிரச்னையை அணுகியிருக்கும். பல நூறு வருடங்களாகத் தொடர்ந்த உணர்ச்சிபூர்வமான விவகாரத்துக்கு ஒரு நியாயமான தீர்ப்பு கொடுத்திருக்கிறது நீதிமன்றம். ஒரு பஞ்சாயத்து என்று கூட வைத்துக் கொள்ளலாம். இன்னும் சொல்லப் போனால் அதிசயமான தீர்ப்பு. முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்ட மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் மசூதி கட்ட ஹிந்துக்களும், மீதி நிலத்தில் ராமருக்கு ஆலயம் கட்ட முஸ்லிம்களும் பரஸ்பரம் உதவி செய்தால் இரு பிரிவுகளிடையே இனி வரும் காலத்துக்கும் ஒற்றுமையை உருவாக்க வாய்ப்பு கிடைக்கும்.

- ப்ரியன்

மைலாப்பூர் B.M. சில்க் சாரீஸ் வழங்கும்



நவராத்திரி மற்றும் தீபாவளி சிறப்பு தள்ளுபடி 10% முதல் 20% வரை




ஸ்பெஷல் பேன்ஸி ஒர்க் டிசைன் சேலைகள்

ரூ. 750 முதல் ரூ. 25000 வரை

மற்றும் பல புதிய ரகங்கள்

9am to 9pm | Open on all Sundays

All Credit & Debit Card acceped

சில்க் மார்க் அங்கீகாரம் பெற்ற மைலாப்பூரில் உள்ள ஒரே ஸ்தாபனம்

SILK MARK

B.M. சில்க் சாரீஸ்

எண். 9, வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை - 4. போன்: 2461 2799, 2464 2799

ஆல்ஃபா மைண்ட் பவர்

ஆழ்மனதின் சக்தி!

ALPHA MIND POWER ™

AMP

"Unwind Your Mind & Empower Yourself"

மனோ சக்தி நிபுணர் டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்

அளிக்கும் ஒரு நாள் இந்தியாவின் பழம்பெரும் சித்தர்களின் சக்தியுடன் கூடிய ஒரு நாள் ஆல்ஃபா தியானப் பயிற்சி



- மன அழுத்தம் குறைக்க
- பண வரவை அதிகரிக்க
- உறவுகளை சீர்படுத்த
- குடும்பத்தில் அன்பு நிலவச் செய்ய
- நோய் தீர்க்க, நிம்மதியாகத் தூங்க
- பரீட்சையில் அதிக மார்க் வாங்க
- மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழ

தபால் மூலம் கற்கலாம்
ஆல்ஃபா மைண்ட் பவர்
ஆடியோ சிடி
மற்றும் பயிற்சிப்
புத்தகம் ஆங்கிலம்
மற்றும் தமிழில் தபால்
மூலம் பெறலாம்.

ஒரு நாள் பயிற்சி மட்டுமே!

ஆல்ஃபா தியான அனுபவம் இதோ ஒரு கடிதம்

எனக்கு திருமணமாகி 2 வருடங்களாகின்றன. இதுவரை குழந்தையில்லை. பிரசவம் பற்றிய பயம் இருந்ததால் நான் குழந்தை பெறுவதை தவிர்த்து வந்தேன். நான் ஆல்ஃபா பயிற்சி பெற்றதோடு குருஜியிடம் "ஆல்ஃபா மியூசிக் தொபி" பெற்றுக் கொண்டேன். அதற்கு பின் எனக்கு பிரசவ பயம் நீங்கி தற்பொழுது மூன்று மாதம் கர்ப்பமாக இருக்கிறேன். ஆல்ஃபாவிற்கு நன்றி! குருஜிக்கு நன்றி!!

திருமதி ராதிகா,
வேதாரண்யம்


அடுத்து வரும் பயிற்சி வகுப்புகள்

கோவை - 24.10.10, சென்னை - 31.10.10,
பெங்களூரு - 14.11.10, சென்னை - 28.11.10.

ஏ.எம்.பி.ஆர்பிசோ, 3வது தளம், 50, 51 ஆற்காடு ரோடு, சாலிகிராமம்,
சென்னை - 600 093. இந்தியா ஃபோன்:+91-44-23760007,
மொபைல் : 98416 98564 / 98414 02000 / 98412 72146
e-mail : amp@alphamindpower.net www.alphamindpower.net

கவிதையில்
எல்லாம் சொல்லிவிட
முடியாது
உன் அழகை!
எழுதும்போதே
கவடிக்கொண்டிருக்கும்
அழகு
உனக்கே உண்டானது!

- யுகபாரதி



கலவரம், கொண்டாட்டம், மரபு சார்ந்த கலைவிழாக்கள், அரசு நிகழ்வுகள்- எதைப் படமெடுத்தாலும் உங்கள் கவனம் மையத்தில் மட்டுமே நிலை பெற்றுவிடக் கூடாது. சுவாரஸ்யங்கள் மேடைகளில் மட்டுமல்ல; கூட்டத்திலும் காணக் கிடைக் கும் - ஊடகப் பயிற்சி வகுப்பில் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் சொன்னதை ஜனனி எப்பொழுதுமே மறப்பதில்லை. மேலும் உள்ளுணர்வின் உந்துதலை அவள் எப்போதும் புறக்கணிப்பதில்லை. எனவே தான் அகிலாவை இலக்காக்கி மைக்கோடு வந்தவள், கும்பலில் ஒருத்தியாக நின்று கொண்டிருந்த ஷர்மிலியை நோக்கி மைக்கை நீட்டினாள். தமது வழக்கமான ஆங்கிலத்தில் கேள்விகளை எறிந்தாள்.

''நீங்கள் யாரை ஆதரித்துப் பிரசாரம் செய்கிறீர்கள்? யாருக்கு வாக்களிக்க இருக் கிறீர்கள்?''

அலங்காரம் ஏதுமில்லாவிட்டாலும் ஒரு பூவைப்போல பார்வைகளைக் கோரு பவளாக நின்ற ஷர்மிலி கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் சொன்னாள்.

''சதீஷை'', ''சதீஷுக்கு.''

''ஏன்?''

''என் காதலன் அரவிந்தின் நண்பன் சதீஷ்.''

ஜனனி துடிப்பான உற்சாகத்தோடு, ''உங்கள் காதலர் அரவிந்த் இந்தக் கூட்டத் தில் இருக்கிறாரா?'' - ஜனனி மைக்கோடு தன்னையே 360 டிகிரியில் ஒரு சுழற்றுச் சுழற்றினாள்.

ஒளிப்பதிவாளர் ஜோசப் இரேனில் மேலெழும்பி, கூட்டத்தில் அரவிந்தைத் தேடினார்.


காதல் கேம்பஸ் 5

இத்தனை நேரமும் கலகலப்பும், கொண்டாட்டமும், கோஷங்களுமாக இருந்த கூட்டம் சட்டென்று நிசப்தமாகிவிட்டது.

இந்தத் திடீர் ரசவாத மாற்றத்தை சட்டென்று கிரகித்துக் கொண்ட ஜனனி, மைக்கை மீண்டும் ஷர்மிலியிடம் நீட்டினாள்.

''அரவிந்த் வரவில்லையா?''

''இல்லை அவன் வர மாட்



டான். கடந்த ஆண்டு விபத்தில் இறந்து போனான். நண்பர்களோடு பைக்குகளில் சென்றபோது இது நடந்தது. அவனது பிரிய மான நண்பன் சதீஷின் மடியில்தான் அவன் உயிர் பிரிந்தது.''

ஜனனி திரும்பி சதீஷைப் பார்த்தாள். ஜனனியின் அசைவுகளே இயக்கம் என்கிற புரிதலோடு பணியாற்றும் ஜோசப் கேம ராவை சதீஷுக்கு Zoom செய்தார்.

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து, சட்டென்று பாக்கெட்டிலிருந்த


வே.எழிலரசு



ரேபான் கறுப்புக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டான் சதீஷ்.

உதயகுமார் உட்பட எல்லா மாணவர்களும் இறுக்கமாக நின்றார்கள்.

உணர்வுகளின் வழித்தடத்தில் பயணிக்கும் பருவத்திலிருப்பவர்களை இன்னும் சிறிதுநேரம் அதே அலைவரிசையில் வைத்திருக்க விரும்பிய ஜனனி, மீண்டும் ஷர்மிலியை நோக்கி ''அரவிந்த் இறந்து ஒரு



வருடமாகி விட்டதே! உங்களுக்கு இன்னும் வேறு காதலர் கிடைக்கவில்லையா?''

''நான் இன்னமும் அரவிந்தையே காதலிக்கிறேன்.''

''இதை ஊடகத்தில் பகிரங்கமாகச் சொல்கிறீர்களே. பெற்றோர், உறவினர்கள் பற்றிய அச்சமில்லையா?''

''இல்லை. உங்களின் கருவிகளில் பதிவாகி என் குரல் காற்றின் அகண்ட வரிசைகளில் பயணிக்கும்போது, அந்தர வெளிகளில் அலைபாய்ந்து கொண்டிருக்கும் என் அரவிந்தின் ஆன்மாவுக்குக் கேட்க வேண்டுமென்றுதான் நான் இதைச் சொல்கிறேன்.'' உணர்ச்சிகளின் சங்கமிப்பில் தன்னைக் குவித்து வானத்தைப் பார்த்து இறைஞ்சுதல் தன்மையோடு ஒரு ஜெபத்தைப் போல் சொன்னாள், ''அரவிந்த் ஸ்டில் ஐ லவ் யூ. வெயிட் இன் ஸ்பேஸ்,டில் ஐ கம்.''

பெண்கள் எல்லோரும் கண்களில் கண்ணீர் வழிய நின்றார்கள். சதீஷ் தனது கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான். தரை பார்க்க நின்றான்.

கூட்டத்தின் ஆளுகை ஜனனியின் மூலமாக ஷர்மிலியிடம் போய் சிக்கிக் கொண்டதை மாற்ற உத்தேசித்து, உதயகுமார் தன் தோழர்கள் முதுகைத் தட்டினான்.

புரிந்துகொண்ட தோழர்கள் உதயகுமாரை கைலாகு கொடுத்துத் தூக்க, நண்பர்களின் தோள்களையே மேடையாக்கி நின்ற உதயகுமார், ''டியர் ப்ரெண்ட்ஸ்'' என்று சத்தமாக அழைக்க, ஜனனி ஓடி வந்து மைக்கை உதயகுமார் முன்னால் நீட்டினாள். ''நண்பர்களே நமக்குத் தேர்தலுக்கு நேரமாகிவிட்டது. நாம் வாக்குகளை அளிப்பதற்காக நமது கல்லூரிக்குச் செல்லவேண்டும். ஆனால் அதற்கு முன்னால் நமக்கு ஒரு முக்கிய கடமை இருக்கிறது.'' கூட்டத்திலிருப்பவர்கள் கொஞ்சமாக பழைய நிலைமை அடைய, ''கடந்த வருடம் நம்மோடு இருந்த அரவிந்த், இந்த ஆண்டு நம்மோடு இல்லை. நாம் எல்லோரும் நமது நண்பன் அரவிந்துக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம்.''

தனது காதலை வெளிப்படுத்த தான் வகுத்திருந்த திட்டம் ஷர்மிலியின் மீது படர்ந்த அனுதாப அலைகளால் இழுபட்டுச் சென்றதால் சோகமடைந்திருந்த அகிலா, கண்ணிமைக்கும் நேரத்தில் குழுமியிருந்தவர்களை மீண்டும் தன் வழிநடத்தலில் கொண்டுவந்துவிட்ட உதயகுமாரின் சாமர்த்தியத்தை மனத்துக்குள் வியந்தாள்.



● 'மந்திரப்புன்னகை' படத்தில்...

மௌன அஞ்சலியில் சங்கமித்தாள். ஜோசப் மீண்டும் கிரேனில் உயரச் சென்று, ஆயிரம் பேரின் மௌனத்தைப் படம் பிடித்தார்.

அன்று மாலை அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவு, ஒரு பெரிய திருப்பமாகவும் மாணவர்களில் பெரும்பாலோர் எதிர்பார்த்ததற்கு மாறாகவும் இருந்தது.

சதீஷ் டெபாசிட் இழக்க நேரிடும் எனப் பலரும் பந்தயம் கட்டியிருந்தார்கள்.

ஆனால் சதீஷ் கணிசமான வாக்குகள் பெற்றிருந்தான். தேர்தலில் தோல்வியடைந்தால், சதீஷ் தனக்கு எதிராகப் பிரசாரம் செய்தவர்களை ஆள் வைத்து அடிப்பான் என்றே இதுநாள் வரை எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சதீஷ், உதயகுமாரின் வெற்றி அறிவிக்கப்பட்டவுடன், உதயகுமாரின் கரங்களைப் பற்றி குலுக்கி வாழ்த்துச் சொன்னான்.

உதயகுமாரைச் சட்டென்று தன் தோள்களில் தூக்கிக் கொண்டான். ''மாணவர் தலைவர் உதய்குமார் வாழ்க'' என்று முழங்கினான். ஆனந்த், நவீனிடம் ஆச்சரியப்பட்டான். ''பரவாயில்லையே... உங்க ஆளு நாங்க எதிர்பார்த்த மாதிரி இல்லையே, ரொம்ப பெருந்தன்மையா இருக்கானே!''

நவீன் உதட்டைச் சுழித்தான். ''நம்பாதே ஆனந்த். அவன் பார்ன் பொலிடிஷியன்.''

சதீஷ் அகிலாவைத் தனியாக அழைத்துச் சென்று, பயாலஜி பிளாக் அருகே நிறுத்தி நன்றி சொன்னான்.

அகிலா, சதீஷின் கண்களையே பார்த்தாள்.

''எனக்கெதுக்கு தேங்க்ஸ் சொல்ற சதீஷ்?''

''நான் தோத்துட்டாலும் இது எனக்கு ஒரு கௌரவமான தோல்விதான். நான் இவ்ளோ வோட்டு வாங்குவேன்னு எதிர்பார்க்கவேயில்ல.''

''சதீஷ் உனக்கு வோட்டுப் போடணும்னு நான் யார்கிட்டயும் கேக்கலையே.''

''ஆனா நீ ஏற்பாடு பண்ண டி.வி.ரிலே என் இமேஜை மாத்திடிச்சு.''

''சதீஷ் நான் நினைச்சது ஒண்ணு. ஆனா நடந்தது வேற! எதுவும் நம்ம கையில இல்ல. எனக்குக் கூட நல்ல லெசன்தான். நாம என்னதான் அறிவோடு திட்டமிட்டாலும் சென்டிமெண்ட் எல்லாத்தையும்



சென்னை புன்னகை!

இந்திரா பிக்சர்ஸ் சார்பில் கரு.பழனியப்பன் இயக்கி தானே கதாநாயகனாக நடிக்கும் படம் 'மந்திரப்புன்னகை'. ''படப்பிடிப்பு முழுமையாக முடிந்த நிலையில், டப்பிங் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அனுமதி சிக்கல்களாலும், தயாரிப்புச் செலவுகளாலும் சென்னையில் படப்பிடிப்பு நடத்துவது குறைந்து வரும் இன்றைய சூழ்நிலையில் முழுக்க முழுக்க சென்னையிலேயே எடுக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார் கரு.பழனியப்பன்.

தொண்ணூறு நாட்களில் போதுமான பொருட்செலவில் எடுக்கப்பட்டிருக்கும் இப்படத்தில் நாயகி மீனாட்சி, ''தன் காட்சிகளே கிட்டத்தட்ட அறுபது நாட்கள் படமாக்கப்பட்டிருப்பதையும், நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள மந்திரப்புன்னகை படத்தில் நடித்தது தன் அதிர்ஷ்டம்'' என்றும் பூரிக்கிறார்.

''சந்தானம் தன் மற்ற படங்களில் இருந்து மாறுபட்ட ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் அனைத்தும் கதையோடும் அதன் கதாபாத்திரங்களோடும் இணைந்தே இருக்கும்.

வித்யாசாகரின் இசையில் பாடல்கள் அக்டோபரில் வெளியிடப்படுகிறது. திரைப்படம் நவம்பரில் வெளியிட திட்டமிடப்படுகிறது'' என்கிறார் இயக்குநர் கரு.பழனியப்பன்.

முழுங்கிடும்.''

அகிலா சொல்வதை ஒப்புக்கொள்வது போல் சதீஷ் தலையசைத்தான்.

''இப்ப உன் விஷயத்தையே எடுத்துக்க. சதீஷ் ஒரு ரௌடி, சாரி சதீஷ் உன் முகத்துக்கு நேராவே இப்படிப் பேச நானேன்னு தப்பா நினைச்சுக்காத...''

சதீஷ் தனது வழக்கமான குறுகுறுத்த புன்னகையுடன் கழுத்தில் புரள முடியாமல் தொங்கிக் கொண்டிருந்த சங்கிலியை வருடிக் கொண்டே ''உம் சொல்லு... சொல்லு...'' என்றான்.

''காலேஜ் முழுக்க அப்படி நினைச்சது. சதீஷ்-ன்னா முரடன். ஈவிரக்கம் இல்லாதவன். பெண்கள் கிட்ட நேர்ட் ரேட்டா பிஹேவ் பண்றவன்... இதுதான் இன்னிக்குக் காலைல வரையிலும் உன்னைப் பத்திய சித்திரம். ஆனா நீ உன் ப்ரெண்ட் அரவிந்துக்காகவும், ஷர்மிலிக்காகவும் அழுத பாரு. அங்க மாறிடிச்சு உன் இமேஜ்.''

கனத்த சங்கிலி படர்ந்திருந்த அவன் நெஞ்சின் மீது தன் விரலை ஊன்றி அகிலா அழுத்தமாகச் சொன்னாள். ''இந்தக் கல்லு லயும் ஈரம் இருக்குனு புரூவ் பண்ணிட்ட.''

''அந்த ஈரத்துக்குக் காரணம் நீதான் அகிலா. எப்ப நான் உன்னை முதன்முதலா பாத்தேனோ அப்போதிருந்து நான் கொஞ்சம் கொஞ்சமா மாறிட்டு வர்றேன்.''

அகிலா, சதீஷை அனுதாபத்தோடு பார்த்தாள். சதீஷ் தன்னை நிஜமாகவே காதலிக்கிறான் என்ற உண்மையை அவன் கண்களில் படிக்க முடிந்தது. தான் உதயகுமாரைக் காதலிப்பது தெரிந்தால், தேர்தல் வெற்றிக்கு வாழ்த்துச் சொன்னதுபோல, உதயகுமாருக்கு வாழ்த்துச் சொல்வானா? தனது காதலை இந்த நிமிடம் வரை, தான் உதயகுமாரிடம் வெளிப்படுத்தவில்லையே என்ற நிஜம் ஆழ்மனத்தில் வலியாக உருவெடுத்தது. சொல்லப்படாத காதல் என்பது ஊன்றப் படாத விதையல்லவா? ஊன்றப்படாத விதைக்கு உயிரோட்டம் எத்தனை நாட்கள் உண்டு? தன் காதலை உதயகுமாரிடம் சொல்லும் பொழுது, அவன் அதை ஏற்க மறுத்தால்? நீ காதலிக்கும் நபரைவிட, உன்னைக் காதலிக்கும் நபரை ஏற்றுக் கொள்வதே அறிவுள்ள பெண்ணுக்கு அழகு என்று ஒரு பழமொழி உண்டே. நான் அறிவுள்ள பெண் தானா? சே! ஓர் உண்மையான பெண் தனக்கும், தன் காதலுக்கும் உண்மையாக இருக்க வேண்டாமா? அப்படியானால் அறிவும் உண்மையும் இரு வேறு முரண்களா? அகிலா தன் மனம் தன்னிடம் நிகழ்த்தும் விசாரணையின் வெளிப்பாடாக ஓர் ஆழ்ந்த பெருமூச்சை வெளிப்படுத்தினாள்: ''சதீஷ் நீ வருத்தப்படுவ. ஆனாலும் நான் சொல்லித்தான் ஆக வேண்டும். ஐயாம் இன் லவ் வித் உதய்.''

சதீஷின் எதிர்வினை எப்படியிருக்குமோ என்ற ஐயத்துடன் அவனையே பார்த்தாள் அகிலா.

(தொடரும்)



உதயகுமாரைச் சட்டென்று தன் தோள்களில் தூக்கிக் கொண்டான். "மாணவர் தலைவர் உதயகுமார் வாழ்க" என்று முழங்கினான்.




புத்தக அலமாரி

பேசும் பிரம்புகள்

ஒரு மரப்பாச்சியின் மௌனப் பிரம்பு, ஆசிரியர்: கொற்றவன், வெளியீடு: ஊற்று பதிப்பகம், 1 சி/எ, பெரியார் பாதை, சூளை மேடு, சென்னை - 600 094. விலை: ரூ.50/-

கவிதைப் பயணத்தில் தொடர்தலை மட்டுமே கவிஞர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். கவிதையின் இருப்பை காலம்தான் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; கவிஞர்கள் அல்ல! என்கிற தீர்மானத்தோடு, 'ஒரு மரப்பாச்சியின் மௌனப் பிரம்பு' கவிதையாகியிருக்கிறது! இந்நூலை வாசிக்கும்போது மணம் கமழ் சோலைக்குள் சென்று வந்த நிறைவு ஏற்படுகிறது. கொற்றவனின் கவிதைகள் மௌனப் பிரம்புகளல்ல; பேசும் பிரம்புகளாய்ப் பிரதிபலிக்கின்றன.




ரமண பகவானும் திருக்கோயில்களும்... ஆசிரியர்: பி.ஆர்.குமார், வெளியீடு: விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 600 002. விலை: ரூ.55/- தொலைபேசி: 044-42634283.

பகவான் ரமணரின் ஆன்மிகப் பின்னணியைப் பற்றித் தெரிந்திருக்கும். பெரும்பாலோர்க்கு அவருடைய அற்புத நிகழ்வுகளின் பின்னணியைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவ்வாறான பல சுவையான நிகழ்வுகளை, பகவான் ரமணரின் தெய்விகத் தன்மையை மிக அழகாக பி.ஆர்.குமார் இந்நூலில் கட்டுரைகளாக ஆக்கியுள்ளார். அனைத்து அன்பர்களும் வாசித்து ரமணரின் அற்புதங்களை அறிந்து கொள்ளலாம்.



பறத்தலை விரும்பும் பறவைகள், ஆசிரியர்: க.அம்சப்ரியா, வெளியீடு: வ.செ.உ.பதிப்பகம், 63/5, பார்க்துகார், இராமாபுரம், சென்னை - 600 089. விலை: ரூ.40/- கைபேசி: 9884028376.

தம்மைச் சார்ந்தவர்கள் தரும் நெருக்கடிகளைச் சமாளித்துத் தமக்கான கல்வியைக் கற்க வேண்டும் என்கிற மாணவர்களின் நிலைக்கும், தங்கள் பிள்ளைகள் படித்து முடித்து வேலைக்குச் சென்று தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற பெற்றோர்களின் நிலைக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளைக் களைவதற்கான ஒரு முயற்சியாக அம்சப்ரியா இந்நூலை ஆக்கியுள்ளார். கட்டாயம் பெற்றோர்கள் வாசிக்க வேண்டிய நூல்.



- G.மகேஷ்

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்

எண்ணிய எண்ணங்கள் யாவும் ஈடேறும். ஆடை, ஆபரணங்கள் சேரும். சுபகாரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். கடன் பிரச்னை தீரும். வியாபாரத்தில் நல்ல வரு வாய் கிட்டும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு ஏற்படும். திறமைக் கேற்ற வெகுமதி கிட்டும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். படிப்பில் நல்ல மதிப்பெண்கள் பெறுவீர்கள்!

ரிஷபம்

மறைமுக எதிர்ப்புகள் அதி கரிக்கும். ஆரோக்கியம் விஷயத் தில் கவனம் தேவை. கடன் பிரச் னைகளால் சொல்ல முடியாத வருத் தத்துக்கு ஆளாவீர்கள். படிப்பில் அதிக கவனம் எடுத்துப் படித்து வருதல் நலம் தரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணலாம். நீண்ட காலம் விலகி இருந்தவர்கள் திரும்பி வந்து சேருவார்கள். ராகு/ கேதுவை வழிபட்டு வர சங்கடங் கள் தீரும்.

மிதுனம்

மனத்துக்கு நிறைவான வாரம். திருமணப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். கல்வி வளம் மேலோங் கும். வியாபாரத்தில் நல்ல அபி விருத்தி ஏற்படும். உடன் பிறந்தவர் களால் சந்தோஷமும் நற்பலனும் உண்டாகும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். நீண்டதூரப் பிரயாணம் செல்ல வேண்டியிருக் கும். ராகு/கேதுவை வழிபட்டு வந் தால் மனக்குழப்பம் நீங்கும்.

கடகம்

புதிய வேலைவாய்ப்பு தேடி வரும். கடன் பிரச்னை தீரும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வெளிநாடு செல்லும் யோகம் வந்து சேரும். குடும்ப வாழ்வு நன் றாக இருக்கும். மனப் பிரம்மை தீரும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குரு வழிபாடு செய்துவர நற்பலன் பெருகும்.

சிம்மம்

செல்வாக்கு உயர வேண்டிய தருணம். கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். உறவினர் களை விட்டுப் பிரிந்து செல்ல நேரி டும். குழந்தைகளால் சுபச் செய்தி ஏற்படும். உறவினர் வருகையால் குடும்பத்தில் சிக்கல் உண்டாகும். உடல்நிலை சீராகும். பண வசதி பெருகும். வியாபாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். ராகு/கேதுவை வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

கன்னி

உடல்நிலையில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். கடன் தொல்லை அதிகரிக்கும். மறை முக எதிர்ப்புகள், தொல்லைகள் உருவாகும். செலவுகள் அதிகரிக்கும். வழக்கு இழுபறி ஆகும். கல்வியில் அக்கறை எடுத்துப் படித்து வருதல் நலம் தரும். வியாபாரத்தில் கணிச மான லாபம் கிட்டும். ராகு/கேது/ குரு/சனியை வழிபட்டு வர சங் கடங்கள் குறையும்.

துலாம்

புண்ணிய ஸ்தலம் சென்று மகான்களைத் தரிசனம் செய்வீர்கள். பணவசதிக்குக் குறைவு இருக்காது. இல்லற வாழ்வு மகிழ்ச்சியுடையதாக இருக்கும். குழந்தைகள் வழியில் மன சந்தோஷம் கிட்டும். கடன் தொல்லை தீரும். வம்பு வழக்கு முடிவுக்கு வரும். கல்வி வளம் மேன்மை பெறும். புதிய தொழில் அபிவிருத்தி ஏற்படும். சனி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

மகரம்

தடைகள் விலகித் திருமண காரியம் கைகூடும். வெளியூர் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். பணக்கஷ்டம் இருக்காது. சொத்து வாங்கும் யோகம் வந்து சேரும். வழக்கு வெற்றி பெறும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். வாகன யோகம் கிட்டும். சகோதரர் மூலம் நற்பலன் கிட்டும். புதிய தொழில் தொடங்க ஏற்ற தருணம். மன அமைதி ஏற்படும்.

விருச்சிகம்

எதிலும் கவனத்துடன் செயல்படுவது நல்லது. வாகனங்களில் செல்லும்போது உஷாராகச் செல்லவும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் வரும் என்பதால் யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போடுவதோ, பெரும்தொகையைக் கடனாகக் கொடுப்பதோ கூடாது. தேவை இல்லாத பிரச்னைகள் தலைதூக்கும். ராகு/ கேது/குருவை வழிபட்டு வர சங்கடத்திலிருந்து விடுபடலாம்.

கும்பம்

பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். வேலைப் பளு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். நீண்டகாலம் முடிவு பெறாமல் இருந்த வழக்கு வெற்றி பெறும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கடன் சுமை தீரும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

தனுசு

உல்லாசப் பிரயாணம் செல்ல நேரிடும். கல்வி வளம் மேலோங்கும். உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. வழக்கு வெற்றி பெறும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். உத்தியோக உயர்வு, இடமாற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சுபகாரியம் கைகூடும். ராகு/கேது/சனியை வழிபட நற்பலன் அளிக்கும்.

மீனம்

உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். கல்வி வளம் மேலோங்கும். பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. பண விரயம் குறையும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். சனி/ராகு/கேதுவை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும். ●

பாலிமர் டி.வி. சேனலில், மல்லிகா பத்ரிநாத் தொகுத்து வழங்கும், 'சுவையான சமையல் மிக நன்றாக உள்ளது. குறிப்பாக 14.9.10 அன்று சொன்ன 1. ஓட்ஸ் ரவா பொங்கல் 2. சிக்கி மற்றும் ரஸ்க் சீஸ் சாட் ஆகியவை மிகத் தெளிவாக இருந்ததுடன் பிசிறு இல்லாமல் ப்ரொபஷனலாகத் தொகுத்து வழங்கியது மனத்துக்கு நிறைவாய் இருந்தது. கஷ்டமான சமையலைக் கூட எளிதாகப் பொறுமையுடன், அக்கறையாகத் தெளிவான ஆலோசனைகளுடன் பனிச்சென வழங்குவது இவரின் ப்ளஸ் பாயிண்ட்!

– பட்டு ஸ்ரீகிருஷ்ணன், வெங்கடபுரா



பொதுவாகவே எங்கள் குடும்பத்தில் டி.வி.யில் வரும் அனைத்துப் பாட்டு நிகழ்ச்சிகளையும் போட்டி போட்டுக் கொண்டு சேனலை மாற்றி மாற்றிப் பார்ப்பது வழக்கம். அதுவும் என்னைப்போல் பணி ஓய்வு பெற்ற இல்லத்தரசிக்குக் கடந்த பதினைந்து வருடங்களாக ஒளிபரப்பாகிவரும் 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சி எனக்குப் பிடித்த (வயதானவர்களும் கலந்துகொண்டு வரும்) நிகழ்ச்சி. பல உள்ளங்களின் தாம் மேடையேறிப் பாட முடியவில்லையே என்ற ஏக்கத்தைத் தீர்த்து, திறமைகளை வெளிக்கொணர்கிறது. அதை நல்லமுறையில் நகைச்சுவையோடும், பேச்சே பாடலாகவும் கொண்டு தனது கவர்ச்சிமிகு குரல் வளத்தோடு நடத்தி வரும் பி.ஹெச். அப்துல்ஹமீது தயாரிப்பாளரான Galaxy நிறுவன இயக்குநர் ரமேஷ் பிரபா இருவருக்கும் அந்தப் பெருமையும், புகழும், நன்றியும் போய் சேரும்.

– ஜெ.சாந்தா ஈஸ்வரன், சென்னை - 83

பொதிகை சேனலின் கண்ணியமிக்க செய்திகள் உச்சரிப்பு மிகவும் அருமையாக இருக்கிறது. அதுமட்டும் இல்லாமல் செவ்வாய்தோறும் இரவு 9 மணிக்கு வாதம் - விவாதம் ஒரு பயனுள்ள நிகழ்ச்சி. விவாதத்தில் பேசுபவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பேசுகின்றார்கள். கல்லூரி மாணவனும் மாணவியும் காதல் பற்றிப் பேசும் போது நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கின்றது. வெள்ளிக்கிழமைதோறும் இரவு 7.45க்குப் போடும் எமர்ஜென்சி ஆக்ஷன் 108. மிக அமர்க்களமாக இருக்கின்றது. இன்னும் பல சுவைகளைத் தாண்டி பல வருடங்களாக பொதிகை ஓடிக் கொண்டிருக்கிறது என்றால் காரணம் நடுநிலை.



– எ.டபிள்யூ.ரபீ அஹமத், சிதம்பரம்

விசிலடிச்சான்

'சிவாஜி - எம்.ஜி.ஆர். படங்களுக்கு இடையே கடும்போட்டி நிலவிய காலத்தில் எம்.ஜி.ஆர். வந்தாலே விசில் பறக்கும். இதனைப் பொறுக்காத சில பிரகஸ்பதிகள் எம்.ஜி.ஆர். ரசிகர்களை விசிலடிச்சான் குஞ்சுகள் என கிண்டலடிப்பதுண்டு.

அதே நிலையை இன்று கிரிக்கெட்டிலும் சந்திக்கிறோம்...

குறிப்பாக, தென் ஆப்பிரிக்காவில் சேம்பியன் லீக் - டி-20 போட்டிகளில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வாழ்த்தி, அதே சமயம் ரசிகர்களைத் தூண்டும் விதத்தில் 'விசிலடியுங்க' என ஒரு விளம்பரம் ஒளிபரப்பாகிறது. இது எம்.ஜி..ஆர். கால ரசிகர்களை நினைவு படுத்துகிறது. அன்றுபோல் இன்றும்

சேனல் சாய்ஸ்

குஞ்சுகளா?!



பிரசுரமாகும் ஒவ்வொரு விமர்சனத்துக்கும் ரூ.50 சன்மானம்

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தீவிர ரசிகர்களும் விசிலடிக்கும்போது, மற்ற அணியினரின் ரசிகர்களால், விசிலடிச்சான் குஞ்சுகள் என கிண்டலடிக்க வாய்ப்பு உண்டு! ஆக இதனை மனத்தில் கொண்டு, சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகிகள், இந்தியாவில் நடக்கப்போகும் ஐ.பி.எல்-4 போட்டிகளின் போதாவது விளம்பரத்தை மாற்றி அமைக்க வேண்டும்! முன்வருவார்களா?!

– ராஜேஸ்வரி, பெங்களூரு

HBO, Star Movies போன்ற ஆங்கிலப் பட டி.வி.கள் ஆங்கிலத்திலேயே படம் ஒளிபரப்பினாலும், படம் ஓடும்போது கதாபாத்திரங்கள் பேசும் உரையாடல்கள் ஆங்கிலத்திலேயே சப்-டைட்டில்களாக வெளியிடப்படுகின்றன. இதனால் ஆங்கிலம் எழுத படிக்கத் தெரிந்த, காது கேளாதவர்களுக்கும் மட்டுமின்றி, வயோதிகர்கள், என்னைப் போன்று அரைகுறை ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கும் வசனத்தைப் படித்துப் படக் கதையை நன்கு புரிந்துகொண்டு படத்தை ரசிக்க முடிகிறது. அதேபோல் தமிழ்ப்படங்களை தமிழக டி.வி.க்கள் காது கேளாதவர்களுக்காகத் தமிழில் சப்-டைட்டிலாக வெளியிட்டால் வரப்பிரசாதமாக அமையும்.

– கா.வெ. வீரப்பன், திருச்சி

டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எதுவாயினும்... 'சேனல் சாய்ஸ்' என்று குறிப்பிட்டு எழுதுங்க. kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம்.





வீட்டில் இருந்தபடியே

படிக்கணும்னு ஆசைப்பட்ட நேரம் வீட்டுல வசதியில்லை. இப்போ வசதி யிருக்கு. ஆனா, இந்த வயசுல ஸ்கூல்ல சேர்க்க மாட்டாங்க. என் பிள்ளைங்களைக் கேட்டுப் படிச்சிக்கலாம்னா நமக்குத் தேர்வு யார் நடத்துவாங்க... என்று யோசிப்பவர்களா நீங்கள்?

வீட்டுல வசதி கிடையாது. குடும்பத்தை நான்தான் கவனிக்கணும். வேலைக்கும் போயாகணும். ஆனா, படிக்கணும்னு ஆசை இருக்கா? ஸ்கூலுக்கோ, டுடோரியல் மையத்துக்கோ போகறதுக்கு நேரம் கிடையாது. ஆனால், பள்ளிப்படிப்பை முழுசும் முடிக்கணும்னு ஆசைப்படறீங்களா... உங்களுக்கான கல்வி மையம்தான் உத்திரப்பிரதேசத்திலுள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஓபன் ஸ்கூல் (NIOS).

தேசிய அளவிலான இந்தக் கல்வி நிலையத்தில் படிக்க நாட்டில் எந்த மூலையில் இருந்தாலும் விண்ணப்பிக்கலாம். இது முற்றிலும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையம். இங்கு படித்து முடித்து கிடைக்கும் சான்றிதழை வைத்துக் கொண்டு நாட்டில் எந்தப் பல்கலைக் கழகத்திலும் பட்டப் படிப்பைத் தொடரலாம்.

இந்தத் திறந்தநிலைப் பள்ளிக்கு நாடு முழுவதும் பதினொரு முக்கிய நகரங்களில் மையங்கள் செயல்படுகின்றன. இதுதவிர 3367 பயிற்சி மையங்கள் உள்ளன. தற்போது இந்தக் கல்வி நிலையத்தில் உயர்நிலை, மேல்நிலைக் கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 15 லட்சம்.

யார் யார் சேரலாம்?

பள்ளியில் இடைநின்ற மாணவர்கள்,

தொழிற்கல்வி படிக்கலாம்!





பள்ளியில் படிக்காத மாணவர்கள் இங்கே தொலைநிலைக்கல்வி மூலம் படிக்கலாம். வயது 14 பூர்த்தியாகியிருந்தால் போதும்.

இங்கே பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு, தொழிற் படிப்பு, ஸ்போக்கன் இங்கிலீஷ் போன்ற தனிப்பட்ட செல்ஃப் இம்ப்ரூவ்மெண்ட் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

பத்தாம் வகுப்பு படிக்க விண்ணப்பிப்பவர்கள் குறைந்தபட்சம் ஐந்து பாடங்களைக் கண்டிப்பாகப் படித்தாக வேண்டும். இதில் குரூப் ஏ, குரூப் பி என்னும் இரண்டு பிரிவுகள் உள்ளன. குரூப் ஏ-வில் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி உட்பட 17 மொழிப்பாடங்கள் உள்ளன. மாணவர்கள் விரும்பும் ஏதாவது ஒரு மொழிப் பாடத்தையோ, இரண்டு மொழிப் பாடங்களையோ தேர்ந்தெடுத்துப் படிக்கலாம்.

குரூப் பி பிரிவில் கணிதம், அறிவியல், சமூக அறிவியல், பொருளியல், பிசினஸ் ஸ்டடீஸ், ஹோம் சயின்ஸ், சைக்காலஜி போன்ற 10 பாடங்கள் உள்ளன. மேல்நிலைக் கல்வி பாடப் பிரிவில் இதேபோல் இரண்டு பிரிவின் கீழ் பாடங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், மேல்நிலைக் கல்வி படிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், பத்தாம் வகுப்பில் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்த மாணவர்களுக்குக் குறைந்த பயிற்சிக் கட்டணத்தில் தொழிற்கல்வி படிக்கவும் இந்தக் கல்வி நிலையம் வழிவகை செய்கிறது.

எட்டாம் வகுப்பு படித்துவிட்டு, குடும்பச் சூழ்நிலை காரணமாக எலக்ட்ரீஷியன், பிளம்பர், மெக்கானிக்கல் போன்ற தொழில்களைச் செய்துகொண்டு இருப்பவர்களுக்குத் தங்கள் தொழில் சார்ந்த சான்றிதழ் இருக்காது. அதனால், அவர்கள் கடைசிவரை அரசுப் பணிக்கோ, பொதுத்துறை நிறுவனங்களுக்கோ பணிக்குச் செல்ல முடியாது. ஆனால், இந்தக் கல்வி நிலையத்தில் திறந்தநிலைப்

சத்யன்

படிப்பாக ஆறு மாதப் பயிற்சி, ஒரு ஆண்டுப் பயிற்சி மற்றும் குறைந்த வாரப் பயிற்சிகளாகப் பல தொழிற்கல்வி பயிற்சி அளிக்கப்படுகின்றன.

ஏற்கெனவே தொழில் தெரிந்திருக்கும் மாணவர்களும், தொழில் அறிவு இல்லாத மாணவர்களும் இந்தப் பயிற்சியில் சேர்ந்து படிக்கலாம்.

பயிற்சியில் தேர்ச்சி பெற்று, இந்தக் கல்வி நிலையம் மூலமாகக் கிடைக்கும் சான்றிதழ் மூலம் நாட்டில் பெரிய பெரிய தொழில்துறை நிறுவனங்கள், அரசுத் துறைப் பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.



ஓர் ஆண்டுப் படிப்பாக ஆங்கில தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து, ஹிந்தி டைப்ரைட்டிங், சுருக்கெழுத்து இது போன்று பல்வேறு மொழிகளுக்குத் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க மாணவர்கள் பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இரண்டாண்டுப் பயிற்சியாக டிப்ளமோ இன் ரேடியோலாஜி படிப்பு கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இப்படிப்புக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் கண்டிப்பாக பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இது தவிர கிராம சுகாதாரம், மகளிர் மேம்பாடு குறித்த சான்றிதழ் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இப்படிப்புக்கு விண்ணப்பிக்க நான்காம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது. இது தவிர ஆறு மாதகாலப் பயிற்சியாக எலக்ட்ரிக்கல், மோட்டார் ரீவைண்டிங், ரேடியோ பழுதுபார்த்தல், டெய்லரிங், டி.வி. பழுதுபார்த்தல், உடை தயாரித்தல், அழகுப் பயிற்சி போன்றவை கற்றுத் தரப்படுகின்றன. இந்தப் பயிற்சிக்கு எட்டாம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது.

இதேபோல டி.டி.பி. மற்றும் கணினி ஹார்டுவேர் 6 மாதப் பயிற்சி பெற மாணவர்கள் குறைந்தபட்சம் பன்னிரண்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.

குறைந்த கட்டணம், நிறைந்த கல்வி, கல்வி நிலையங்களுக்குச் சென்று படிக்க வேண்டியதில்லை. புத்தகங்கள் உங்கள் வீடு தேடி வரும். வேலைவாய்ப்பு அதிகமுள்ள தொழிற்கல்வி... இவை அனைத்தையும் மொத்தமாக வழங்கும் சிறந்த ஒரு திறந்தவெளிப் பள்ளியாகச் செயல்படுகிறது நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஓபன் ஸ்கூல்.

மேலும் விவரங்களுக்கு:

http://www.nios.ac.in/



ஆத்மா!



அருள்வாக்கு

ஆனந்தம் இருக்கிறதென்றால் அதை அனுபவிக்கிற ஆசாமியும் ஒருத்தன் இருந்தாக வேண்டும். ஆனால், அவன் ஆனந்தத்துக்கு வேறாக இருந்துகொண்டு அதை அனுபவிப்பவன் என்றால், அப்போது த்வைதம் வந்துவிடும். த்வைதம் வந்துவிட்டால் பயந்தான். அப்புறம் ஆனந்தம் எப்படி இருக்க முடியும். ஆனபடியால் அந்த ஆஸாமி தானே ஆனந்த ஸ்வரூபியாய் இருக்கவேண்டும்.

அந்த ஆஸாமியைத்தான் ஆத்மா, ஆத்மா என்று சொல்வது. ஆத்மா என்றால் 'தான்.'

தான் என்று இதுவரைக்கும் மனஸை நினைத்துக் கொண்டிருந்துவிட்டோம். இதன் அனுபவங்களையே நமது சொந்த அனுபவமாக நினைத்தோம். இதுகளைப் பெறுவதில் தான் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்கிறாற்போல், ஆனந்தத்துக்கு பதில் துக்க பரம்பரையை சம்பாதித்துக் கொண்டோம்.

இதிலே பெரிய துக்கம் நிஜத்தைத் தெரிந்து கொள்ளாமல் பொய்யையே நிஜமாக நினைத்ததுதான்.

மனஸை 'தான்' என்று, அதாவது அதுதான் நம் நிஜமான ஸ்வரூபமென்று நினைத்தது தப்பு அல்லவா? பொய்யல்லவா? அந்த மனஸ் அற்றுப்போய் விடுவது என்றும் ஒரு நிலை இருக்கிறதே! தூக்கத்தில், க்ளோரோஃபாரத்தில், ஸமாதி நிலையில் மனஸ் அற்றுத் தானே போய் விடுகிறது? அப்போதும் நாம், அதாவது, 'தான்' என்னும் ஆத்மா இருக்கிறதே! ஆகையால் மனஸை நாமாக நினைத்தது தப்பு, அது பொய் என்று நிச்சயமாகத் தெரிகிறது. ஆத்மாவை அறிவது - அதாவது ஆத்ம ஞானம் - தான் மெய்யை அறிவது. நாம் இதுவரை 'நாமாக' நினைத்த மனஸ் பொய்யென்று தெரிந்தபின், நிஜ 'நாமா'ன ஆத்மாவைத் தெரிந்து கொள்ள வேண்டியதுதானே நாம் செய்ய வேண்டியது?

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

''தலைவர் எலக்‌ஷன்ல
தோத்துட்டு என்ன பண்ணறார்?''
'''சொத்து'க்கு லாட்டரி அடிக்கறார்''

- சாயம் வெ.ராஜாராமன்



''சமைக்கிறதுக்கு முன்பே
சிக்கன் கறி சூடாக இருக்கே, எப்படிப்பா!''
''இது நெருப்புக் கோழிக்கறி சார்.''

- அ.யாழினி பர்வதம்,
சென்னை.



''பறவைகளுக்கும் மனுஷனுக்கும்
என்ன வித்தியாசம்?''
''பறவை முட்டை போட்டு 'குஞ்சு'
பொரிக்கும்; மனுஷன் 'முட்டை'யையே
பொரிச்சுடுவான்!''

- வெ.சீதாராமன்,
சென்னை.



''இடைத்
தேர்தலை
சமூக வளர்ச்சிக்கு
'யூஸ்' பண்ணிட்டியா...
என்ன சொல்ற?''
''பிரியாணி வேணாம்;
பணம் வேணாம்;
பிள்ளைக்கு
எல்.கே.ஜி.சீட்தான்
வேணும்னு கறாரா
சொல்லிட்டேன்!''

- பி.ஜி.பி.இசக்கி,
நெல்லை.



''மாப்பிள்ளையோட அப்பாவுக்கு செருப்புக் கடை இருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''பெண்ணுக்கு 299.99 கிராம் நகை போடச் சொல்றாரே!''

- லீலாஜி, திருச்சி.



''எங்க மாப்பிள்ளை தலை தீபாவளிக்கு கார்ல வந்தார். முன் தீபாவளிக்கு பைக்ல வந்தார். போன தீபாவளிக்கு சைக்கிள்ல வந்தார். இந்தத் தீபாவளிக்கு...''

''நடந்து வந்தாரா?''

''ஹூம்... ஜாமீன்ல வந்தார்''

- தக்கோலம் அன்புமணி

இடைத் தேர்தலில் எல்.கே.ஜி. சீட்!





எப்போது நாங்கள் ஊரிலிருந்து வந்தாலும் எங்கள் அம்மா ஆரத்தி எடுப்பார். சிறு குழந்தைகளுக்குச் சாதம் ஊட்டியதும் அந்தப் பாத்திரத்தையே குழந்தையைச் சுற்றி மூன்று தடவை சுற்றுவார். வீட்டுக்கு உறவினர் யாரும் முதன்முறையாக வந்தால் புடைவை அல்லது ஆண்களுக்கு ஷர்ட், டீ ஷர்ட் புதிதாக வாங்கிக் கொடுப்போம்.

முக்கியமான தினங்களில் வாசலில் மனைக் கோலம் போட்டு செம்மண் இட வேண்டும்; வீட்டுக்கு யார் வந்தாலும் வாசல்வரை வந்து வழியனுப்புவோம்.

ஊருக்குக் கிளம்பும்முன்பு ஒரு பேப்பரில் சிறிது அரிசி, பருப்பு, வெல்லம் போட்டுக் கட்டி பெட்டியின் மூலையில் போடுவார் என் அம்மா. காலையில் எழுந்ததும் முதலில் சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்து வணங்குவோம். குளித்த பிறகு துளசி பூஜை செய்து அந்த மண்ணை நெற்றியில் இடுவோம்!

- மரகதம் ராகவசிம்மன்,
ஹைதராபாத்



பிரசுரமாகும் ஒவ்வோர் அனுபவத்துக்கும் ரூ.50 சன்மானம்!



செண்டிமெண்ட்

விடிந்ததும் விடியாத அதிகாலைப் பொழுதில் எழுந்து,
'கங்கை நீரே, கோதாவரியே, கொல்லைப் பிடிசாணமே,
அள்ளித் தெளிக்கின்றேன் ஐஸ்வர்யம் பெருக வேண்டும்.
கரைத்துத் தெளிக்கின்றேன் கைலாசம் போக வேண்டும்.
இருளோடு போ மூதேவியே, பொருளோடு வா ஸ்ரீதேவியே'

என்று கூறி, சாணம் தெளித்துக் கண் நிறைய வாசலில் கோலமிட்டு அந்தக் கோலம் திருப்தியாக இருந்தால்தான் எனது அன்றையப் பொழுது நன்றாக விடிந்ததாக எண்ணுவேன். இது என்னுடைய நம்பிக்கை. கோலம் சற்றே கோணலாகிவிட்டாலும் கூட அன்றைய நாள் அவ்வளவு சிறப்பாக இருக்காது என்று நினைப்பேன்.

- இ.வள்ளிநாயகி, காரைக்கால்

என்னுடைய 'சென்டிமெண்ட்', வருடா வருடம் புதுவருடம் ஆரம்பிக்கும் முன்பே முருகன் படம் போட்ட ராணிமுத்து காலண்டரை என் தங்கை வாங்கி அனுப்புவாள். நான் எந்த ஊரில் இருந்தாலும் சரி. 25 வருடங்களாக அவள் வாங்கி அனுப்பும் தேதி கிழிக்கும் ராணி முத்து காலண்டரைத்தான் நான் உபயோகிப்பேன். அவள் கையால் வாங்கித் தந்தால் அந்த வருடம் முழுவதும் எனக்கு, நல்ல நாட்களாகக் கழியும் என்கிற அதீத நம்பிக்கை. வேறு எந்தக் காலண்டரையும் நான் வாங்க மாட்டேன். என் சமையலறையில் அந்த முருகன் ராணி முத்து காலண்டரைத்தான் ஆணியில் மாட்டிக் கொள்வேன். இன்றுவரை அது தொடர்கிறது. ஜனவரி முதல் தேதிக்குள் எனக்கு அனுப்பிவிடுவாள்.

- வத்சலா சதாசிவன், சென்னை



வாசகர்களே! உங்களோட சென்டிமென்ட்! குடும்ப நம்பிக்கைகள் என்ன? எழுதுங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்புங்க.

பொருளோடு வா ஸ்ரீதேவியே...



வெற்றி அருளும் விநாயகர்

எங்கள் இல்லத்தில் பூஜை அறையில், வெற்றி தரும் வடக்கு நோக்கி தொட்ட காரியங்கள் எல்லாம் துளிர்விட அருளும் ஒரு விநாயகர் படம் உள்ளது. குடும்பத்தில் உள்ளவர்களுக்கான வேலை நியமன உத்திரவு, ஊதியம், போனஸ் காசோலைகள், தேர்வுக்குரிய ஹால்-டிக்கெட்டுகள், பத்திரிகைகளுக்கான படைப்புகள் எதுவாயினும் மனமுருகப் பிரார்த்தனை செய்து இப்பிள்ளையார் படத்தில் சாய்த்து ஓர் இரவு முழுமையும் வைத்திருப்போம். மறுநாள் காலை எடுத்துப் பயன்படுத்துவோம். வெற்றியே தொடர்ந்து கிடைக்கிறது. மூன்று தலைமுறைகளாகத் தொடரும் இந்த அதிசயம்தான் எங்கள் குடும்ப சென்டிமெண்ட்!

- ஆர்.கே.சுந்தரம், வடபழனி


மூலதன மந்திரம்

சிறுதொழில் தொடங்க ரூ.10,000?

எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

ரூபாய் பத்தாயிரம் முதலீட்டில் வீட்டில் இருந்தவாறே சிறுதொழில் ஒன்றைத் தொடங்கி நடத்த விரும்புகிறேன். தங்களது வழிகாட்டுதல் தேவை.

சிறுதொழில்களை தொடங்கும்போது நீங்கள் வசிக்கும் இடத்தில் எந்தவிதமான பொருட்களின் தேவைகள் இருக்கின்றன என்று நன்கு கவனித்து அதற்கு ஏற்றாற் போன்ற ஒரு தொழிலை ஆரம்பிப்பது நல்லது. சிறு முதலீட்டுத் தொழில் என்பதால் முடிந்த வரை கடன் கொடுக்காமல் இருப்பது நல்லது. உங்களுடைய பெரும்பான்மையான கஸ்டமர்கள் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களாக இருக்க வாய்ப்பு உள்ளதால் வியாபாரத்தைப் பெருக்குவதாக நினைத்தும், தயவு தாட்சண்யம் பார்த்தும் கடன் கொடுத் தீர்கள் என்றால் கடனைக் கறாராக வசூலிக்க நினைக்கும்போது அக்கம் பக்கம் உள்ள நபர்களின் பகையைச் சம்பாதிக்க நேரிடும். கறாராக வசூலிக்க முடியாவிட்டால் தொழில் நசிந்து போகும். உணவுப் பொருட்கள் (அப்பளம், ஊறுகாய் போன்றவை), அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை இந்த முதலீட்டில் செய்யலாம். உங்கள் முயற்சி வெற்றியடைய என்னுடைய நல்வாழ்த்துக்கள்.




டி. பச்சமுத்து, கிருஷ்ணகிரி

தபால் நிலையங்களில் உள்ள பப்ளிக் பிராவிடண்ட் ஃபண்ட் எனப்படும் பி.பி.எஃப். (PPF) பணம் சேமிப்பதால் கிடைக்கும் நன்மைகள் என்ன?

ஒரு நிலையான வேலையில் இருக்கும்

உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பலா KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், ஊ

டி.பாலசுந்தரம்



நபருக்கு அவரது நிறுவனத்தில் பி.எஃப். பிடிக்கப்படுகிறது. நிலையான வேலையில் இல்லாத, சொந்தத் தொழில் செய்கின்ற நபர்களுக்கும் உதவும் வகையில் ஒரு நீண்ட நாள் காண்டிராக்ட்சுவல் (ஒப்பந்தரீதியாக 15 வருட காலத்துக்கான) சேமிப்புத் திட்டமாக



உருவாக்கப்பட்டதுதான் பி.பி.எஃப். இதுபோன்ற தொழிலில்/வேலையில் இருக்கும் நபர்களுக்கு இது ஓர் ஒப்பந்த முறை சேமிப்பு. ஆகவே கட்டாயமாக பணம் செலுத்தி சேமிக்கும் எண்ணத்தை உருவாக்கும் திட்டமாக இது தனி நபர்களுக்கு உதவுகிறது. குறைந்த பட்சம் 500 ரூபாயும் அதிகபட்சமாக 70,000 ரூபாயும் ஒரு வருடத்தில் இந்தக் கணக்கில் செலுத்தலாம். அந்தத் தொகைக்கு வருமான வரி சட்டத்தில் 80சி பிரிவின் கீழ் வரிவிலக்கு பெறலாம். பி.எஃப். கணக்கைவிடச் சிறிய அளவு குறைவான வட்டியே பி.பி.எஃப். கணக்குக்குத் தரப்படுகிறது. நீண்ட நாள் சேமிப்புத் திட்டமாகையால் பி.பி.எஃப். கணக்கிலிருந்து உங்கள் தேவைக்கேற்ப முதல் ஆண்டு முடிவில் உள்ள தொகையில் 25 சதவிகிதம் வரையும், ஆறாம் ஆண்டு முடிவில் உள்ள தொகையில் 50 சதவிகிதம் வரையும் லோன் பெற்றுக் கொள்ளலாம். 15 வருட காலத்துக்குப் பின்னர் நீங்கள் கணக்கை நீட்டிக்க நினைத்தால் மேலும் ஐந்து வருட காலத்துக்கு நீட்டிக்கலாம். அப்போது கணக்கில் உள்ள தொகையில் 60 சதவிகிதம் வரையில் திரும்பப் பெற்றுக் கொண்டு மீதியுள்ள 40 சதவிகிதத் தொகையைக் கொண்டே கணக்கைத் தொடரலாம். மொத்தத்தில் பி.பி.எஃப். நிலையான வேலையில் இல்லாத தனி மனிதர்களுக்கு நீண்ட நாள் சேமிப்புக்கான வருமான வரி விலக்குடன் கூடிய ஒரு வரப்பிரசாதம். ஏற்கெனவே பி.எஃப். கணக்கு இருந்தாலும் விருப்பப்பட்டால் இந்தக் கணக்கின் மூலமாகவும் சேமிக்கலாம். ஆனால் பி.பி.எஃப். திட்டம் நியூ பென்ஷன் ஸ்கீம் (என்.பி.எஸ்.) என்ற புதிய திட்டம் பாபுலர் ஆனதற்கு பின்னர் நிறுத்தப்படலாம்.

alki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில்
ரியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.



8

துக்காராம் உருவத்தில் பாண்டுரங்கர்!

அருண் சரண்யா

சீக்கியர்களின் புனித நூலில் கூட மகான் துக்காராமின் அபங்கங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பது எங்களுக்கு வியப்பான செய்தியாக இருந்தது.

''அது எப்படி?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான் ஜருகண்டி.

''சீக்கிய மதத்தின் நம்பிக்கை இதுதான். அதாவது ஒரு கட்டத்தில் தன் மனதுக்கினிய புனிதர்களுக்குள் இறைவன் புகுந்துகொள்கிறான். அதற்குப் பிறகு அவர்கள் வாயில் இருந்து வெளியாகும் சொற்களுக்கு அவர்கள் காரணம் இல்லை. இறைவன்தான் அவர்கள் மூலமாகப் பேசுகிறான். இதுதான் சீக்கியர்களின் நம்பிக்கை. அந்த விதத்தில் சீக்கிய மதத்தைச் சேராத துக்காராமின் தெய்விகத் தன்மையையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு சிறப்பு செய்திருக்கிறார்கள். துக்காராம் வெளிப்படுத்திய கருத்துகளும் சீக்கிய மதக் கருத்துகளும் கூட பலவிதங்களில் ஒத்திருந்ததும் ஒரு காரணம்'' என்றார் நெகிழ்ச்சியுடன்.

''அட, துக்காராமின் பெருமை அந்தளவுக்குப் பரவியிருந்ததா?'' என்று ஜருகண்டி பரவசப்பட்டான்.

துக்காராமின் பெருமை வெனிஸ் வரை கூட பரவியிருக்கிறது என்ற ஒரு விவரமும் பின்னர் தெரியவந்தது.

உலகளவில் அங்கீகாரம் பெற்ற முதல் இந்தியத் திரைப்படம் 'பக்த துக்காராம்'. பல வருடங்களுக்கு முன்பாகவே - அதாவது 1937ஆம் ஆண்டிலேயே - சிறந்த திரைப்படமாக இது வெனிஸில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்டது. மகாராஷ்டிரத்தில் உள்ள மூலைமுடுக்குத் திரையரங்குகளில் எல்லாம் வெளியாகி வசூலைக் குவித்த படம் இது. தயாரித்தவர்கள் பிரபாத் சினிமா நிறுவனம். 'மக்களை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல முயற்சிக்கும் திரைப்படம்' என்று தேர்வுக்கான காரணத்தைக் கூறியிருந்தனர் தேர்வுக் குழுவினர். துக்காராமின் சேவையும் பக்திப் பாதையில் மக்களைப் பல நிலைகளைத் தாண்டி அழைத்துச் சென்றதுதானே.

துக்காராமின் தந்தை ஓர் வணிகர். தானியங்களை வாங்கி விற்று லாபம் ஈட்டியவர். அந்தக் கிராமத்தில் அந்தக் குடும்பத்துக்கு நல்ல பெயர் இருந்தது. வணிகர்களைக் கண்காணித்து உரிய வரிகளை வசூலித்து மன்னனிடம்

தீராத விளையாட்டு விட்டலன்

சேர்க்கும் பணியையும் துக்காராமின் தந்தை செய்து வந்தார்.

மகன் துக்காராமை அவர் படிக்க வைக்கவில்லை. கடையில் உட்கார போகிறவனுக்கு எதற்குப் பெரிய அளவில் கல்வி என்று நினைத்திருக்க வேண்டும். துக்காராமுக்கும் இதில் எந்த வருத்தமும் இல்லை. அவரது கவனமெல்லாம் கவிதைகள் இயற்றுவதில் இருந்தது. குரலும் கற்கண்டு. இந்த இரண்டு வரங்களும் ஒருசேர இருப்பதால் அவர் பாடும்போது அவரைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

சிறுவன் துக்காராம் இளைஞன் ஆனான். மகனுக்கு மணம் முடிக்கவேண்டும் என்று தீர்மானித்தார் தந்தை. ஆனால் அதில் ஒரு சின்னச் சிக்கல். மாதவராவுக்கு இரண்டு நண்பர்கள். இருவருக்குமே திருமண வயதில் மகள்கள் இருந்தனர். இரண்டு நண்பர்களுமே தங்கள் மகளைத்தான் துக்காராம் மணக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தனர்.

அதற்கும் ஒரு விடை கிடைத்தது. இரண்டு பெண்களையுமே மகனுக்கு மணம் முடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார் துக்காராமின் தந்தை. எல்லோருமே ஒத்துக் கொண்டனர். இருதார மணம் என்பது அக்காலத்தில் இயல்பான ஒன்றாக இருந்து வந்தது.

இரு மனைவிகளுடன் துக்காராம் அழகாகக் குடித்தனம் நடத்துவதைக் கண்ட அவரது தாயும் தந்தையும் காலப்போக்கில் மன நிம்மதியுடன் இறைவனடி சேர்ந்தனர். ஆனால் யாரும் எதிர்பாராதவிதமாக துக்காராமின் முதல் மனைவி நோய்வாய்ப் பட்டு இறந்து விட்டாள்.

எனவே, தனது இளைய மனைவி கமலாபாய் மற்றும் மூத்த தாரத்தின் மூலம் பிறந்த இரு மகன்கள் ஆகியோருடன் துக்காராம் வாழத் தொடங்கினார்.

பல தெய்வங்களின் மீதும் பக்திப்பாடல்களைப் பாடுவது என்றிருந்த துக்காராமின் கவனம் போகப் போக விட்டலனின் மீது மட்டுமே பாடத் தொடங்கியது. பாண்டுரங்க பஜனையிலேயே அதிக காலத்தைக் கழிக்கத் தொடங்கினார். தானியங்களை மாட்டுவண்டியில் ஏற்றி, பல ஊர்களுக்கும் சென்று விற்கும் வணிகத்தைத் தான் அவர் செய்து வந்தார் என்றாலும் வணிகத்தின் மீது இருந்த நாட்டம் அவருக்கு மெல்ல மெல்ல குறைந்தது.

தன்னிடம் இருந்த தொகையுடன் ஊராரிடமும் நன்கொடை வசூலித்து தான் வசித்த பகுதியிலேயே பாண்டுரங்கருக்கு ஓர் ஆலயம் எழுப்பினார்.

இறைவன் மீது மட்டுமல்ல, எளியோர் மீதும் துக்காராமின் கவனம் பதிந்தது. அவர்களுக்கும் தன்னால் இயன்ற செல்வத்தை வாரி வழங்கினார். இதில் அவர் குடும்பத்தினருக்குச் சம்மதம் இல்லை.



நாட்டில் பஞ்சம் தோன்றியது. இருக்கும் தானியத்தை விற்பதற்கு என்று எடுத்துச் சென்று ஏழை மக்களுக்கு அவர் இலவசமாக அளித்துவிட்டு வீடு திரும்ப, மகன்கள் இருவரும் அவரிடம் வாக்குவாதம் செய் தனர்.

தாங்கள் கூறுவது எதுவுமே துக்காராமின் மனத்தில் பதியவில்லை என்பதை அறிந்த அவர்கள் சலிப்புடன் அந்த வீட்டைவிட்டு வெளியேறினார்கள்.

''இது என்ன மூட பக்தி. வீட்டில் தானியங்கள் காலியாகிவிட்டன. இருக்கும் நகைகளையும் அடகு வைத்தாகிவிட்டது. உமது முட்டாள்தனத்தில்தான் பிள்ளைகளும் வெளியேறிவிட்டார்கள். எப்போது பார்த் தாலும் பாண்டுரங்கனையே ஜெபித்துக் கொண்டிருந்தால் அவனா வந்து சாப்பாடு போடப் போகிறான்?'' என்று கத்தினாள் கமலாபாய்.

பின்னர் தனக்குத் தெரிந்த ஒரு செல்வந் தரிடமிருந்து சில வராகன்களைக் கடனாகப் பெற்று வந்தாள். அந்த வராகன்களைக் கணவரிடம் கொடுத்தாள். ''இனியாவது பொறுப்புடன் இருங்கள். இந்தப் பணத் தைக்கொண்டு தானியம் வாங்குங்கள். பிற ஊர்களுக்குச் சென்று அதிக விலைக்கு விற்று விட்டு வாருங்கள்'' என்றாள். துக்காராமுக் கும் இது நியாயமாகவே பட்டது. ''கவலைப் படாதே கமலா. நான் நிறைய லாபத்துடன் வந்து சேர்கிறேன்'' என்று கூறிவிட்டுக் கிளம் பினார்.

அடுத்த ஊருக்குச் சென்றார். அதாவது சென்று கொண்டிருந்தார். அப்போது வானம் கருத்தது. சில நொடிகளிலேயே மழைத் துளிகள் வேகவேகமாகக் கீழே விழுந்தன.

தானிய மூட்டைகளுடன் மாடுகளை நிறுத்தினார். ஒரு மரத்துக்கடியில் நின்றார். தன் மேல் விழுந்த மழைத்துளிகள் அவருக்கு இறைவனின் அருள் முத்துக்களாகப்பட் டன. கருமேகம் அவருக்குக் கார்முகில் வண்ணனை அழுத்தமாக நினைவுபடுத்தி யது.

துக்காராம் கீழே அமர்ந்துகொண்டார். கண்களை மூடினார். அவர் வாயில் இருந்து விட்டல கீதங்கள் அடுத்தடுத்து இனிமை யாகப் பொழிந்தன. இயற்கை வெள்ளத் துடன் இசை வெள்ளமும் கலந்தது. தானி யங்கள் எல்லாம் மழைநீரில் கலந்து கரைந்து கொண்டிருந்தன. மாடுகள் திசைகெட்டு காட்டின் உட்பகுதிக்குச் சென்று விட்டன. இதில் எதைப்பற்றியும் அறியாதவராக துக்காராம் தன் விட்டல பஜனையில் மூழ்கி இருந்தார்.

அதே சமயம் தனது வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார் இன்னொரு துக்காராம்.



அபங்க அமுதம்

தாஹீ காஷ்டாசா குமான
கோவீ ப்ரமரா ஸுமன
ப்ரேம ப்ரீதிசே பாந்தலே
தேந ஸுடே காஹீ கேலே நந
பதரீ காலீ பிளா
பாப நிர்பள ஸாடீ பாளா
துகா ம்ஹணே பாவே
பேணே தேவே ஆகாராவே நந

- பக்த துக்காராம்

''கடினமான மரத்தையும் கூட துளைக்கும் சக்தி கொண்ட வண்டு, மலரின் மென்மையான இதழ்களில் அகப்பட்டுக் கொள்கிறது. மலரோ தனது அன்பினால் தேன் அளித்து அதைச் சிறைப்படுத்திவிடுகிறது. வெளியே கிளம்பும்போது உடையின் நுனியைப் பிடித்துக் கொண்ட தன் குழந்தையை விட்டுவிட்டுச் செல்ல தந்தையால் முடிவதில்லை. அதுபோல இறைவன் பக்தனின் அன்பிற்கு வசப்பட்டுவிடுகிறான்.''



கமலாபாயிடம் மாடுகளை ஒப்படைத்தார். கூடவே நூற்றுக்கணக்கான வராகன்களை அளித்தார்.

வியந்துபோன கமலாபாய் தன் கணவரைச் சாப்பிட வருமாறு அழைத்தாள். ''கொஞ்சம் இரு, நதியில் குளித்துவிட்டு வருகிறேன்'' என்றபடி வெளியேறினார் அவர்.

தான் வாங்கிய கடனை முதலில் அடைத்துவிட வேண்டும் என்று தோன்றியது கமலாபாய்க்கு. அப்போதும் வராகன்கள் மீதி இருக்குமே!

தனக்குக் கடன் கொடுத்த செல்வந்தரின் வீட்டை அடைந்தபோது அவளுக்கு ஒரு வியப்பு காத்திருந்தது. ''அம்மா, நீ சொன்ன சொல் தவறாதவள். துக்காராம் கொஞ்ச நேரத்துக்கு முன்பு வந்தான். கடனைச் செலுத்திவிட்டு ரசீதை வாங்கிச் சென்றான்'' என்றார்.

கமலாவுக்கு ஆனந்த வியப்பு. தன் கணவருக்கு இவ்வளவு பொறுப்பா? அவர் ஈட்டியது இவ்வளவு லாபமா? கணவருக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள். ஆனால் துக்காராம் வந்தபாடில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். பின்னர் அடுத்த ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினாள். வழியில் காட்டுப்பகுதியில் இருந்து இனிமையான பாட்டுக் கேட்டது.

'அட, கணவரின் குரலாயிற்றே. குளிக்கிறேன் என்று கிளம்பிவிட்டு இங்கே என்ன செய்கிறார்?' கேள்விகள் பொங்க காட்டுக்குள் நடந்தாள் கமலாபாய். அங்கே தியானம் செய்வது போன்ற நிலையில் உட்கார்ந்து கொண்டு விட்டல கீதங்களை இசைத்துக் கொண்டிருந்தார் துக்காராம்.

அவர் எதிரே நின்ற கமலா ''குளித்துவிட்டு வருகிறேன் என்று இங்கே என்ன செய்கிறீர்கள்?'' என்று கத்தினாள்.

துக்காராமின் தியானம் கலைந்தது. ''நான் எப்போது உன்னிடம் வந்து குளித்துவிட்டு வருவதாகச் சொன்னேன்?'' என்றார். சற்றே குழப்பத்துடன் கமலாபாய் நடந்ததை எல்லாம் விவரிக்க, இப்போது ஆனந்த அதிர்ச்சி அடைவது துக்காராமின் முறையாயிற்று. தன் உருவில் வீடு சென்று வராகன்களை அளித்தவன் பாண்டுரங்கன் தான் என்பது அவருக்கு விளங்கியது.

யாத்திரை தொடரும்

கவிதை கஃபே



தாகம்

குழந்தைக்கு
நிலவைக் காட்டி
சோறூட்டும் தாயைப்போல
பிரியங்களைக் காட்டி
புகட்டிவிட்டுப் போகிறாய்
என் மீதான
உன் தாகங்களை!

- சிவபாரதி

'கவிதை கஃபே' பகுதியில் இடம்பெறும் கவிதைகளுக்கு சன்மானம் உண்டு.

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன

காற்றில் புகும் காதல்

யாருடைய காலடிச் சுவடுகளோ
நம் பயணங்களை
நினைவூட்டக் கூடும்...
யாருடைய புன்முறுவலோ கூட
நம் துயரங்களை
நினைவூட்டக் கூடும்...
பூங்காற்றில் புகும் மூங்கில் இசை
ஒருவேளை இழந்த காதலை
நினைவூட்டக் கூடும்...
ஒரு காட்சியின் நிழலுக்கு
வேறு ஞாபகத்தின்
உருவம் பொருந்தக் கூடும்...
முகமறியாக் கல்லறையில்
பொறிக்கப்பட்ட பெயர் போல
என் கவிதையின் வார்த்தைகள்
பொருளற்றுப் பதிந்திருக்கக் கூடும்...
ஒவ்வொரு வாழ்க்கையோட்டம்
நுகரும் போதும் வெவ்வேறு
பொருளறியக் கூடும்!

- இ.மார் மனோகரன்

கல் தவளை

கைவிரல்களால் இறுகப் பற்றி
ஓடும் நீரில் சுழற்றி எறிந்தேன்.
என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே
தண்ணீரில் துள்ளிச் சென்று
எதிர்க் கரையில்
ஏறி மறைந்தது
தட்டைக் கல்லில் ஒளிந்திருந்த தவளை

- கார்த்திகா



நிலாத்துளிகள்

தவிர்த்தலையும் ரசனையுடன்
என்னில் தெளிக்கிறாய்.
உன் விலகல் ஒரு நட்சத்திரம்
போல் மிளிர்கிறது.
வெறுமை நிறைந்த சொற்களை
உதிர்த்தபடி செல்கிறது உன்
இதழ்கள்.
எவ்வித உணர்வுகளுமின்றி
புன்னகைக்கக் கற்றுக்கொண்டாய்.
மழை சத்தமின்றிப் பெய்து
ஓய்கிறது.
கண்ணீர் உடைந்த
நிலாத்துளிகளாய் உருள்கிறது.
என்றேனும்
ஏகாந்தத்தின் சௌந்தர்யத்தில்
நீ லயித்திருக்கும் தருணத்தில்
காற்றில் மிதந்து வரக்கூடும்
சிறகறுந்த கனவொன்றின்
குருதி தோய்ந்த இறகுகள் சில.

கடற்கரையொன்றில்தான் நமக்கான
வாழ்வை தீர்மானித்துப் பிரிந்தோம்.
மழைநாளில்தான் யாரோ ஒருவருடன்
நம் திருமணம் நிகழ்ந்தேறியது.
வண்ணத்துப்பூச்சிகள் நிறைந்த
வனத்தின் நடுவே நம் இல்லம்
அமையப்பெற்றது இப்போது.
எதற்கென்றே அறியாமல்
அழுகின்ற குழந்தையாய்
அழுதுகொண்டிருக்கிறோம்
அவரவர் வீட்டின் இருட்டறையில்
மனதெங்கும் வியாபித்திருக்கும்
நிறைவேறாக் காதலுடன்

- நிலாரசிகன்

குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

ஏனோ கீரை விற்கும் பொன்னம்மா அப்போது ஞாபகத்துக்கு வந்தாள்.

நான் பாட்டிலில் உறிஞ்சிப் பால் குடிக்கும்போதே அவள் எனக்குப் பரிச்சயம். நெடுநெடுவென வளர்ந்த கிராமத்துப் பெண். காலை ஆறிலிருந்து, ஆறரை மணிக்குள், கரகரத்த அவள் குரலில் கட்டாயம் ஒலிக்கும் சுப்ரபாதம். ''அரைக்கீரே... மொளைக்கீரே... தண்டங்கீரே!''

என்னை இடுப்பில் சுமந்துகொண்டே அம்மா அவளிடம் பேரம் பேசுவது நாள் தவறாமல் நடக்கும். பத்துப் பைசாவுக்காக இருவரும் அரைமணி நேரம் சண்டை போடுவார்கள். பிசாத்து பத்துப் பைசாவை பொன்னம்மா விட்டுக்கொடுத்துவிட்டுப் போனால், அந்த நேரத்தில் இன்னும் ஏழெட்டு வீதிகளில் வியாபாரம் பார்த்துவிடலாம். 'டைம் ஈஸ் மணி' என்னும் சூத்திரம் அம்மாவுக்காவது தெரியுமா? எக்னாமிக்ஸ் தெரியாமல் வீணாய்ப் போன தலைமுறை.

வெற்றிகரமான நூறாவதுநாள் படம் போல தினமும் விடாமல் நடக்கும் இந்தக் கூத்தைப் பார்த்து சலித்துப் போய் கொஞ்சம் பெரியவனானதும் கேட்டே விட்டேன். ''எம்மா, வீணா தினத்துக்கும் கீரைக்கார பொன்னம்மாவோட பத்துக் காசுக்காக மல்லுக்கட்டறே?''

அம்மா சிரித்தாள். ''போடா! உங்கப்பாவே என்னை ஒரு நாளும் கேள்வி கேட்டதில்லே. இவர் வந்துட்டார் பஞ்சாயத்துக்கு.''

''யூ ஆர் வேஸ்டிங் யுவர் வேல்யூயபிள் டயம்.''

''என்னாது?''

''நேரத்தோட அருமை உனக்குப் புரியல்லே.''

''அடேங்கப்பா. இங்கிலீஷ் கான்வெண்ட்டுல சேர்த்துவிட்டது சோரம் போவலை! துரை நல்லாப் பேசுதே!'' என்று கன்னத்தைக் கிள்ளி மகிழ்ந்தவள், ''பத்துப் பைசா எனக்கும் பெரிசில்லை. பொன்னம்மாவுக்கும் பெரிசில்லை. ஆனா இதெல்லாம் இல்லாம எங்களுக்குப் பொழுது விடியாது ராசா. உனக்கு இப்ப புரியாது.''

என்னைச் சீண்டிவிட்டது போலிருந்தது. புரிந்துகொள்ள முடியாமல் போவதற்கு இவர்களின் வாய்ச்சண்டை என்ன பெரிய பித்தகோரியன் தியரமா, இல்லை ஐன்ஸ்டீனின் ரிலேட்டிவிட்டி தியரியா? அதற்கு அப்புறம் காலையில் திண்ணையில் உட்கார்ந்து பாடம் படிப்பது போல பாவ்லா காட்டிக்கொண்டு அவர்களின் வாய்ச்சண்டையை உற்று கவனிக்க ஆரம்பித்தேன். பத்து அல்லது பதினைந்து பைசாவுக்காகப் பேரம் பேசுகிற விலைத் தகராறு போலத்தான் அந்த சம்பாஷணை தொடங்குகிறது.

ராட்சஸம்

''சொன்னா கேளும்மா... அந்த விலைக்கு வராது. தாசில்தார் வீட்டுல இப்பதான் கட்டு ரெண்டு ரூபாய்க்குக் கொடுத்துட்டு வர்றேன்.''

''புருசன்கூட கோவிச்சுட்டு வந்துட்ட மூத்த பொண்ணைக் கொண்டுபோய் விட ஊருக்குப் போனாங்களே, வந்துட்டாங்களா?''

''வந்துட்டாங்க. ஆனா புருசன்காரன் சமாதானமானாப்புல தெரியலை. அது இன்னமும் இங்கதான் இருக்கு.''

''அந்தப் பொண்ணு மேல தப்பிருக்கிறாப்புல தெரியல பொன்னம்மா. தாசில்தார் கொஞ்சம் கவர்மெண்ட்டு திமிரெல்லாம்

மாப்பிள்ளைகிட்ட காட்டாம இருக்கணும்.''

''நல்லாச் சொன்னேம்மா! சரி, பத்துக் காசைச் சேர்த்துப் போடு.''

''என்ன விளையாடறியா? அப்ப இன்னொரு கீரைக் கட்டும் கொடு.''

எனக்கு மண்டையைப் பிய்த்துக்கொள்ளலாம் போலிருந்தது. டி.வி. போன்ற சாதனங்கள் கண்டுபிடிக்கப்படாத அந்த நாட்களில் அம்மாவின் நியூஸ் சேனலே பொன்னம்மாதான் என்ற விஷயம்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான சிறுகதைகள் 10

என் மாடர்ன் மண்டைக்குப் புரிய மேலும் சில வருஷங்கள் பிடித்தன.

அப்போது பொன்னம்மாவின் கறுப்புத் தோலில் வறண்ட கரிசல் நிலம் போல் நிறைய சுருக்கங்கள் தெரிய ஆரம்பித்திருந்தன. அக்கம்பக்கம் புதிதாய் கல்யாணம் ஆகி வந்த இளம் பெண்கள் அவளைக் கீரைக்காரக் கிழவி எனக் குறிப்பிட ஆரம்பித்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஒரு நாள் திடீரென்று அப்பா மயக்கம் போட்டு விழுந்ததும், அம்மா பதறித் துடித்து அலறியதும் - பொன்னம்மாவின் தழைகள் நிரம்பிய கீரைக் கூடையைப் போலவே பசேலென்று இன்னமும் மறக்காமல் நினைவிருக்கிறது.

ஆட்டோ பிடித்து ஆஸ்பத்திரி போய் வந்த பின்பு - சர்க்கரை வியாதி என்று பேசிக்கொண்டார்கள். தின்னத்தின்ன இனிக்கும் சர்க்கரையின் பெயரால் ஒரு வியாதியா என்று ஆச்சரியப்பட்டேன். டாக்டருக்குப் படிக்கும் மணா அங்கிள் வந்து பார்த்து விட்டு, ''ஷுகர் லெவல் லோ ஆச்சுன்னா உயிருக்கே ஆபத்து. ரொம்ப ஜாக்

சத்யராஜ்குமார்

''சார்! இந்தப் பாராகுட் ஒருவேளை விரியலைன்னா என்ன பண்றது?''

''கொண்டாந்து கொடுங்க சார். வேறமாத்திக் கொடுத்திடறேன்.''

- திருமேனி

கிரதையா இருங்க.'' என்று எச்சரித்துவிட்டுப் போனார். இந்த வியாதிக்கு நீரிழிவு நோய் என்று இன்னோர் பெயர் இருப்பது அவர் வந்துபோன பின்புதான் தெரியும்.

அடுத்த நாள் அம்மா பொன்னம்மா கிழவியிடம் விசும்பி விசும்பி அழுதாள். அன்றைக்கு இரண்டு பேருமே பேரம் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. கிழவி எடுத்து வைத்த கீரைக் கட்டுக்கு அம்மா கொடுத்த காசை, எதுவுமே பேசாமல் வாங்கிச் சுருக்குப் பைக்குள் கட்டிக் கொண்டு கிளம்பினாள். போகும்போது - ''நாளைக்கு உனக்கு ஒரு நல்ல சேதியோட வர்றேம்மா!'' என்று சஸ்பென்ஸாகச் சொல்லி விட்டுப் போனாள்.

ஸ்கூலில், சாய்ந்திரம் கபடி ஆட்டத்தில், ராத்திரி படுக்கையில் என்னை, கிழவியின் சஸ்பென்ஸ் துரத்தித் துரத்திக் குடைந்து கொண்டே இருந்தது.

''அரைக்கிரே... மொளைக்கிரே... தண்டங்கிரே!''

மறுநாள் பொன்னம்மா கிழவியின் சத்தம் கேட்டதுமே - அம்மாவுக்கு முன்னால் வாசலுக்கு வந்து நின்றேன்.

தண்ணீர்த் திவலைகளோடு பச்சைப் பசேலென இருந்த கீரைக்கட்டுகள் இரண்டை எடுத்து வைத்தாள். ''சாயந்திரம் காடெல்லாம் அலைஞ்சு கண்டுபிடிச்சுக் கொண்டாந்தேன். இது பசலைக் கீரை. இது வெந்தயக் கீரை. ரெண்டுமே உம் புருஷனோட சர்க்கரை வியாதிய பஞ்சா பறக்கடிச்சுடும்.''

அம்மா அன்றைக்குப் பொன்னம்மா கிழவியை நெகிழ்ச்சியோடு பார்த்த பார்வை, ஃபோட்டோ எடுத்து ஃபிரேம் போட்டு வைத்தது மாதிரி என் மனத்துக்குள் ஆடிக் கொண்டிருக்கிறது.



கீரைக் கூடையை எடுத்து சும்மாட்டின் மேல் வைக்க அம்மா உதவினாள். வழக்கம் போல ஸ்டைலாகக் கையை வீசி நடந்து கொண்டே திரும்பிப் பார்த்துக் கத்தினாள் பொன்னம்மா. ''வீட்டுக் கொல்லப்புறத்திலேயே வெதை போட்டுட்டேன். பத்தே நாள்ல பொத பொதன்னு வந்துரும். அப்புறம் தெனமும் கொண்டு வர்றேன்.''

தலையாட்டிய அம்மா, கிழவி தெரு முனையில் மறையும்வரை பார்த்துக் கொண்டு நின்றாள்.

இரண்டு மாசம் கழித்து அப்பாவைக் கூட்டிக்கொண்டு செக்கப்புக்குப் போனபோது, டாக்டர் ரொம்பவே ஆச்சரியப்பட்டார். ''எல்லாமே கண்ட்ரோல்ல இருக்கு. பேன்க்ரியாஸ் ரிவைவ் ஆயிட்ட மாதிரி தெரியுது.''

அப்பாவைப் பார்க்க வந்த அத்தை, விஷயம் கேள்விப்பட்டு அன்றைக்கு அங்கேயே தங்கிவிட்டாள். அடுத்த நாள் காலையில் பொன்னம்மாவைப் பார்த்து, ஒரு வருஷமாகப் பாடாய்ப்படுத்தும் தனது முட்டி வலி பற்றி முறையிட ஆரம்பித்தாள்.

எனக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தாலும், பொன்னம்மா கிழவி சளைத்த மாதிரி தெரியவில்லை. ''ஒரு மண்டலத்துக்குக் கோவக் கீரை சாப்பிட்டாபோதும் கண்ணு, உன்னோட முட்டிவலி பறந்துடும்.''

''கோவக் கீரை மார்க்கெட்ல கிடைக்

குமா பொன்னம்மா?''

''கோவக் கீரை மார்க்கெட்டுல விக்கறானுங்க. நீ எங்க கண்ணு குடியிருக்க?''

''ஜோதி நகர்ல.''

''தங்கம் தியேட்டருக்குப் பின்னாலயா?''

''ஆமா.''

''நாளைலர்ந்து தெனமும் ரெண்டு கட்டு கோவக் கீரையோட நான் அங்க வர்றேன்.''

நான் வெலவெலத்துத்தான் போனேன். இந்த வயசான கிழவி தலையில் கீரைக் கூடையைச் சுமந்துகொண்டு தினமும் இனி தங்கம் தியேட்டர் வரை ஆடி அசைந்து நடக்கப் போகிறதா? இதற்கு முட்டி வலியெல்லாம் வந்து தொலைந்துவிடாதா? இரண்டு கட்டு கோவைக் கீரைக்கு இரண்டு ரூபாய் கிடைக்கப் போகிறது. இது பண்ணுவது வியாபாரம்தானா? முட்டாள் கிழவி!

> ''அந்த ஆள் வாளியில எதையோ எடுத்துட்டு பதுங்கி, பதுங்கி போறாரே என் சார்?''
>
> ''ஓ... அதுவா! அவங்க மனைவி உளுந்து மாவை நைசா அரைச்சிட்டு வர சொன்னாங்களாம்.''
>
> - திருமேனி

அப்படித்தான் அப்போது எனக்கு நினைக்கத் தோன்றியது. நின்றால் உட்கார முடியவில்லை, உட்கார்ந்தால் நிற்க முடியவில்லை என்று புலம்பிக்கொண்டிருந்த அத்தை ஆறு மாசம் கழித்து முகமெல்லாம் சிரிப்போடு பொன்னம்மா கிழவிக்கு ஒரு நூல் புடைவை எடுத்துக் கொடுத்த போதுதான் அவள் செய்யும் காரியங்களுக்கு விலையே இல்லை என்று விளங்கியது.

காலேஜ் முடித்து வேலைக்குச் சேர்ந்த பின்பும், ''அரைக் கீரே... மொளைக் கீரே... தண்டங்கீரே!'' - என்ற கரகரத்த ஓசை மட்டும் காலையில் கேட்பது நிற்கவேயில்லை. கிழவிக்கு என்ன ஒரு வைரம் பாய்ந்த உடம்பு. உடல் சுருங்கினாலும் நடை தளரவில்லை.

வெளியூரில் வேலை பார்க்கும் ஆசையில் மண்ணள்ளிப் போட்டார் அப்பா. ''வயசான காலத்தில் எங்களை விட்டுட்டு எங்கேயும் போகாதடா!'' - அன்புக் கட்டளை. அதற்குத் தகுந்தாற்போல அந்தச் சின்ன கிராமம் என்னோடு சேர்ந்து பிரமாதமாய் வளர்ந்து விட்டிருந்தது.

எத்தனை காங்கிரீட் கட்டடங்கள். எத்தனை குழல் விளக்குகள். ஓடும் கார்கள் என்ன! பல வீடுகளில் ரெப்ரிஜிரேட்டர்கள். 'ஆல் மார்ட்' என்றொரு பன்னாட்டு நிறுவனத்தின் மிகப்பெரிய சூப்பர் மார்ட் கூட முளைத்துவிட்டது. என்னுடைய படிப்புக்குத் தகுந்த வேலை உள்ளூரில் கிடைக்காது என சால்ஜாப்பு சொல்ல முடியாது. 'ஆல் மார்ட்' வேலை படுசுவாரஸ்யமாக இருந்தது. காய்கறியானாலும் சரி... அரிசி, பருப்பானாலும் சரி... அடுக்கி வைப்பதில் பிரம்மாண்டம். இன்வெண்டரி நிர்வாகம் முதல் விற்பனைத் தந்திரம் வரை என்னென்ன நுணுக்கங்கள்! தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய் என்று எல்லாவற்றையும் அவர்களே விளைவிக்கிறார்களாம்.



லாரியில் வருவதால் எடை குறைவாயிருக்கும் தக்காளிகள், கோடவுனில் காத்திருக்கும் இருபத்திநாலு மணி நேரத்தில் கொஞ்சம் உப்பிப் போகின்றன. இதனால் போக்குவரத்துச் செலவைக் குறைத்து சந்தை விலையைத் தரை மட்டத்துக்கு நொறுக்குகிறார்கள்.

''சார், உங்க பொண்ணு கல்யாணத்தை பிரமாதமா பண்ணிட்டீங்க. நானே மெய்மறந்துட்டேன்... குப் பர்ங்க...''

''நீங்க 'மெய்' மட்டுமா மறந்தீங்க. 'மொய்'யையும் மறந்துட்டீங்களே!''

-எம்.திருமேனி, கல்லாவிப்பட்டு



இதெல்லாம் ஜி.எம்.ஓ. மேஜிக் என்றான், வெளிநாட்டில் படித்துவிட்டு வந்த ஹரி.

''அதென்ன ஜி.எம்.ஓ.?''

''ஜெனட்டிக்கலி மாடிபைட் ஆர்கனிசம். இயற்கையான தாவரத்தின் ஜீன்களோட கொஞ்சம் பாக்டீரியா விளையாட்டு விளையாடி நம்ம இஷ்டத்துக்கு மாத்தலாம். தக்காளி கொஞ்சம் இனிக்கணுமா? இனிக்க வைக்கலாம். பச்சை வாழைப்பழத்துக்குத்தான் கிராக்கி அதிகமா? மஞ்சள் கலரை பச்சை கலர் ஜிங்குச்சா பண்ணலாம்.''

''சத்துக்கள் அப்படியே இருக்குமா? இதெல்லாம் உடம்புக்கு நல்லதா ஹரி?''

''பர்ஸுக்கு நல்லது. அதைப்பத்தி மட்டும்தானே மக்கள் இப்போ அதிகமா கவலைப்படறாங்க'' என்று கண்ணடித்தான் ஹரி.

அந்த வாரம் டில்லியிலிருந்து வந்திருந்த ரீஜனல் மேனேஜர் ப்ராஜெக்டரில் பாப்புலேஷன் VS சேல்ஸ் பார் சார்ட்டுகளும், பை சார்ட்டுகளும் போட்டுக் காட்டி, ''ஸ்பினாச் செக்ஷன் மட்டும் விற்பனை எதிர்பார்த்ததைவிட குறைவாயிருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் தேவை'' என்றார்.

''பொன்னம்மான்னு ஒரு ஓல்ட் லேடிதான் விலை, ஆர்கானிக் டேஸ்ட் ரெண்டு விஷயத்திலும் நமக்குப் போட்டி'' என்றான் விற்பனை அதிகாரி. நான் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தேன். இதுவல்லவோ வியாபாரம்! ஒரு பொட்டு லாபம்கூட சிந்திவிடக்கூடாது. சிதறிவிடக்கூடாது. மொத்தமாய் வழித்தெடுக்க வேண்டும்.

பொன்னம்மாவை எனக்குத் தெரியும் என்று வாய் தவறி சொல்லிவிட்டேன்.

''அந்தம்மாகிட்டே சாம்ப்பிள் வாங்கி ஜெனடிக் இஞ்சினியரிங் டிபார்ட்மெண்ட்டுக்கு அனுப்பி வைங்க'' என்றார் ரீஜனல் அதிகாரி.

அடுத்த நாளே அவள் வாடிக்கையாகக் கொண்டுவரும் சில கீரைக் கட்டுகளை வாங்கிக்கொடுத்து விட்டேன். அதைப் பற்றி நான் பெரிதாகக் கவலைப்படவில்லை. பொன்னம்மா விற்பது வெறும் கீரைக் கட்டு மட்டும் அல்ல. அந்த அன்பையும் அனுசரணையையும் எந்த ஜீன்களை ரிப்பேர் செய்து கொண்டு வரப் போகிறார்கள்?

நான் போட்டது தப்புக்கணக்கென்று சீக்கிரமே தெரிந்தது. ஒரு செவ்வாய்க் கிழமை மதியம் என்னைக் கூப்பிட்டார்கள்.

''கீரைக்கார பொன்னம்மா வீடு உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''கொஞ்சம் கூட வா.''

இரண்டு ஜீப்புகள் நின்றிருந்தன. கம்பெனி வக்கீலும், போலீஸ் அதிகாரியும் ஒரு ஜீப்பில் வர, நானும், ஆல் மார்ட் கிளை மேலாளரும், ஒரு லேப் டெக்னீஷியனும் இன்னொரு ஜீப்பில் முன்னால் போனோம்.

''என்ன ஸார் பிரச்னை?''

என்னுடைய கேள்விக்கு அவரிடம் பதில் இல்லை.

ஊர்க் கோடியில் இருந்தது பொன்னம்மா கிழவியின் ஓடு வேய்ந்த வீடு. திபுதிபுவென உள்ளே நுழைந்தார்கள். எல்லோரையும் பார்த்து நடுநடுங்கிப்

போனாள் பொன்னம்மா.

"என்னங்கய்யா? என்ன பிரச்னை? எதுக்கு போலீசோட வந்திருக்கீங்க?"

அவளுக்கு யாரும் பதில் சொல்ல வில்லை. கீரை வகைகள் மண்டிக் கிடக்கும் விஸ்தாரமான கொல்லைப்புறத்துக்குப் போனார்கள். லேப் டெக்னீஷியன் பல கீரைக் கொழுந்துகளைப் பிடுங்கி ஆராய்ந்துவிட்டு, "நம்ம வெரைட்டிதான் ஸார்" என்றான். உடனே கிளை மேலாளர், "இந்தாம்மா கிழவி, எங்கிருந்து இந்தக் கீரை விதைங்க உனக்குக் கிடைச்சது? என்று மிரட்டும் தொனியில் கேட்டார்.



பொன்னம்மாவின் வீறிடும் குரலை அன்றைக்குக் கேட்டதுதான்.

"அய்யா, எனக்கு ஒண்ணும் புரியலையே... நாலு தலைமுறையா இந்தக் கீரைங்க இந்தத் தோட்டத்தில இருக்குங்க."

"இந்த மணத்தக்காளியும், பொன்னாங்கண்ணியும் எங்க வெரைட்டிம்மா. சட்டப்படி எங்க அனுமதி இல்லாம யாரும் சாகுபடி பண்ணக்கூடாது. இந்த ஜி.எம்.ஓ. விதைகளுக்கு இண்டர்நேஷனல் பேட்டண்ட் ரைட் இருக்கு. உன்னால எங்க ஆல் மார்ட் கம்பனிக்குப் பல லட்சம் நஷ்டம். ஒண்ணு நீ நஷ்ட ஈடு தரணும். இல்லேன்னா உன்னைக் கைது பண்ணி ஜெயில்ல போடணும்."

தேர் மாதிரி கம்பீரமாய் நடந்து வரும் பொன்னம்மாவின் வயதான உடல் குறுகிப்போய் பயத்தில் நடுநடுங்கியதைப் பார்த்து எனக்கே இருதயம் அடைத்துக் கொண்டது போலானது. ஒன்றும் புரியாமல் ஹோவென கதற ஆரம்பித்தவளை ஒரு கர்ஜனையில் அடக்கிவிட்டு, பஞ்சாயத்துப் பேசினார் இன்ஸ்பெக்டர்.

"தோட்டத்தை அழிச்சுர ஒப்புக்கிட்டா இந்த முறை மன்னிச்சு விட்டுரலாம்."

"அய்யோ... என்னய்யா சொல்றீங்க? பரம்பரைப் பரம்பரையா பச்சைப் பசேல்னு இருக்கிற தோட்டமுங்க" எனக் கதறினாள் பொன்னம்மா.

கிளை மேலாளர் பொறுமையில்லாமல், "இன்ஸ்பெக்டர், இதெல்லாம் வேலைக்காகாது. ஸ்டேஷன்ல வெச்சு இவகிட்டே பேசிக்கிங்க. நாளைக்கு நான் கோர்ட் ஆர்டர் வாங்கிட்டு புல்டோசர் அனுப்பறேன். பாதுகாப்புக்கு ரெண்டு கான்ஸ்டபிள்கள் அனுப்பி வைங்க" என்றார்.

பொன்னம்மாவின் வீறிடும் குரலை அன்றைக்குக் கேட்டதுதான். அதற்கப்புறம், "அரைக் கீரே... மொளைக் கீரே... தண்டங்கீரே!" ஒருநாளும் ஒலிக்கவில்லை.

இப்போது ஆல் மார்ட்டுக்கு எதிரே பிரம்மாண்டமாய் எழுந்து நிற்கும் தனியார் மருத்துவ காம்ப்ளெக்ஸ் கட்டிடத்தை, சுகாதார அமைச்சர் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறார். இருதயம், ஆர்த்தோ, கேஸ்ட்ரோ என சகல வியாதிக்கும் ஆங்கில நிவாரணம் ஒரே கூரையின் கீழே! இந்த ஊர் வளர்கிறது. இப்போது இந்த ஊருக்கு இப்படி ஒரு மருத்துவ மனை ரொம்பத் தேவைதான்.

தவிர்க்க முடியாமல் கீரை விற்கும் பொன்னம்மா ஞாபகத்துக்கு வந்தாள்.

★

''சன் டி.வி.யில் 'தென்றல்' சீரியல் ஒளிபரப்பான பிறகு என்னை எல்லோரும் 'துளசி'யாகத்தான் பார்க்கறாங்க. என்னோட நிஜப் பெயர் ஸ்ருதின்றது எனக்கே சில சமயம் மறந்து போயிடுது. எல்லாப் புகழும் டைரக்டர் குமரன் சாருக்குத்தான்' ரொம்பவே உணர்ச்சிவசப்படுகிறார் ஸ்ருதி.

''நான் ஏற்கெனவே காதல் டாட்காம் படத்துல மூன்று ஹீரோயின்ல ஒரு ஹீரோயினா நடிச்சேன். தெலுங்கில் ஒரு சில படம் பண்ணியிருக்கேன். ஆனா சினிமா வாங்கிக் கொடுக்காத அங்கீகாரத்தை 'தென்றல்' வாங்கிக் கொடுத்திருக்கு.''

சினிமா சான்ஸ்ன்றது ச்சீ, ச்சீ, இந்தப் பழம் புளிக்கும்ன்ற கதையானதால இப்படிப் பேசறீங்களா?

''நீங்க இப்படி யோசிச்சா நான் பதில் சொல்ல முடியாது. தென்றலில் பரிதாபமான பொண்ணா வருவேன். வீட்டை எதிர்த்துக் காதல் கல்யாணம் செஞ்சுக்குவேன். சித்தியிடம் அடங்கிப் போயிடுவேன். இதைப் பார்த்த ஆடியன்ஸ் சில பேர் வெளியில, நான் போகும்போதெல்லாம் 'ஏம்மா துளசி நீ நம்ம வீட்டுப் பொண்ணு மாதிரி இருக்க. சித்தியைத் தைரியமா எதிர்த்துப் பேசு, சரி எதுன்னு புரிய வை. இப்படி அமைதியா இருந்தா தலையில் மிளகாய் அரைச்சிட்டுப் போய்டுவாங்க' என்று ஏகத்துக்கு அட்வைஸ் பண்றாங்க.

நீங்களே சொல்லுங்க... சினிமாவுல எத்தனை படம் பண்ணாலும் இந்த மாதிரி ஆடியன்ஸ் அவங்க வீட்டுப் பொண்ணா நினைக்கற இமேஜ் கிடைக்குமா? சினிமாவுல ஹீரோயின் ஓரியண்டட் மூவிஸ் ரொம்ப கம்மி. அதனால, சீரியலில் கிடைச்ச இந்த இமேஜிக்கு ரொம்பவே சந்தோஷப்படறேன்'' என்று சொல்லும் சுருதி, கேரளாவின் குருவாயூரைச் சேர்ந்தவர். ''எனக்குச் சென்னையை ரொம்பப் பிடிக்கும். ஆனா சொந்த ஊரான குருவாயூர் ஆல்டைம் பேவரிட்'' என்கிறார்.



பிடித்த சாப்பாடு அயிட்டம் எது என்று கேட்டால் ஐஸ்க்ரீம், சாக்லேட் என்று குழந்தையைப் போல் குதூகலிக்கிறார்.

கடைசியா ஒரு கேள்வி. நேர்ல பார்க்கறதுக்கு இப்படி ஜாலியா



தென்றல்!

பேசுறீங்க. சீரியலில் ஆடியன்ஸை இப்படி அழவிடறீங்களே இது நியாயமா?

''சார் டி.வி.ன்றது ஹோம் மீடியம். அதிகமான பெண்கள் பார்க்கறாங்க. வீட்டோட பிரச்னைகளில் அதிகமாகப் பாதிக்கப்படுறதும் பெண்கள்தான். அதனால் 'துளசி' கேரக்டர்ல நான் கஷ்டப்படறதைப் பார்த்து அழறாங்க. எனக்கு மட்டும் எல்லோரையும் கஷ்டப்படுத்திப் பார்க்கணும்னு ஆசையா சொல்லுங்க.''

- ஆர்.கே.





வகுப்பறைகள் இல்லை. முதுகில் மூட்டையாய்க் கனக்கும் பாடப் புத்தகம் இல்லை. விடுமுறைகள் இல்லை. கடுமையான விதிமுறைகள் இல்லை. மாணவர்கள் உண்டு, உறங்கி, எழுந்து நடமாடி, உலவுகின்ற இடங்களே ஈஷா கல்வி இல்லத்தின் வகுப்பறைகள். மூன்று விதப் பிரிவுகளில் இயங்கி வருகிறது ஈஷா கல்வி அறக்கட்டளை. ஈஷா வித்யா பள்ளி, ஈஷா சமஸ்கிருதப் பள்ளி, ஈஷா கல்வி இல்லம்.

''கிராமப்புறக் குழநதைகளின் மேம்பாட்டுக்காக, சத்குருவின் தொலைநோக்குப் பார்வையில் உருவானதே ஈஷா வித்யா. உயர்தரமான கல்வியைத் தருவது, அவர்களது வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது. இதன் மூலமாக கிராமப்புறக் குழந்தைகளைப் பேணிக் காப்பது ஆகியவை இதன் நோக்கம்!'' என்கிறார் ஈஷா வித்யாவில் இயங்கி வரும் ஒருவர்.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய குழந்தைகளுக்குக் குறைந்த கட்டணம் மற்றும் முழு கல்வி உதவித் தொகை வாயிலாக இயங்குகிறது ஈஷா வித்யா. மாநிலம் முழுவதும் 206 பள்ளிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. தற்போது ஈஷா யோகா மையம் செயல்படும் கோவை, நாகர்கோயில், தூத்துக்குடி, கடலூர், ஈரோடு, விழுப்புரம், வனவாசி என்ற எட்டு இடங்களில் ஈஷா வித்யாவும் செயல்படுகிறது! ஆங்கிலமும் கணினியும் முக்கியமாகக் கற்றுத் தரப்படுகின்றன. மதிய உணவு, பேருந்து வசதி இலவசம். ஈஷா வித்யா பள்ளிகள் தொடங்கி ஆறு வருடங்கள் ஆகின்றன.

''நான் ஒரு டீக்கடை தொழிலாளி. ஈஷா வித்யா உதவித்தொகை திட்டத்தில் என் மகள் படிக்கிறாள். முதல்முறையாக என் குடும்பத்தில் இந்தக் கல்வி பெறுபவள் இவளே!'' எனக் கடிதம் எழுதியுள்ளார் தங்கவேல்.

ஈஷா சமஸ்கிருதப் பள்ளி 2009ல் தொடங்கப்பட்டது. கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட பள்ளி இது. எழுபது பேர் பயின்று வருகின்றனர்.

ஈஷா கல்வி இல்லம், வருடத்தில் ஒன்பது மாதங்கள் இயங்குகின்றன. சனி,



ஈர்க்குது... ஈஷா கல்வி!

ஞாயிறு விடுமுறை வழக்கம் கிடையாது. இடையில் ஒரு மாதம், இறுதியில் இரண்டு மாதம் விடுமுறை. முதல் வகுப்பு முதல் ப்ளஸ் டூ வகுப்பு வரை என்கிற பஞ்சாயத்தும் இங்கு கிடையாது. வகுப்பறைகளுக்குள்ளும், பாடப்புத்தகச் சுமைகளுக்கும் கட்டிப்போடாத வாழ்க்கைக் கல்வித் திட்டம்தான் இங்கு சிலபஸ். அதுவும் சர்வ தேசத் தரத்தில் போதிக்கப்படுகிறது.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு ஆகிய இரு நிலைகளில் மட்டுமே ICSE (Indian Certifficate of for School Examination) தேர்வுகள் நடத்தப்பட்டு, CISCE எனப்படும் கவுன்சில் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

எந்த சப்ஜெக்டாக இருந்தாலும் ஒவ்வொருவர்க்கும் பிரத்யேக கவனம் எடுத்துக் கல்வி புகட்டப்படுவது ஈஷா கல்வி இல்லத்தின் தனிச் சிறப்பு. களரிப் பயிற்சிக் கலை முதல் கழனியில் பயிரிடுவதுவரை கற்றுத் தரப்படுகின்றன. இங்கு பயின்று செல்லும் ஒரு மாணவன் விஞ்ஞானியாகவும் ஆகலாம். விவசாயியாகவும் இயங்கலாம். இசைக் கலைஞனாக, ஓவியனாக, களிமண் சிற்பக் கலைஞனாக, நாடகக் கலைஞனாக, மொத்தத்தில் சிறந்த மனிதனாக வாழலாம் என்பதே ஈஷா கல்வி இல்லத்தின் அடிப்படை நோக்கம்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஸ்பெஷல்



ஒரு ஆல்பம்

நான்காண்டுகளுக்கு ஒரு முறை நாங்கள் விடுமுறை பயணச் சலுகை திட்டத்தின் கீழ் குடும்பத்துடன் 'மகிழ்ச்சி டூர்' செல்வது வழக்கம். ஒரு முறை கர்நாடக மாநிலம் உடுப்பி, மங்களூரு, தர்மஸ்தலா ஆகிய ஊர்களுக்குச் சென்றிருந்தோம். மங்களூரு எக்ஸ்பிரஸில் முதல் வகுப்பில் நாங்கள் சென்ற முதல் பயணம். எங்களைத் தவிர அந்தப் பெட்டியில் யாருமில்லை. என் அம்மா, பிள்ளைகளும், மனைவியும் அப்பயணத்தில் அடைந்த குதூகலத்துக்கு அளவே இல்லை. 28.5.1998ல் எடுத்த புகைப்படம் இது. என் அன்னையுடன் நான் சென்ற கடைசி நீண்ட தூரப் பயணம் இதுதான். இப்புகைப் படத்தை அடிக்கடி பார்த்து, மறைந்த என் அன்னையின் அன்பை நினைத்து உருகுவது என் வழக்கம்.

- அ.சுகுமார்,
காட்டுக் கானூர்

ஃபோட்டோவுடன் இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/-

1975ல் கலைஞரை எங்கள் வீட்டுக்கு அழைத்திருந்தோம். வீட்டு முன்புறம் கொடி ஏற்றிவிட்டு ஹாலில் வந்து அமர்ந்தார். கழக வளர்ச்சி நிதியாக 1000 ரூபாயை ஒரு வெள்ளித் தட்டில் வைத்துக் கலைஞரிடம் கொடுத்தோம். ''அப்படியே தட்டுடன் எடுத்துக் கொள்ளவா?'' எனக் கேட்டு கலைஞர் சிரிப்பலையைச் சிதறவிட்டார். என் கணவரும் ''தட்டுப்பாடு இருந்தால் தட்டுடன் எடுத்துக் கொள்ளுங்கள்'' என வேடிக்கையாகவே பதிலளித்தார். பின்னர் சிற்றுண்டி அருந்தும்போது மேலே எரிந்து கொண்டிருந்த பல்பை கலைஞர் கவனித்துவிட்டு, ''இங்கு பல்பு எரிவது மட்டுமின்றி எரிந்தே விடும் போலிருக்கிறதே'' என சிலேடையாகக் கூறி சிரிக்கவும், வியக்கவும் வைத்தார். ஒயர் ஸ்பார்க் ஆகிச் சுற்றிலும் தீ பிடித்துக் கரி படிந்திருந்ததை அவ்வாறு இரு பொருள்படக் குறிப்பிட்டார். அவர் உதிர்க்கும் சொல்முத்துக்கள் காலத்தால் அழியாதவை. மறக்க முடியாதவை.

- டி.கண்ணம்மாள்,
சாலியமங்கலம்.



வாசகர்களே! திருமண ஃபோட்டோ மட்டுமல்ல. நீங்கள் பெரிதும் ரசிக்கும். பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்'முன்னு எழுதி அனுப்புங்க..



'கிரேஸியைக் கேளுங்கள்' பகுதியில் வாசகர்களின் கேள்விகளுக்குத் தொடர்ந்து 125 வாரம் பதில் கூறியதைக் கொண்டாடும் வகையில், 'கிரேஸி ட்ரீட்' நிகழ்ச்சி போன வருடம் நடந்தது, 'கல்கி' வாசகர்கள் அனைவருக்கும் தெரியும். கிரேஸி ட்ரீட் வின்னர்ஸில் நானும் ஒருவன் என்ற வகையில், அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். அப்போது 'கல்கி' ராஜேந்திரன் அவர்களைச் சந்திக்கும் பெரும் பாக்கியம் கிடைத்தது. அவரிடம் ஆசி வாங்க விரும்பினேன். உடன் வந்திருந்த என்னுடைய சகலனிடம், கேமராவைக் கொடுத்து, நான் ஆசி வாங்கும்போது புகைப்படம் எடுக்கும்படி சொன்னேன். ஆனால், அவர் கேமராவைச் சரி பண்ணி படம் எடுப்பதற்குள், நான் ஆசி பெற்று எழுந்துவிட்டேன். ஃபோட்டோ எடுக்கவில்லை என்பதைக் கவனித்துவிட்ட ராஜேந்திரன் அவர்கள் என்னை தன் பக்கத்தில் அமரச் சொல்லி, புகைப்படம் எடுத்துக்கொள்ளத் தயார் ஆனார். ஆனால், அவருக்குச் சமமாக உட்காருவது மரியாதை அல்லவே என்பதால், சற்றுத் தயக்கத்துடனேயே, சங்கடத்துடன் நெளிய, அவரே என் தோளைப் பிடித்து அன்புடன் அழுத்தியதால், சோபாவின் நுனியில் அமர, அப்பொழுது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை.

கே.கே.நகர் இராணி - அண்ணாநகர் திட்டத்தில், ஏழைகளுக்கான புதிய குடிருப்புகள் கட்ட நடந்த கால்கோள் விழா 1983ஆம் ஆண்டில் திட்டத்தைத் துவக்கி வைத்த இலட்சிய நடிகருக்கு, குடிசை மாற்று வாரியத் தலைவர் டி.கே.கபாலி மாலையிட்டு மகிழ்கிறார். அத் திட்டத்தின் பொறியாளராகிய நான், அடுத்து மாலை அணிவிக்கக் காத்திருக்கிறேன். அக் காலக்கட்டத்தில் முன்னணி ஹீரோக்கள் பாக்யராஜ், ராமராஜன் போன்றோர் மாடலில் நான் அணிந்திருந்த சட்டையைப் பார்த்த இலட்சிய நடிகர், ''ஹீரோ மாதிரி இருக்கீங்க'' என்று பாராட்டினார். இருபத்தேழு வருடங்கள் உருண்டோடி விட்டாலும், அந்த இனிய தருணம் பசுமையாக நினைவில் நிற்கிறது.

- ஆர்.கே.சுந்தரம், வடபழனி



ஓ பக்கங்கள்



ஞாநி

லஞ்சத்தை அதிகாரபூர்வமாக ஆக்கித் தொலையுங்கள் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கடும் வெறுப்பில் சொல்லியிருக்கிறார்கள்.

நீதிபதிகள் மார்க்கண்டேய கட்ஜு, டி.எஸ்.தாக்குர் ஆகியோர்தான் இந்தக் கருத்தைச் சொன்னவர்கள். லஞ்சம் வாங்கியதாகக் கையும் களவுமாகப் பிடிபட்ட ஒரு வருமானவரித் துறை ஆய்வாளரைக் கீழ் கோர்ட் தண்டித்தது. பஞ்சாப் உயர்நீதிமன்றம் அதை ரத்துசெய்து அவரை விடுவித்தது. இப்போது அதன் மீதான அப்பீலை விசாரணைக்கு அனுமதிக்கும் போதுதான், உச்சநீதிமன்ற நீதிபதிகள், அரசு அலுவலகங்களில் லஞ்சம் இல்லாமல் எதுவும் நகர்வதில்லை என்று விமர்சித்திருக்கிறார்கள்.

குறிப்பாக வருமானவரி, வணிக வரி, விற்பனை வரித் துறைகளில் லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது என்று கூறிய நீதிபதிகள் ஒவ்வொரு அலுவலகத்திலும், இன்ன வேலை நடக்க இவ்வளவு லஞ்சம் என்று அதிகாரபூர்வமாக அறிவித்துவிட்டால், மக்களுக்குக் கொஞ்சம் சிரமமில்லாமல் இருக்கும் என்று வேதனையில் நையாண்டி செய்திருக்கிறார்கள்.

நீதிமன்றத்தில் அப்போது இருந்த மூத்த வழக்கறிஞர் கே.கே.வேணுகோபாலிடம் நீதிபதிகள் அவர் இதை அரசுக்கு ஆலோசனையாகக் கூறலாமே என்று வேறு சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்ன பதிலும், அடுத்து நீதிபதிகள் அவரிடமே, அவர் ஏன் செக் மோசடி போன்ற வழக்குகளில் ஆஜராகிறார் என்பது பற்றிக் கேட்டு நடத்திய உரையாடலும் நம் பரிசீலனைக்குரியவை. லஞ்சத்தை அதிகாரபூர்வமாக்குவது தீர்வல்ல என்று சொன்ன வழக்கறிஞர் வேணுகோபால், லஞ்சம் வாங்குவது தவறு என்பதைப் பள்ளிக்கூடத்திலேயே கற்றுத் தருவதுதான் தீர்வு என்று சொல்லியிருக்கிறார்.

நிறைய விஷயங்களைப் பள்ளிப் பருவத்திலேயே கற்றுத் தருவதுதான் சரி என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஒழுக்கம், நேர்மை, சக மனிதர்களைப் பற்றிய அக்கறை, சமத்துவம் போன்ற மதிப்பீடுகளும், இசை, நடனம், இலக்கியம், நாடகம், ஓவியம், சிற்பம் போன்றவற்றில் ரசனையையும் குழந்தைப் பருவத்திலேயே ஏற்படுத்தினால்தான் நம் சமூகத்தில் நல்ல அரசியலுக்கான அடித்தளம் ஏற்பட முடியும்; மனத்தை வக்கிரமாக்காமல் வைரமாக்கும் கலை இலக்கியங்கள் தழைக்க முடியும்.

நம் சிறுவர் சிறுமியர் நல்ல வாக்காளர்களாகவும் சிறந்த ரசிகர்களாகவும் உருவாவதைப் பள்ளிக் கூடத்தில்



■ மார்க்கண்டேய கட்ஜு



யாரை நம்புவது? எங்கே தொடங்குவது

மட்டுமே தொடங்கவோ செய்யவோ முடியாது. குடும்பத்திலிருந்தே தொடங்க வேண்டும். பள்ளியில் செய்வதற்குக் குடும்பத்தின் முழு ஆதரவு தேவைப்படுகிறது.

ஆனால் படித்த குடும்பங்களே என்ன செய்கின்றன? குழந்தைகளை மார்க் வாங்கும் மெஷினாகவும் பணம் உற்பத்தி செய்யும் இயந்திரமாகவும் மாற்றும் கல்வி முறையைத்தான் தேடித்தேடிப் போய் ஆதரிக்கின்றன. தீவிரப் பயிற்சி மூலம் அதிக மதிப்பெண்கள் வாங்க வைக்கும் பள்ளிகளுக்குக் குழந்தைகளை அனுப்பும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் மாலை நேரத்தில் விளையாடுவதைக் கூட விரும்புவதில்லை. இசையாவது, நடனமாவது, இலக்கியமாவது...அதற்கெல்லாம் நேரமே கிடையாது.



டி.எஸ்.தாக்குர்

நான் படித்த அறுபதுகளில் பள்ளிக்கூடங்கள் இப்படி இல்லை. எங்களுக்கு வாரம் முழுவதும் இருந்த வகுப்புகளில் ஒரு பகுதியாக, ஓவியம், இசை, நெசவு போன்ற பாடங்கள் எல்லாம் இருந்தன. வருடம் முழுக்க நாடகம் போட்டோம். எனக்கு முந்தைய தலைமுறைகளில் படித்தவர்களுக்கும் இப்படிப்பட்ட சூழல் பள்ளிகளில் இருந்தது.

அந்தக் கல்வி முறையிலிருந்துதான் சி.வி.ராமன் போன்ற விஞ்ஞானிகளும், தலைசிறந்த மருத்துவர்களும் பொறியாளர்களும் உருவாகியிருக்கிறார்கள். பெயர்ப் பட்டியல் போட்டால் நீளும். இன்றைய கல்விமுறையிலிருந்து அல்ல. இன்று ஐ.டி. படித்துவிட்டு லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் இளைஞர்களிலிருந்து, தன் விருப்பத்துக்கு மாறாகக் குழந்தை பெற்றதற்காக மனைவியை ஒதுக்கி வைத்துவிட்டு, குழந்தையைக் கொல்பவர்கள் உருவாகியிருக்கிறார்கள். முந்தைய படித்த மூத்த தலைமுறைகளிலிருந்து விதிவிலக்காகக்கூட இப்படிப்பட்ட கொடூரங்களைப் பார்க்க முடியாது.

பள்ளிக்கூடங்களுக்குச் சென்று அடிப்படை இசை அறிவைப் புகட்டும் பயிற்சிகள் நடத்திவரும் ப்ரஹ்லத்வனி அமைப்பின் இசைக் கலைஞர் அனில் சீனிவாசன், எங்கள் தேனி அமைப்பின் சந்திப்பில்

சொன்னார். டி.வி. சூப்பர் சிங்கர் போட்டிகளுக்குக் குழந்தையை அனுப்பும் பெற்றோர், தமக்கு ஃபோன் செய்து குழந்தையைப் பயிற்றுவிக்கும்படி கேட்கிறார்கள். எப்போது? நிகழ்ச்சிக்கு மதியம் ஆடிஷனுக்குப் போவதற்கு ஒரு மணி நேரம் முன்னால், கொஞ்சம் டிப்ஸ் வேண்டுமென்று!


● கே.கே.வேணுகோபால்

எந்த விஷயத்தைக் கற்கவும் தொடர்ந்த பயிற்சியும் உழைப்பும் தேவை என்பதை மதிக்கும் மனநிலை மாறிவருகிறது. எப்படியாவது ஏதாவது செய்து 35 லட்ச ரூபாய் வீட்டை டி.வி.யில் பரிசாகத் தட்டி வந்துவிட முடியாதா என்ற பேராசை ஆட்டி வைக்கிறது. படித்த சுமாரான வசதி உள்ள குடும்பங்களிலேயே பண ஆசை பிரதானமாகி வரும்போது, எதும் இல்லாத குடும்பங்கள் ஆசைப்படுவதில் என்ன தவறு இருக்க முடியும்?

அவர்கள் ஆசைப்படத்தான் முடியுமே தவிர, படித்த குடும்பங்களுக்கு உள்ள வழிகள் அவர்களுக்கு இல்லை. அவர்கள் அதிகபட்சம் வோட்டுக்கு ஆயிரம் ரூபாயும், இலவச டி.வி. பெட்டி போன்றவற்றை அலைந்து திரிந்து பெறவும் மட்டும்தான் முடியும். அதில்கூட அவர்களுடன் படித்த வசதியான குடும்பங்கள் போட்டியிடுகின்றன. பங்களாக்களே நிறைந்த கருணாநிதி நகர் பகுதியில் குடியிருப்போர் சங்கம், எங்கே எப்போது இலவச டி.வி. டோக்கன் பெற வேண்டும் என்ற அறிவிப்பை பூங்கா அறிவிப்புப் பலகையில் தெரிவித்து சேவை செய்கிறது. ஆகஸ்ட் 15ல் சுதந்திர தினத்தை மிட்டாய் கொடுத்துக் கொண்டாடுவது தவிர செய்யும் சமூகப் பணி இதுதான்.



இந்த வார பூச்செண்டு!

ஊழல் செய்ததாகக் கைதான முன்னாள் மருத்துவக் கவுன்சில் தலைவர் கேதன் தேசாயின் டாக்டர் லைசென்ஸை தற்காலிகமாக ரத்து செய்திருப்பதற்காக மருத்துவக் கவுன்சிலுக்கு இ.வா.பூ.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் வேதனைப்பட்டிருக்கும் லஞ்சப் பிரச்னையில் பிரதானக் குற்றவாளிகள் யார்? படித்தவர்கள்தான். அவர்கள்தான் லஞ்சம் வாங்கும் அரசு வேலைக்கும், லஞ்சம் கொடுக்கும் தனியார் நிறுவன அதிகாரிகள் வேலைக்கும் செல்ல முடியும். தாசில்தார் முதல் தலைமைச் செயலாளர் வரை எல்லோரும் படித்தவர்கள்தான்.

ஊழல் செய்யும் அரசியல்வாதிகளில் வேண்டுமானால் கொஞ்சம் படிக்காதவர்கள் இருக்க முடியும். ஆனால், அவர்களுடைய கறுப்பை வெளுப்பாக்கவும், மறைக்கவும், மறுக்கவும் உதவி செய்யும் ஆடிட்டர்களும், வழக்கறிஞர்களும் காவல் அதிகாரிகளும் மெத்த படித்தவர்கள்தான். அவர்கள் உதவி இல்லாமல் எந்த அரசியல்வாதியும் விஞ்ஞான பூர்வமான ஊழலில் ஈடுபடவே முடியாது. செக் மோசடி வழக்கில் ஆஜராகிறீர்களே, காந்திஜி ஒருபோதும் அப்படியெல்லாம் ஆஜரானதில்லை என்று நீதிபதிகள் கேட்டதற்கு, வேணுகோபால் சொன்ன பதில், அப்படி ஆஜராகாவிட்டால், பெரும்பாலான வழக்குகள் தம் கையை விட்டுப் போய்விடும் என்பதுதான். ஸ்கேன் சென்ட்டரிடம் கமிஷன் வாங்கிக் கொண்டு பிரிஸ்கிரிப்ஷன் எழுதும் டாக்டர்கள் படிக்காத படிப்பா?

படித்தவன் சூதும் வாதும் பண்ணினால், போவான் போவான் அய்யோவென்று போவான் என்று பாரதி சபித்தது அன்றைக்கு வேண்டுமானால் படித்தவனையாக இருக்கலாம். ஆனால் இன்று படித்தவன் செய்யும் சூது வாதுகளால் அய்யோவென்று போவது படிக்காதவர்கள் தான்.

இந்த அவலமான சூழ்நிலையில் மக்களின் வேதனைகளுக்கு நிவாரணங்களை அளிக்க எஞ்சியிருப்பது மீடியாவும் நீதித்துறையும்தான். கொடுமை கொடுமை என்று கோயிலுக்குப் போனால் அங்கே ரெண்டு கொடுமை கூத்தாடுது என்பது போல இவையும் ஆகிவருகின்றன.





இந்த வார நகைச்சுவை!

எங்கள் கூட்டணி மகிழ்ச்சி தருவதாக சோனியா சொல்லியிருக்கிறார். எங்களுக்கும் மகிழ்ச்சிதான். கூட்டணிகள் வரும் போகும். தி.மு.க ஒருபோதும் சுயமரியாதையை இழக்காது. - திருச்சியில் முதல்வர் கருணாநிதி.

இந்த வாரம் ஓர் ஆங்கில சேனலின் டிபேட்டில் பங்கேற்க அழைத்திருந்தார்கள். ரஜினி ஃபினாமினன், ஒரு ஸ்டார் பவரா, மார்க்கெட் மனிலா என்று விவாதித்தோம். விற்பனை உத்திதான் என்று நானும் சக பத்திரிகையாளர் சுதாங்கனும் வாதிட்டோம். கடைசியில் ஜெயித்தது ஸ்டார் பவர் அணிதான். காரணம் அந்த சேனலும் சன் குழும எஸ்.சி.வி. வழியாகத்தான் ஒளிபரப்பாக வேண்டியிருக்கிறது; வேறு மாதிரி தீர்ப்பு சொல்ல முடியாது. பத்திரிகையாளர்கள் உண்மைக் கருத்தைப் பேசினால், அவர்களின் பத்திரிகைக்குப் பட விளம்பரம் நிறுத்தப்பட்டுவிடும். இதுதான் நமது மீடியா சூழல்.

இந்த வார அதிர்ச்சி!

மத்தியபிரதேசத்தில் இரு வருடங்களில் 400 லாரிகள் மொத்தமாக 1283 டன் வெடி மருந்துகளுடன் காணாமற் போயிருக்கின்றன. குவாரிகளில் பயன்படும் இந்த வெடிகள் காணாமற்போனதாகச் சொல்லி ஒரே வியாபாரி இவற்றைக் கறுப்பு மார்க்கெட்டில் விற்றிருக்கிறார்.

நீதித்துறைக்கு வந்தால், எந்த உச்ச நீதிமன்றம் லஞ்சம் பற்றி இவ்வளவு வேதனையுடன் அங்கலாய்த்திருக்கிறதோ, அதே உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதிகள் ஆறு பேர்- ரங்கநாத் மிஸ்ரா, கே.என்.சிங்., அகமதி, எம்.எம்.பூஞ்சி, ஏ.எஸ்.ஆனந்த், ஒய்.கே.சபர்வால் ஆகியோர் ஊழல் செய்திருக்கிறார்கள் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது என்று வழக்கறிஞர்கள் சாந்தி பூஷணும் பிரசாந்த் பூஷணும் மனு கொடுத்திருக்கிறார்கள். எங்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு போட்டாலும் பரவாயில்லை என்று பூஷண்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த மனு மீது இன்னும் உச்சநீதி மன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சென்ற வாரம் நீதிபதிகளுக்கான நடத்தை விதிகள் சட்டமுன்வடிவுக்கு தில்லியில் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அதே சமயத்தில், சென்னையில் உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பலர் குடும்பங்களுடன் பிரத்யேகமான எந்திரன் ஷோவுக்குச் சென்று கண்டுகளித்தார்கள். ஆளுக்கு 500 ரூபாய் டிக்கட் வாங்கிக் கொண்டு தியேட்டரில் ஒரு நீதிபதி சினிமா பார்க்க முடியாதா என்ன? இதை ஓசியில் செய்திருக்கும் நீதிபதிகள், நாளைக்கு ரஜினி, சன் குழுமம், ஷங்கர் ஆகியோருக்கு எதிரான வழக்குகள் வரும்போது இவர்கள் அவற்றை விசாரிக்கும் தார்மீக உரிமையையே இழந்துவிடுகிறார்கள் என்பதுதான் நம் அக்கறைக்குரியது.

எங்கே போகிறோம் நாம்? இப்போது 5 லிருந்து 15 வயது வரையுள்ள சிறுவர்கள் மூலம்தான் எல்லாம் மாறும் என்று நான் நம்பியிருக்கிறேன் - அவர்களை பெற்றோரும் ஆசிரியர்களும் கெடுக்காமல் இருந்தால்!

கல்வெட்டுகள்

தினம் ஒரு புத்தகம்!



நமது வாழ்நாளில் என்ன என்ன விஷயங்கள் மனத்தில் ஆழ்ந்து பதிகின்றனவோ அவை தாம் அந்திம காலத்தில் மனத்தில் தோன்றும் என்கிறார்கள். காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே மரணத்தறுவாயிலிருந்தபோது ''பகவானை நினையுங்கள்'' என்று அருகிலிருந்தவர்கள் சொன்னார்களாம். அவர் ஆனமட்டும் முயற்சி செய்து பார்த்துவிட்டுக் கடைசியில் ''என்ன செய்வேன்? கண்ணை மூடினால் இந்தியாவின் பொருளாதாரம் சம்பந்தமான புள்ளிவிவரங்களும், அரசியல் அமைப்பு விதிகளும், சட்டங்களும்தான் மனத்தின் முன் நிற்கின்றன. என்ன முயன்றாலும் பகவான் நினைவு வரவில்லை'' என்றாராம்.

இதுபோலவே என்னுடைய அந்திம நாளில் மனத்தில் தோன்றும் விஷயங்களுக்குள் ''மோசம் போனேன், கோபாலா! என்னைச் சுடலை மாடன் கோவில் தெரு 29வது நம்பர் வீட்டிலுள்ள குதிலில்...'' என்னும் வாக்கியம் முதன்மையாக இருக்குமென்று நம்புகிறேன்.

சென்னைப் பட்டணத்திலிருந்து எங்கள் கிராமத்துக்கு வந்த ஒருவர் 'இராஜாம்பாள்' என்னும் துப்பறியும் நாவலைக் கொண்டு வந்தார். அவர் அதைப் படித்து முடிக்கும் வரையில் பக்கத்திலேயே காத்திருந்து அவரிடமிருந்து புத்தகத்தை வாங்கிக் கொண்டேன். அன்றிரவு சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் புத்தகத்தை ஒரே மூச்சாகப் படித்து முடித்து இரவு சுமார் மூன்று மணிக்குத் தூங்கச் சென்றது இன்னும் ஞாபகமிருக்கிறது.

மறுநாள் பொழுது விடிந்ததும் மறுபடியும் ஒரு தடவை அடியிலிருந்து கடைசி வரையில் படித்து முடித்தேன். புத்தகத்தைப் பற்றி அப்போது நான் கொண்ட அபிப்பிராயம் என்னவென்பதை உடனே என் நண்பனிடம் தெரிவித்தேன். ''இதோ பார், முத்து! இந்த மாதிரிப் புத்தகம் தினம் ஒன்று மட்டும் என்னிடம் கொடுத்துவிட்டால் வாழ்க்கையில் எனக்கு வேறொன்றும் வேண்டாம். 'ராபின்ஸன் க்ருஸோ'வைப் போல் தனியாக ஒரு தீவில் கொண்டுபோய் விட்டுவிட்டால் ரொம்ப சந்தோஷமாக இருப்பேன்'' என்றேன்.

இளம்பிராயத்தில் இவ்வளவு தூரம் எனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட புஸ்தகம் இப்போது மற்றும் பலவற்றைப் போல் ரஸமற்றதாய்த் தோன்றப் போகிறதே என்ற பயத்தினால்தான் அதைப் படிப்பதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே இருந்தேன். பின்னர் எடுத்துப் படித்தபோது மேற்சொன்ன பயத்துக்கு அதிக காரணமில்லை. பெருமூச்சு விட்டேன்.

- படித்தேன்; ரசித்தேன் கட்டுரைத் தொகுப்பிலிருந்து..

அமரர் கல்கி




‘‘என் சொந்த கிராமம் தூத்துக்குடி மாவட்டம், புடிய முத்தூர். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு 'கல்கி'யில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த தங்கசாமி தன் பத்து ஏக்கரில் மரங்களாகவே வைத்து வளர்த்து வருவதாக ஒரு கட்டுரை படித்தேன். என்னுடைய பத்து செண்ட் நிலத்தில் நாம் ஏன் மரம் வைத்து வளர்க்கக் கூடாது? எனத் தோன்றியது. ஈஷாவின் பசுமைக் கரங்கள் அமைப்பு எனக்கு வழிகாட்டியது. இப்போது பத்து செண்ட் நிலத்திலும் மரம் நட்டு வளர்த்து வருகிறேன். என் கிராமத்தையே பசுமை கிராமமாக மாற்ற வேண்டி, கிராம மக்கள் அனைவரிடமும் பேசி விழிப்புணர்வு பிரசாரம் செய்கிறேன். 2010, ஜூனிலிருந்து இரு பதாயிரம் மரக்கன்றுகள் நட்டு வளர்ப்பது தான் என் இலக்கு!'' என்கிறார் வேனில் சுதாகர்.



கரங்கள்... மரங்கள்... வரங்கள்..!

மூன்று ஏக்கர் நிலத்தில் ஆயிரத்தை நூறு வன மரங்களும், நூறு பழ மரங்களும் வைத்து வளர்த்து வரும் வடசித்தூர் சோலையப்ப கவுண்டருக்கு வயது அறுபத்தைந்து. ''மரங்கள் வளர்ப்பதால்தான் இருபத்தைந்து வயது இளைஞனாக வலம் வருகிறேன். இதற்குக் காரணம் ஈஷாவின் பசுமைக் கரங்கள்தான்'' என்கிறார்!

தமிழகத்தின் பசுமைப் பரப்பை 33 சதவிகிதமாக அதிகரிக்கும் நோக்கத்தோடு, ஈஷாவின் பசுமைக் கரங்கள் அமைப்பு இயங்கி வருகிறது. 2005லிருந்து இதன் மூலம், சமீபகாலம் வரைக்குமாக சுமார் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதற்கு இருபத்தைந்து லட்சம் மக்களின் கரங்கள் இணைந்துள்ளன. மொத்தம் 11.4 கோடி மரக்கன்றுகள் நட்டு, வளர்க்கப்பட வேண்டும் என்பது இலக்கு. 2006ல் தமிழகத்தில் 27 மாவட்டங்களில் 6284 இடங்களில் 2,52,000 தன்னார்வத் தொண்டர்களின் கரங்களினால், 8,52,587 மரங்கள் தொடர்ந்து ஒரேநாளில் நடப்பட்டுள்ளன. இது உலக சாதனை என்று குறிப்பிடுகிறது பசுமை மரங்கள் அமைப்பு. இன்னமும் செய்ய வேண்டியவை பற்றி நினைக்கும்போது, 'இது வரை செய்தது சமுத்திரத்தின் ஒரு துளி போலத்தான்!' என்பது சத்குருவின் வாக்கு என்கிறார் இதன் ஆர்வலர் ஒருவர்.



- இருள்நீக்கியான்





அதிசய லிங்க பைரவி!

ஈஷா யோக மையத்திலுள்ள தியான லிங்க வளாகத்தில், தெற்குப் பக்கம் அமைந்துள்ள லிங்க பைரவி ஆலயம், தமிழ்நாட்டிலேயே வித்தியாசமானது. லிங்கம் என்பது ஆண் தன்மையை உணர்த்தும் சொல். லிங்க பைரவி பெண் தன்மையைக் குறிப்பது. ஒரு சக்திவாய்ந்த பெண் தெய்வமாக, லிங்க பைரவி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறாள். உடலில் சக்தி மையங்களாக விளங்கும் ஏழு சக்கரங்களின் ஆற்றல் தியான லிங்கத்தில் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பெண் தன்மை கொண்ட லிங்க பைரவிக்கு மூன்றரை சக்கர ஆற்றல், பிரதிஷ்டை மூலம் செலுத்தப்பட்டிருக்கிறது. என்கிறார்கள் ஈஷா யோக மைய பிரம்மச்சாரிகள். தியான லிங்கம் ஆன்ம விடுதலைக்கான ஆற்றலைத் தூண்டும்; ஆனால், லிங்க பைரவி பொருள் தேடல் ஆசையை நிறைவேற்றுவதுடன் மெல்ல


தேவிதண்டம்







ஆன்மிகப் பரிமாணத்துக்கும் அழைத்துச் செல்வாள். யோகா, ஆன்மிகம் தெரியாத மக்களுக்கு அவள் ஒரு பெரிய வாய்ப்பாக இருப்பாள் என்கிறார்கள் அவர்கள்.

கலை நுணுக்கமான கிரானைட் கட்டுமானம், கோயிலின் வெளிப்பிராகாரத்திலேயே தரையில் வித்தியாசமான நிலையில் வணங்கும் பெண் சிலை இருக்கிறது. அவளை மோகினி என்கிறார்கள். இடது கையை நீட்டியும், வலது காலை மடக்கியும், முகம் பூமியைப் படும்படியாகத் தலையை லேசாகச் சாய்த்தும் லிங்க பைரவியை வணங்குகிறாள் மோகினி. இதற்குப் பெயர் தேவிதண்டம். உடலியல் சாஸ்திரப்படி ஈடா, பிங்களா என்ற இருவகையான நாடிகள் உடலில் இருக்கின்றன. இடது பக்கம் ஓடும் ஈடா நாடி பெண் தன்மை கொண்டதாகவும், வலது பக்கம் ஓடும் பிங்களா நாடி ஆண் தன்மை கொண்டதாகவும் கருதப்படுகின்றன. தேவி தண்டத்தின் மூலம் இடது வலது நாடிகள் சமநிலைப் படுத்தப்பட்டு, நடுநிலையான சுஷும்னா நாடி தூண்டி விடப்படுமாம். இதன்மூலம் நமது சக்திநிலை மேல்நோக்கி நகர்வது தான் ஆன்மிகப் பயணத்தின் முதல் அடி என்கிறார்கள். மோகினியைப் பார்த்து விட்டுத் தலையை உயர்த்தினால் சுவரில் 1008 தீபங்கள், கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் வலதுபுறம்

லிங்க பைரவி பொருள் தேடல் ஆசையை நிறைவேற்றுவதுடன் ஆன்மிகப் பரிமாணத்துக்கும் அழைத்துச் செல்வாள்



சாய்ந்த நிலையில் பெரிய சூலம். இடது பக்கம் ஆலமரம். சூலம் அருகிலிருந்து நேரடியாக லிங்க பைரவிக்கு அருகில் போக முடியாது. வலது பக்கம் வழியாகச் சென்று தேவியை வழிபட வேண்டும். சுவரோடு ஒட்டியவாறு இருக்கிறாள் லிங்க பைரவி. மற்ற அம்மன் கோயில்களை ஒப்பிடும்போது வித்தியாசமான வடிவம். கண்கள் உக்கிரமாகவும், அதேசமயம் கருணை ததும்பும் வகையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே தீபாராதனை காட்டுவது, அபிஷேகம் செய்வது, நிர்வகிப்பது அனைத்தும் பெண்கள்தான். இவர்களை பைரவக்கிளிகள் என்று அழைக்கிறார்கள். லிங்க பைரவியின் தோற்றமும், மண்டபத்துக்குள் நிலவும் அசாத்திய அமைதியும் நம்மைக் கண் மூடித் தியானம் செய்யத் தூண்டுவதாக அமைகின்றன.

மற்ற அம்மன் கோயில்களைப் போல இங்கே மொட்டையடித்தல், காதுகுத்துதல், அன்னதானம் எல்லாம் உண்டு. வாரத்தின் எல்லா நாட்களும் தேவிக்குச் சிறப்பான நாட்கள்தான். ''ஏறக்குறைய 20 வருடங்களாக எந்தவிதமான பெண்மையின் வடிவத்தை உருவாக்குவது என்பது குறித்த யோசனையில் இருந்தேன். அதே சமயம் அவள் தீவிரமாகத் தீயைப் போன்று பெண் தன்மையோடு இருக்க வேண்டுமென்று விரும்பினேன். ஏனென்றால் இந்தக் காலத்துப் பெண்களிடம் உக்கிரமும், பெண்மையின் தீவிரமும் இல்லை. பொறாமை, முட்டாள் தனம், ஆசைகள், அறிவீனம் ஆகியவைதான் குடிகொண்டுள்ளன. தீ போன்ற தீவிரம் அவர்களிடம் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவள்தான் ஆணின் வாழ்க்கையில் வண்ணம் கூட்டமுடியும். அந்த வகையில் உருவாக்கப்பட்டவளே லிங்க பைரவி'' என்கிறார் ஜக்கி வாசுதேவ்.

'இந்தக் காலத்துப் பெண்களிடம் உக்கிரமும் பெண்மையின் தீவிரமும் இல்லை' என்கிறார் ஜக்கி.

- ஸ்ரீநி



என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

VBC Jewellery
HOUSE OF VUMMIDI



இணைந்து வழங்கும்

'வைர மங்கை'

-சிறப்பு சந்தா திட்டம்!*

★ ★

கல்கி நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான, தரத்திலும் நம்பர் ஒன் மகளிர் மாத இதழ் மங்கையர் மலர் அக்டோபர் இதழில், 'வைர மங்கை' - சிறப்பு சந்தா திட்டம் (பக்கம் 155) பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. இத்திட்டத்தின்படி எந்த ஒரு நபரும் மங்கையர் மலருக்கு சந்தா கட்டி, ஐந்து முத்து மங்கைகளை அறிமுகப்படுத்தலாம். அப்படி அறிமுகப் படுத்துபவர் பவள மங்கை என்ற பட்டம் பெறுவார். பவள மங்கைக்கும் (ரூ.250/- மதிப்புள்ள) முத்து மங்கைகளுக்கும் (ரூ.100/- மதிப்புள்ள) பரிசுக் கூப்பன்கள் அந்த மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப் படும்.

ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் முப்பது முத்து மங்கைகளை அறிமுகப் படுத்துவதன் மூலம், பவள மங்கையிலிருந்து பதவி உயர்வு பெற்று மரகத மங்கை என்ற மகுடம் சூட்டப்படும்.

இவ்வாறு முப்பது சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும் முதல் இருபது அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படம் அடுத்து வரும் மங்கையர் மலர் இதழில் வெளியாகும். கூடவே 'வைர மங்கை' பம்பர் பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ளவும் அவர்கள் தகுதி பெறுவார்கள்.

'கல்கி' நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான நமது மங்கையர் மலர் இதழின் அன்புவட்டம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்துக்கு, வாசகியரின் ஏகோபித்த வரவேற்பைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். கல்கி வாசகர்களையும் இத்திட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நீங்களும் வைர மங்கை ஆகணுமா? அதற்கான கூப்பன் அடுத்த பக்கத்தில்...

(ஆர்)

மேலும் விவரங்களுக்கு
77080 60341 / 99400 73736

அடுத்த
மரகத மங்கையாக மகுடம்
சூட்டிக் கொண்ட மதுரை
மீனாவுக்கு ஜே.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

மங்கையர் மலர் மங்கையருக்கேற்ற மலர். ஒவ்வொரு மாதமும் முதல் பக்கம் முதல் வரியில் தொடங்கி இறுதிப் பக்கம் இறுதி வரி வரை வாசிப்பேன். கடந்த இருபது வருடங்களுக்கு முன் அம்மாவோடு சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். இப்போது நட்பு வட்டத்தில் என் தோழிகளோடு இணைந்து, படித்ததைப் பரிமாறிக் கொள்கிறேன்.

- மீனா, மதுரை

மங்கையர் மலர் - VBC இணைந்து வழங்கும் 'வைர மங்கை' சிறப்பு சந்தா திட்டம்

அன்பு அனுஷா நடராஜனுக்கு, பவள மங்கையான நான் (தற்போதைய மங்கையர் மலர் வாசகி), மங்கையர் மலரை, 5 முத்து மங்கைகளுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தாங்கள் கொடுத்துள்ள இந்த படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, 5 ஓராண்டு சந்தாதாரர்களின் தொகையாக, ரூ.1250/- மங்கையர் மலர் என்ற பெயரில் டி.டி/M.O மூலம் இணைத்துள்ளேன். என்னுடைய 5 முத்து மங்கை தோழிகளுக்கும், மங்கையர் மலர் இதழை அடுத்த மாதத்திலிருந்து அனுப்பி வைக்கவும். எனக்கும் என் தோழிகளுக்குமான பரிசுக் கூப்பன்களையும் அனுப்பி வைக்கவும். மேலும் பல முத்து மங்கைகளை அறிமுகப்படுத்த என்னால் இயன்றவரை முயலுகிறேன்.

பவள மங்கை

எனது பெயர் :..

முகவரி:..

....

....

சந்தா எண்: (தாங்கள் சந்தாதாரராக இருந்தால்)

....

போன்: ....

ஈமெயில்..

3. பெயர் : ....

முகவரி : ....

....

....

போன்:..

ஈமெயில்..

நான் அறிமுகப்படுத்தும் முத்து மங்கைகள்:

கல்கி

1. பெயர் : ....

முகவரி : ....

....

....

போன்:..

ஈமெயில்..

4. பெயர் : ....

முகவரி : ....

....

....

போன்:..

ஈமெயில்..

2. பெயர் : ....

முகவரி : ....

....

....

போன்:..

ஈமெயில்..

5. பெயர் : ....

முகவரி : ....

....

....

போன்:..

ஈமெயில்..

உறையின் மீது 'வைர மங்கை' என்று குறிப்பிட்டு அனுப்பவும்

இப்படிக்கு

அனுப்ப வேண்டிய முகவரி

மங்கையர் மலர் சந்தா பிரிவு, மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

தேதி:..


குழந்தைகளின் இதயம்தான் என் மேடை
- வேலுசரவணன் பேட்டி
விலை ரூ. 120 மட்டும்
மகேஸ்வரன் செதுக்கிய
மலாக்கா
- தூரதேசப் பயணம்
கிரேஸிமோகன் கதை:
நீலம்
உங்கள் ஒவ்வொருவரின் ரசனைக்கும்...
கல்கி
தீபாவளி மலர்
2010
உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்யுங்கள் அல்லது கூரியர் மூலம் பெற ரூ.30/- சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்: விற்பனை மேலாளர், கல்கி தீபாவளி மலர், கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை - 600 032. தொடர்புக்கு : 044-43438844

பல புதிய செய்திகளைத் தொடர்ந்து தந்தபடி இருக்கும் கல்கியே நீ என் 'நண் பேண்டா!'

- எஸ். சக்திராஜ், திருச்சி

'பாலிடிக்ஸ் பஜார்' பகுதி வெகு ஜோர்! இன்னும், ஒன்றிரண்டு பக்கங்களை ஒதுக்கி எங்களை மகிழ்விக்கலாமே?

- இ.முகம்மது ஹஸன், திருச்சி

'அயோத்தி தீர்ப்பு' குறித்து ஞாநி, சர்மாவின் பூர்வோத்தரங்களை ஆராய்ந்து காரணம் கற்பிப்பது, ஞாநி போன்ற 'நடு நிலை(?)யாளருக்கு உகந்ததல்ல. இது 'திட்டும்' அல்ல; பூச்செண்டும் அல்ல, எதற்குமே உள்நோக்கம் கற்பிக்கா மலிருப்பதும் - அதுவும் சொந்த வாழ்க் கையை ஆராயாமல் இருப்பதும் - ஞாநி போன்றவர்களுக்கு அழகு.

- ஈ.லக்ஷ்மணன், பெசன்ட்நகர்

அமோக விளம்பர உத்தியைக் கையாண்டு விளம்பரம் தேடுவோர் மத்தி யில், எந்திரனுக்கு இப்படியொரு விமர் சனம் அளிக்க உம்மால்தான் ஐயா முடியும்!

- நித்திலா செல்வராஜ்,
கோயம்புத்தூர்

தீபிகா படுகோனின் பேட்டியில் உமது நிருபர் ஹி...ஹி... ஹி என்று சிரிப்பதைத்தான் சகிக்கமுடியவில்லை.

- அ.முரளிதரன், மதுரை

கூலா உலா பகுதியில் மதுரை டி.என்.சேஷகோபாலனின் பேட்டி உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட் டுச் சமயம் வெளிவந்திருந்தால் மாநாட்டிலேயே ஒரு விருது பெற்றிருப்பார்!

- அ.சம்பத், கோயம்புத்தூர்

'காலை எழுந்தவுடன் சிரிப்பு' நடிகை ஊர்வசியின் எழுத்துக்கள் எந்



தத் தேர்ந்த எழுத்தாளரின் எழுத்துக்கும் சோடை போனதல்ல... சபாஷ்!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

அஃறிணைகள் குறும்படத்தினைக் காணவேண்டிய ஆர்வத்தினை ப்ரியனின் கட்டுரை ஏற்படுத்தியது.

- எஸ்.ஸ்ரீகாந்த், நெய்வேலி

ஒரு E.mail மூலம் ராகுலைச் சந்திக்க நேரம் ஒதுக்கக் கேட்டேன். ஒதுக்கினார். சந்தித்தேன். இதில் பழம் புளிக்க என்ன இருக்கிறது. அந்தச் சந்திப்புக்குப் பின் நான் காங்கிரஸில் சேர முடிவு செய்துள்ளேன்.

- எஸ்.வி.சேகர்,

“அட சாமிகளே... யாரோ எதுவோ சொல்லிட்டாங்கங்கிறதுக்காக 'நடக்குமென்பார் நடக்கும்' பகுதியில் இடம் பெறும் அழகான படத்தை ஏனய்யா போடாமல் இருக்கிறீர்கள்...”

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

கவிதை கஃபே, வெள்ளையில் கலர் கலர் எழுத்துக்களால் layout நன்கு பளிச் சிட்டது. மிக்க நன்றி. பல்லக்கு அசை போடுவதும், செருப்பின் செயலும், குழந்தைக்குப் பிடித்ததை அம்மா படைப்பதும், மனத்தைக் கவர்ந்த அருமையான கவிதைகள், கன ஜோர்!

- சி.கஸ்தூரி ரத்தினம், நீலாங்கரை

பவித்ரா நந்தகுமாரின் 'அந்தை' சிறுகதை மன நெகிழ்ச்சியை அடையச் செய்தது.

- ஜி.கீர்த்தனா, நெய்வேலி



என் நண்பேன்டா!

சென்ற வாரம் என் 'ஓ பக்கங்'களில் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற அசோக் சிங்கால், அயோத்தி இருக்கும் உத்தரப்பிரதேச மாநிலத்தின் காவல் துறையின் தலைவராகப் பணியாற்றியவர். ஓய்வு பெற்றதும் பரிஷத் தலைவரானார் என்று அச்சாகி இருக்கிறது. பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான பி.பி. சிங்கால், அசோக் சிங்காலின் சகோதரர். இவர்தான் உத்தரப் பிரதேச மாநிலத்தின் காவல் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். ஓய்வு பெற்றதும் பி.ஜே.பி. ராஜ்ய சபை எம்.பி.யானார். தவறுக்கு வருந்துகிறேன்.

- ஞாநி

காலை எழுந்தவுடன் சிரிப்பு!

ஊர்வசி

16

ஒவ்வொரு நடிகன் நடிகைக்குள்ளும் எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கும். உங்களுக்குத் தெரியாத இன்னொரு முகம் இருக்கும். அதைதான் ஊடகங்கள் ஃபோகஸ் செய்யணும். அதை விட்டுட்டு தனக்குப் பிடிச்சி இருந்தா... விலை போற சரக்கா இருந்தா... அடுத்த சி.எம். இவர்தான்னு எழுதறது, நடக்க முடியாத நடிகனைக் கூட 'நடைநாயகன்'னு புகழ்ந்து உச்சிக்குத் தூக்கிப் போய் வைக்கிறது எல்லாம் செய்வாங்க. புடிக்கலேன்னா... ஒரு சின்ன மைனஸ் இருந்தாக் கூட ஊதி ஊதிப் பெரிசாக்கி 'அவதூறு சுறா'வுக்கு அப்படியே தூக்கிப் போட்டுடறாங்க. இது ரொம்ப தப்புன்னு எனக்கும் சொல்ல உரிமையிருக்கு இல்லே...



ஒரு ஃபாரின் கதை... அந்தக் காலத்தில் ஒரு தீவுல இருக்கிற ஜனங்க யானையைப் பார்த்ததே இல்லையாம். யானைன்னா அவ்வளவு மோகம் அவங்களுக்கு. இல்லாதது மேலதான் ஈர்ப்பு அதிகம் நம்ம ஜனங்களுக்கு. இதை பயன்படுத்தி ஆட்சிக்கு நல்ல பேரு வாங்கணும்னு அந்த அரசாங்கம் ஒரு யானையை வாங்காம, காத்து நிரப்புன யானை பலூனை வாங்கி, அசல் யானை மாதிரி பெரிய கூண்டுக்கு நடுவுல நிக்க வெச்சதாம். (ஒரிஜினல் வாங்காம, பலூன் யானை வாங்குறதுல எவ்வளவு கமிஷனோ?) அதைத் தொடாம பார்க்க, தீவு ஜனங்களுக்கு அறிவிச்சதாம். கூட்டம் கூட்டமா ஜனங்க யானையைப் பார்த்துக்கிட்டே போனாங்களாம். காத்துல பலூன் அசையறப்ப ரொம்ப பயந்தாங்களாம். நீண்ட நாள் ஆசைய நிறைவேற்றிய அரசைப் பாராட்டினாங்க. ஒரு சின்னப் பையனுக்கு மட்டும் லேசா சந்தேகம். ரொம்ப நாளா அதை வாச் பண்ணிக்கிட்டே இருந்தான். கிட்ட நெருங்கவிடாததால்

அசல் காஞ்சிபுரம் பட்டு சேலைகள்
20%* சங்கத் தள்ளுபடி மற்றும் அரசு தள்ளுபடி ரூ.1200/- வரை
காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் பட்டு கூட்டுறவு சங்கம்
தமிழ்நாடு அரசு கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் இயங்கும் கூட்டுறவு சங்கம்
Kanchipuram ' 27222196 | Chennai ' 28192851 | Salem ' 2260740
Erode ' 2225882 | Madurai ' 9942576104

யாருக்கும் தெரியாம ஒரு நாள் இரவுக் காவலை மீறி யானைக் கூண்டுக்குக் கிட்டே போயிட்டான். உற்று உற்றுப் பார்த்தான். அதில் அசைவோ ஜீவனோ இல்லை. எந்த மிருகத்தைத் தொல்லை பண்ணாலும் அது திருப்பித் தாக்கும் தானே. துணிச்சலோடு தான் கொண்டு வந்த ஊசியால அந்த யானையைக் குத்தினான் சிறுவன். அது உஸ்... உஸ்ன்னு கத்திக்கிட்டு (காத்துப் போன யானை பின்ன எப்படிப் பிளிறும்?) சொய்னு சுருங்கி ஒரு கைப்பிடி பலூனா தரையில கிடந்ததாம். பையனுக்கு இப்பதான் நிம்மதி... 'நானும் ஏமாறல இனி என் ஜனங்களும் ஏமாற மாட்டாங்கள்'னு.



மறுநாள் அரசுக்கு விஷயம் தெரிஞ்சுப் போச்சு. அது அறிக்கை விட்டது ''யாரோ வெளி


யட்ச வாசஸ்தலத்திலிருந்து...

நாட்டுச் சதியால யானை கடத்தப் பட்டுள்ளது. அதைக் கண்டுபிடிக்க ஒரு விசாரணை கமிஷன் வைக்கப்பட்டுள்ளது. காணாமல் போன யானை இதுவரை ஜனங்களுக்குக் கொடுத்த சந்தோஷத்தை மதித்து யானைக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப ஒரு திட்டக் குழுவை நியமிக்க இருக்கிறோம்''ன்னு. இந்தக் கதையை இந்திரா பார்த்தசாரதியோட பிறந்தநாள் விழாவில் எஸ்.ராமகிருஷ்ணன் சொல்லி, அந்தச் சிறுவனைப் போல உண்மையைக் கண்டறிய சதா


அக்டோபர் மாத பட்டுப் புடைவைகளைப் பரிசாக வழங்குவோர்.



தேடல் உள்ள யதார்த்த மனிதர்களை விட, சற்று மேலாக யோசிக்கும் உன்னத எழுத்தாளன் இந்திரா பார்த்தசாரதின்னு புகழ்ந்ததா நண்பர் அமிர்தம் சூர்யா என்கிட்டே பேசும்போது, இந்தக் கதையைச் சொன்னார். எனக்கு என்னவோ ஒவ்வொரு ஊடகமும், சராசரி மனுஷனும் பலூன் யானையில ஊசி குத்தி உண்மையைத் தெரிஞ்சு அறிவிக்கிறவங்களாத் தான் இருக்கணும். ஏன்னா... தினந்தோறும் காசு கொடுத்து வாங்குற கடிதம் பத்திரிகை தானே? கடிதத்தைப் பற்றிப் பேசும்போது அதில் பதிவாகிற எழுத்து அதன் நம்பகத்தன்மை, அதன் ஆவணத் தகுதி எல்லாமே கவனத்துக்குரியது தானே. ஒரு பெரிய இயக்கத்தையே பத்திரிகையில் தனது தொடர் கடிதங்களால்... உடன் பிறப்பேன்னு எழுதி... அதன் மூலம் தம் மக்களைத் தமக்குள் வைத்திருப்பது எவ்வளவு பெரிய விஷயம். கலைஞரின் கடிதங்கள் கூட கடித விஸ்வரூபம் தான். என் முன்னேற்றத்துல பெரும்பங்கு கடிதத்துக்கு உண்டு. லாலேட்டன் ஒருமுறை இயக்குநர் சத்யன் அந்திகாருக்கு ஒரு கடிதம் எழுதினார். இந்தப் பொண்ணு திறமையானவள். நல்ல ரோல் கொடு. நமக்குப் பேர் வாங்கித் தருவான்னு வஞ்சனையில்லாம



இந்திரா பார்த்தசாரதி



எஸ்.ராமகிருஷ்ணன்

எழுதியிருந்தார். ஆனா அதை அவ்வளவு சீக்கிரம் புரிஞ்சிக்க முடியாது. ஏன்னா அதில் யட்ச வாசஸ்தலத்திலிருந்து நான் எழுதும் கடிதம்னு துவங்கும் அப்படி ஓர் ஊர் கேரளாவில் இல்லை. விஷயம் என்னன்னா, யட்சி என்றால் மோகினி. மோகினி எங்கே வசிக்கும். வாசம் மிக்க பாலா என்னும் மரத்தில். பாலப்பூ அதிமயக்கும் நறுமணம். பாலா மரங்கள் அதிகம் இருப்பதால் பாலக்காடு. பாலாக்காட்டிலிருந்து எழுதுறேன்னு சொல்றதைத் தான் யட்ச வாசஸ்தலம்னு நாசூக்கா கலையம்சமா எழுதினார். என்னை அவர் தூளி ஹம்சம் என்று குறிப்பிடுவார். தூளி - தூள் - பொடி (என் பட்ட பேரு) ஹம்சம்னா அன்னப் பறவை. சின்ன அன்னத்தைப் போன்றவள் ஊர்வசியாம். இப்படித்தான் விடுகதையால பின்னப்பட்டு இருக்கும் லாலேட்டன் லெட்டர்ஸ்.

சேட்டன் என்றால் அண்ணன். லால்சேட்டன் மருவி லாலேட்டன்னு கூப்பிடுவேன். லால்? அட மோகன்லால்...பா... நமக்கும் கொஞ்சம் தெரியுமில்ல அவரைப் பற்றி... அவரின் இன்னொரு முகம் பற்றி... அடுத்த வாரம் சொல்றேன்.

(தொடரும்)

படம்: ஞானம்

அசல் காஞ்சிபுரம் பட்டு சேலைகள்
20%* சங்கத் தள்ளுபடி மற்றும் அரசு தள்ளுபடி ரூ.1200/- வரை
காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் பட்டு கூட்டுறவு சங்கம்
தமிழ்நாடு அரசு கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் இயங்கும் கூட்டுறவு சங்கம்
Kanchipuram : 27222196 | Chennai : 28192851 | Salem : 2260740
Erode : 2225882 | Madurai : 9942576104

ஊர்வசி போட்டி சில்க் சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவைப் பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

அக்டோபர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **09.11.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

....................பின்கோடு:....................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

அக்டோபர் - 24

லாலேட்டன் யார்?

விடையை டிக் செய்யவும்

- [ ] இந்திரா பார்த்தசாரதி
- [ ] எஸ்.ராமகிருஷ்ணன்
- [ ] மம்முட்டி
- [ ] மோகன்லால்



105 கோடியில்

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கே.மீனா. தொடக்கக் காலங்களில் ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரியின் கணிப்பொறித்துறைப் பேராசிரியர், துறைத் தலைவர், துணை முதல்வர், முதல்வர் எனப் பணியாற்றிய ஆண்டுகளிலேயே பல்கலைக்கழக சிண்டிகேட் மற்றும் செனட் உறுப்பினர், ஆறு மாதம் துணைவேந்தர் (பொறுப்பு) எனப் படிப்படியாக உயர்ந்து, தற்போது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தொடர்ந்து வருகிறார். 1982ல் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது துணைவேந்தர். அதிலும், முதல் பெண் துணைவேந்தர் என்பது தனிச்சிறப்பு.

நடப்புக் கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தின் தனிச் சிறப்புகள். வளர்ச்சித் திட்டங்கள் என்னென்ன? போன்ற விளக்கங்களுடன் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தரை அணுகினோம்...

“இருபத்தியெட்டு ஆண்டுகளுக்கு முன்பு பாரதிதாசன் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டபோது ஆங்கிலம், பொருளியல், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல் என ஆறு துறைகள் மட்டுமே இருந்தன. தற்போது முப்பத்தி நான்கு துறைகள், பதினொரு சிறப்பு ஆய்வு மையங்கள் என வளர்ந்துள்ளது. பல்கலைக்கழகத் துறைகளில் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம் போன்ற ஆய்வுக் கல்விகள் மட்டுமின்றி சான்றிதழ்க் கல்வி முதல் முதுநிலைக் கல்விவரை வழங்கப்படுகின்றன. முதுநிலைப் படிப்புகள் அனைத்தும் உலகத் தரத்துக்கு இணையாகத் தெரிவுநிலைக் கல்வித் திட்டமாக (CBCS) வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட கல்வி நிலையில் குறிப்பிட்ட தரப்புள்ளிகளைப் பெறுவோர்

(credits) இத் தரப்புள்ளிகளை அளவீடு களாகக் கொண்டு எந்தவொரு வெளி மாநிலத்திலும் அல்லது வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்திலும் தேவையான மேற்கல்வியைப் பெறலாம்.

தேசிய அறிவியல் தொழில்நுட்பத் துறையின் (DST-FIST) ஆய்வுகளுக்காக ஒன்பதரைக் கோடி ரூபாய் உதவித் தொகையினை விலங்கு அறிவியல் துறை, தாவர அறிவியல் துறை, தொலையுணர்வு மையம், சுற்றுச் சூழல் உயிர்த் தொழில் நுட்பவியல் துறை ஆகியன பெற்றுத் திறம்பட இயங்கிவருகின்றன.

ஆய்வு மையங்கள் பலவும் தேசிய அளவிலான ஆராய்ச்சிக்கான நிதி ஆதரவைப் பெற்றுவருகின்றன. குறிப்பாக தேசிய கடல்சார் சையனோ பாக்டீரியா ஆய்வு மையம், தேசிய உயிர்த் தொழில் நுட்பத் துறையின் நிதி உதவியையும், நிரலற்ற இயக்கவியல் மையம் (Centre for Non-Linear Dynamics) தேசிய அறிவியல் தொழில்நுட்பத் துறையின் நிதி உதவியையும், தொலையுணர்வு மையம் AICTE மற்றும் ISROவின் நிதி உதவியையும் பெற்று செயல்பட்டு வருகின்றன.

ஆய்வுத் திட்டம்!

தேசிய மற்றும் உலக அளவிலான நிறுவனங்களிடமிருந்து சுமார் நூற்றிஐந்து கோடி ரூபாய் அளவுக்கு ஆய்வுத்திட்ட நிதி உதவிகளைப் பெற்று, கல்வித்துறை வளர்ச்சியில் பல சிகரங்களை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது பாரதிதாசன் பல்கலைக் கழகம். கலைஞர் களஞ்சியம் - தொகுப்புத் திட்டம், பாமரருக்குத் தமிழ் இலக்கியம் (சங்க இலக்கியப் பாடல்களில் உள்ள சிறு சிறு கதைகளை எளிய நடையில் உருவாக்கும் முயற்சி) என்கிற பிரிவுகளின் கீழ் செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓலைச் சுவடிகளைத் தேடிச் சேகரித்து அவற்றை (Micro Film) நுண்பட ஒளிச்சுருள் வடிவில் பாதுகாக்கும் பணியில் தமிழ் மரபுக் களஞ்சியம் அமைப்பு இயங்கிவருகிறது. இதுவரை 237 சுவடிக் கட்டுகள் நுண்பட ஒளிச்சுருள்களாக நகலெடுக்கப்பட்டுள்ளன.

பார்வையற்றோரும், பார்வை பெற்றோரும் தமிழில் தகவல்களைப் பெற ஒலி - ஒளி ஆவண இணைப்புகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பாரதிதாசன் பாடல்களை ஒலி நூலாகவும் (தமிழில்) ஆங்கில மொழிபெயர்ப்பினை எழுத்து ஆவணமாகவும் இணைத்து வெளியிடும் திட்டமும் உள்ளது. மாற்றுத் திறனுடையோர் வளமையம் நிறுவப்பட்டு, அதில் அவர்களுக்கான ஆவண எழுத்துணரிகளை (text to speech) உருவாக்குதல் இம் மையத்தின் பணி. அகரமுதலியின் மின் ஆக்க வடிவம் (e-text) தற்போது (TAB) எனப்படும் தமிழக அரசின் அங்கீகரிக்கப்பட்ட இரு மொழித் தரக் குறியீட்டின் அடிப்படையில் தயாராக உள்ளது'' என்கிறார் துணைவேந்தர் முனைவர் கே.மீனா.



* துணைவேந்தர் கே.மீனா

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



"கலாட்டா பிரமுகரைத் தோலுரிப்பேன்!"

திருச்சியில் சோனியா காந்தி பேசிய கூட்டத்தில், ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்படவில்லை. காங்கிரஸ் தொண்டர்களிடையே இந்த விவகாரம் மனக் குமுறலாக இருக்கிறது. இது பற்றியும் மேலும் அந்தக் கூட்டத்துக்குப் பின்னர் காங்கிரஸ் தொண்டர்களின் உணர்வுகள் எப்படியிருக்கின்றன என்பது குறித்தும் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனிடம் பேசினோம்.

பிரம்மாண்டம்:

தமிழ்நாட்டிலேயே சமீபகாலங்களில் நடந்த காங்கிரஸ் கூட்டங்களில் பிரம்மாண்டமான கூட்டம் இது. எங்கள் தொண்டர்களிடையே மகத்தான புத்துணர்வை இது தூண்டியிருக்கிறது. ''தமிழகத்தில் காங்கிரஸ் தனித்துவமாக இயங்க வேண்டும்'' என்று அன்னை சோனியா சொன்னது, 43 ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு முதன்மைக் கட்சியாக மாறவேண்டும் என்ற அவரது எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அவரது எண்ணத்தை ஈடேற்றும் வகையில் ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டனும் இனி பணியாற்றுவான்.

தொண்டர்கள் உணர்வு:

மேலிடம் தொண்டர்களின் உணர்வைப் புரிந்துகொண்டு வழிகாட்ட வேண்டும் என்று ப.சிதம்பரம் பேசியது மிகவும் வரவேற்கத்தக்கது. காங்கிரஸ் தலைமையில் தனிக் கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடிக்க வேண்டும்

முதுமை - உங்கள் உடலுக்கே, உள்ளத்திற்கல்ல...



காஞ்சி மஹா பெரியவா் துணை

ஸ்ரீ அவ்வை ஹோம்

(ஆதரவற்ற அன்னையருக்கு புகலிடம் அளிக்கும் ஓர் அன்பாலயம்)

11, அதிபத்தர் சாலை, சேக்கிழார் நகர், குன்றத்தூர்
சென்னை-600 069. போன்: 044-3200 4200



அனைவரும் கொண்டாடும் தீபாவளியை ஆதரவற்ற அன்னையரும் கொண்டாட உதவுங்கள்



தீபாவளி நல்வாழ்த்துக்கள்! வேதமாதா காயத்ரி தேவியின் பேரருளால் சமுதாயத்தினரால் நிராகரிக்கப்பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். இங்கு ஆதரவின்றித் தவிக்கும், நோய்களால் பாதிக்கப்பட்ட, நடக்க முடியாமல் படுத்தபடுக்கையாக உள்ள வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் இலவசமாகப் பூர்த்தி செய்து வருகிறோம். தினசரி இறை வழிபாடு, தியானம், கூட்டுப் பிரார்த்தனையுடன் திருமுறை பாராயணம் செய்து அவர்களை பராமரித்து வருகிறோம். உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் நீடூ வாழ அன்னையர்களின் கூட்டுப் பிரார்த்தனை, அக்னி ஹோத்ரம் தினமும் நடைபெறுகிறது. அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் தீபாவளி பண்டிகையை ஆதரவற்ற அன்னையரும் கொண்டாட உங்கள் அன்பளிப்புகளை பொருளாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். வயதான அன்னையருக்கு தீபாவளி திருநாளில் தாங்கள் செய்யும் சிறு உதவியும் நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தை குளிரச் செய்வதற்கு இணையாகும். தாங்களும் குடும்பத்துடன் இந்த இல்லத்தை பார்வையிடலாம்.

தீபாவளி காலை உணவுக்கு ரூ.500/- அனுப்பும் அன்பர்களுக்கு துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்

தீபாவளி மதிய உணவுக்கு ரூ.550/- அனுப்பும் அன்பர்களுக்கு ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்

தீபாவளி இரவு உணவுக்கு ரூ.450/- அனுப்பும் அன்பர்களுக்கு நவரத்தின மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் தீபாவளி உணவுக்கு ரூ.1500/- அனுப்பும் அன்பர்களுக்கு ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்

5 நாள் உணவுக்கு ரூ.5,500/- அனுப்பும் அன்பர்களுக்கு பவள மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

10 நாள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீகாயத்ரி விக்ரகம் ஒன்று அனுப்பி வைக்கப்படும்

அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1300/- அனுப்பும் அன்பர்களுக்கு சந்தன மாலை அனுப்பி வைக்கப்படும்

அன்னையர்களுக்கு ஒரு மாத உடைக்கு ரூ.3,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீகாயத்ரி டாலர் ஒன்று அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்பும் அன்பர்களுக்கு முத்துமணி மாலை அனுப்பி வைக்கப்படும்

தங்களின் திருமண நாள், பிறந்த நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், பண்டிகை நாட்கள், அமாவாசை மற்றும் பௌர்ணமி, கிருத்திகையில் வயதான அன்னையர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து, அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅவ்வை ஹோமில் கலைமகள் அருளையும் திருமகள் அருளையும் ஒரு சேர வழங்கி அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் காயத்ரி ஹோமம் நடைபெறுகிறது. இதில் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ.300/-

காயத்ரி என்பதன் பொருள் தன்னை துதிப்பவரை, ஜபிப்பவரை காப்பாற்றுவது என்பது பொருள். காயத்ரி வழிபாடு நமக்கு நீண்ட ஆயுள், புகழ், செல்வம், கல்வி, மன அமைதி மற்றும் புத்திர பாக்கியத்தை அளிக்கிறது. காயத்ரி மூல மந்திரம் பாவங்களை அழித்து, புண்ணியத்தை வளர்ப்பதற்கு தோன்றிய மந்திரமாகும். நோய் நொடிகளை தவிடு பொடியாக்கும் சக்தி இதற்கு உண்டு. குடும்ப பிரச்சனைகள், செவ்வாய், நாக தோஷங்கள், திருமணம், வியாபார தடைகளை போக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இந்த காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணமாக ரூ.300/- அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் தெளிவாக எழுதி அனுப்பினால், தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனியாக சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம், ஸ்ரீ காயத்ரி மகா மந்திரம், மகா மிருத்யுஞ்சய மந்திரம் மற்றும் ஜெப மாலை அடங்கிய சிடியும், காயத்ரி வண்ணப்படமும், காயத்ரி தேவி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும். காயத்ரிதேவியின் மகா மந்திரத்தின் ஒலிகளின் பயனை அனைத்து இல்லங்களிலும் ஒலித்து ஐஸ்வர்யம் பெற வைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். வயதான அன்னையரை பாதுகாக்கவும் ஸ்ரீகாயத்ரி ஹோமத்தில் பங்கு பெறவும் தங்கள் நன்கொடையை மேற்கண்ட முகவரிக்கு **Cheque/DD/MO** மூலமாக **SRI AVVAI HOME, CHENNAI** என்ற பெயருக்கு அனுப்பி காயத்ரி தேவியின் திருவருளால் பூரண ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று, துன்பங்கள் நீங்கி, புகழ் மிகுந்த வாழ்க்கை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

பெறுபவர்களை விட கொடுப்பவர்களே பாக்கியவான்கள் - சுவாமி விவேகானந்தர்
நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

ஆதரவற்ற அன்னையர் வாழ்வில் தீப ஒளி ஏற்றுவோம்!

என்பதுதான் தொண்டர்களின் உணர்வு. இந்த உணர்வை சரியான நேரத்தில் மேலிடம் அங்கீகரிக்கும். அதுவரை சோனியா, ராகுல் வழிகாட்டுதலில் கட்சிக்கு மேலும் செல்வாக்குச் சேர்ப்போம். காங்கிரஸ் மீண்டும் தனித்து ஆட்சிக்கு வருவதற்காக உழைப்பதில் எங்களுக்கு எந்தக் கருத்து வேற்றுமையும் கிடையாது.



"சோனியா காந்தியே, மாநில அரசு மூலம் செயல்படும் மத்திய அரசுத் திட்டங்களைப் பற்றி மக்களிடம் சொல்லுங்கள் என்று கூறிவிட்டார்!"

பேசாத குறை:

திருச்சி கூட்டத்தில் நான் பேசாதது ஒரு பெரிய குறை என்று என்பால் அன்பு கொண்ட தொண்டர்கள் நினைக்கிறார்கள். ஆனால், ''பேசவில்லை'' என்ற குறை எனக்கு இல்லை. காரணம் அன்னை சோனியா, சிதம்பரம், ஜி.கே.வாசன், திருநாவுக்கரசர்... ஆகியோர் நான் சொல்ல விரும்பிய கருத்துகளைத்தான் பேசினார்கள்.

மத்திய அரசுத் திட்டங்கள்:

மாநில அரசு நிறைவேற்றிவரும் பல திட்டங்களுக்கு மத்திய அரசுதான் நிதியுதவி செய்து வருகிறது. அதேபோல் பல மத்திய அரசுத் திட்டங்களும் மாநில அரசு மூலம் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த காலங்களில் இதை நான் பேசியபோது 'ஏதோ கூட்டணிக் கட்சியான தி.மு.க.வை எதிர்த்துப் பேசுகிறேன்' என்று சிலர் கிளப்பிவிட்டார்கள். ஆனால் சோனியா காந்தியே, மாநில அரசு மூலம் செயல்படும் மத்திய அரசுத் திட்டங்களைப் பற்றி மக்களிடம் சொல்லுங்கள்' என்று கூறிவிட்டார். இனி அதைப்பற்றி மேடைக்கு மேடை முழங்குவேன். இப்போது இளைஞர் காங்கிரஸ் பாதயாத்திரையில் பேசி வருகிறார்கள்.

தி.மு.க. கூட்டணி:

'கூட்டணியில் இருக்கிறோம். கூட்டணிக் கட்சிக்கு மரியாதை கொடுக்கிறோம்' என்று சோனியா சொன்னாலும், 'வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இதே கூட்டணி தொடரும் என்று சோனியா சொல்லவில்லையே' என்பது சிலரின் கருத்தாக இருக்கிறது. ''காங்கிரஸ் தனித்துவத்துடனும், முதன்மைக் கட்சியாகவும் இயங்க வேண்டும்'' என்று சோனியா காந்தி சொன்ன ஒரு வரி நிறைய அர்த்தமுடையது! தேர்தல் நெருக்கத்தில் மேலிடம் எடுக்கும் எந்த முடிவுக்கும் தொண்டன் கட்டுப்படுவான். தி.மு.க.விடம் கூட்டணியில் அதிக இடங்களைப் பெறவே காங்கிரஸ் இப்படி நடந்து கொள்கிறது என்பதெல்லாம் சிலரது உளறல்!

கலாட்டா பிரமுகர்:

அரசியல் பிரமுகர் ஒருவர் அதிகாரத் துணையுடன் நூறுக்கும்மேற்பட்ட ஆட்டோக்களில் சோனியா கூட்டத்துக்கு அடி ஆட்களை அனுப்பிக் குழப்பம் விளைவிக்க முயன்றார். அதுவும் குறிப்பாக நான் பேசும் போது கலாட்டா செய்யத் திட்டமிட்டதாக எங்கள் தொண்டர்கள் கூறுகிறார்கள். ஆனால் பிரம்மாண்டமான, எழுச்சியான கூட்டத்தைப் பார்த்துக் குழப்பம் விளைவித்தால் மாட்டிக் கொள்வோம் என்று பயந்து அமைதியாக, போய்விட்டார்கள். பின்னாலிருந்து இயக்கிய அந்தப் பிரமுகரை விரைவில் தோலுரித்துக் காட்டுவேன்.

- ப்ரியன்

கலக்க வருதுப்பா...

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி!

இப்ப சேலம் மாவட்டத்துக்கு வருது கல்கி டீம்...

- மல்கோவா மாம்பழம்
- தாரமங்கலம் சிற்பம்
- சேலம் இரும்பு உருக்காலை
- ஏற்காடு குளிர்ச்சி
- காவிரியின் வளமை
- ஸ்கந்தாஸ்ரமம் பிரம்மாண்டம்
- மேட்டூரின் முக்கியத்துவம்
- கே.பி.என். சேவை
- மணக்கும் ஏலக்காய்
- மாடர்ன் தியேட்டர்ஸ் பாரம்பரியம்
- மத்திய சிறைச்சாலை வரலாறு



தாரமங்கலம் சிற்பம்

இன்னும் என்னவெல்லாம் இருக்கு?
சேலம் மாவட்டத்தின் (+) (−) என்ன?
எழுதி அனுப்புங்க...

வாசகர்களே!

உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் கல்கி சேலம் மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!



சேலம்

மாவட்ட வாசகர்களே... திக்திப்பான அனுபவத்துக்கு ரெடியாகுங்க!

ஏற்காடு மலைப்பாதைச் சாலை

விவரங்கள் அடுத்த பக்கத்துல இருக்கு! →

ஆமாம்! உங்கள் சேலம் மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்கு சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- சேலம் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ✓ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ✓ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ✓ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ✓ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ✓ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கலக்க வருதுப்பா கல்கி

சேலம் மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்

☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 25.10.2010

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...

நாங்க உடனே ரோடு போடுறோம்!


அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
CHAMPA
இந்த நவராத்திரி
தீபாவளியை
எங்களுடன்
கொண்டாடுங்கள்...
உங்களுக்காக...
சம்பாவின்
புதிய வரவுகள்
'கிராண்ட் லுக்'
ஜரிகை வேலைப்பாடுடன்,
வண்ணமயமான
புடவைகளின் ஆலயம்
சம்பா!
Cotton Brocade புடவைகள்
மூங்கில் புடவைகள் / சம்பாவின்
கோர்வை காட்டன் புடவைகள்
Woven சுடிதார் செட்டுகள்
அழகிய கோட்டா புடவைகள்
திருமணம் போன்ற எல்லா சுபகாரியங்களுக்கும்
நாள் முழுவதும் சம்பாவின் பட்டோ என்று
எல்லோருக்கும் வியக்கும் காட்டன் புடவைகளை
அணிந்து கொண்டாடுங்கள்.
10% Discount on 27.09.10 till Diwali
*Price range ₹. 600 upwards
for Sarees and Salwar sets
Timings : 11 a.m to 1 p.m. and 3 p.m. to 8 p.m
Visa, Master & BOB Cards Accepted
10.10.2010 முதல் தீபாவளி வரை
ஞாயிறு கடை உண்டு.
5, 3rd Street, Abiramapuram, Chennai - 600 018. Tel : 2499 6907
SHIVAA

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.

இந்தத் தீபாவளியை ஸ்மார்ட்டாகக் கொண்டாடுங்கள்

ஆரெம்கேவியின் குட்டீஸ்களுக்கான பிரத்தியேக ஃபெஸ்டிவ் ஃபன் கலெக்ஷனில் இருந்து விரும்பியதைத் தேர்ந்தெடுங்கள். இந்தத் தீபாவளியை தூள் கிளப்புங்கள்.

RmKV Kids
Chennai | Coimbatore | Tirunelveli



GREY/RmKV/0027



festive fun collection

• சென்னை • கோவை • திருநெல்வேலி

மேலும் விபரங்களுக்கு "RmKV" என்று டைப் செய்து 53636 என்ற எண்ணுக்கு SMS செய்யுங்கள்.
Toll free no: 1800 425 3105 (இந்தியாவில் மட்டும் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை தொடர்பு கொள்ளவும்)
இமெயில்: garments@rmkv.com ஆன்லைன் பர்ச்சேசுக்கு www.rmkv.com பார்க்கவும்